Registered at the G. P. O. as a News paper
வாரப்பதிப்பு
விலை சதம் 15

# ஈழநாடு
EELA NADU

பட்டுப் பருத்திப்
பிடவைகளுக்குச்
சிறந்த ஸ்தாபனம்
டயருமஸ்
மெயின்வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 369 | தேசியதினசரி National TAMIL DAILY | தபாற்பெட்டி எண்:49
மலர் 4 | யாழ்ப்பாணம் | பிலவ மாசி 28 ஆம் நாள் ஷவ்வால் 4 | (11-3-62) | ஞாயிற்றுக்கிழமை | இதழ் 2

# கள்ளக் கடத்தலில்

## சிலர் மட்டுமே பிடிபடுகின்றனர்

## இலங்கை-தென் இந்திய

## சுங்க அதிகாரிகள் கூட்டு ஆலோசனை

கொழும்பு, சனி

**இந்தியாவுக்கும் இலங்கைக்கும் நடக்கும் கள்ளக்கடத்தலை எதிர்த்துப் போராட, கூட்டுத் திட்டங்களைப் பற்றி இலங்கை-தென்னிந்திய சுங்க அதிகாரிகள் தீவிர ஆலோசனை செய்து வருகின்றார்கள்.**

**தென் இந்தியாவிலிருந்து சுங்கஇலாகா அதிகாரிகள் இலங்கைவந்து இது சம்பந்தமாக எடுக்கப்படவேண்டிய பல நடவடிக்கைகள் பற்றியும் இலங்கைத் தலைமைச் சுங்கஇலாகா அதிகாரிகளுடனும் ஏனையமுக்கிய அதிகாரிகளுடனும் ஆலோசனை செய்து வருகின்றனர்.**

சந்தேகப் பேர்வழிகளைப்பற்றியும் படகுகளைப்பற்றியும் இரகசியபரிபாஷைகளை அடிக்கடி தெரிவித்துக்கொள்ளவும் தகவல்களை இரு அரசாங்கங்களுக்கும் தெரிவித்துக்கொள்வது பற்றியும் ஆலோசனைகள்நடைபெற்றன. தென் இந்தியாவில் கள்ளக்கடத்தல்கள் ஏராளமாக நடைபெறுவதாகவும் சுங்கஅதிகாரிகள் கருதுகிறார்கள்.

### பிரயாணிகள் அசௌகரியம்

இரு நாட்டு சுங்க இலாகா அதிகாரிகளுக்கிடையேயும் நடைபெற்ற மகாநாடொன்றில் இரு நாடுகளுக்கு இடையேயும் பிரயாணம் செய்கையில் சுங்க இலாகாவினால் அதிக அசௌகரியங்களுக்குள்ளாக வேண்டியிருப்பதாக பிரயாணிகள் புகார் செய்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இரு நாடுகளுக்கிடையேயும் நல்லெண்ணத்தையும் நல்லுறவையும் வளர்ப்பதை உத்தேசித்து பிரயாணிகளுக்குஅசௌகரியங்களேற்படாதவாறு பார்த்துக்கொள்ளவேண்டுமென மகாநாட்டில் கருத்து தெரிவிக்கப்பட்டது.

சென்னை சுங்க இலாகாவின் பிரதம கலெக்டர் திரு. டி. ஆர். கோவி சென்னை உயர்தரப் பொலிஸ் அதிகாரிகள் இலங்கை சுங்க இலாகா பிரதம கலெக்டர் திரு. எம். எல். டி. காஸ்பேஸ் ஆகியோர் மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

இருநாட்டிலும் பிரயாணிகள் அதிக கஷ்டத்துக்குள்ளாகாதவாறு கவனித்துக்கொள்ள இருநாட்டிலுள்ள சுங்க இலாகாவினரும் நடவடிக்கை எடுத்துக் கொள்வதென ஒப்புக்கொள்ளப்பட்டதாக திரு. காஸ்பேஸ் தெரிவித்துள்ளார்.

★ ஈழநாடு 11—3—62 ★

## காணிக்கை

காலஞ் சென்ற கலைப்புலவர் அவர்களுக்கு அன்புக் காணிக்கையாக விசேஷ அனுபந்தத்தை இன்று "ஈழநாடு" சமர்ப்பிக்கின்றது.

பல அன்பர்களும் அறிஞர்களும் புலவர் அவர்களுக்குத் தங்கள் பாராட்டுக்களைத் தெரிவித்திருக்கின்றார்கள். இன்னும் குவிந்துள்ள புகழுரைகளைக் கவனிக்கையில் ஒரு பெரிய புத்தகமே வெளியிடலாம் போலுள்ளது. புலவர் அவர்கள் ஈட்டியுள்ள பெரும் புகழுக்கு இது ஓர் அத்தாட்சி.

"ஒரே ஒருவர் இருந்தார் அவரும் மறைந்துவிட்டார்" என்று புலம்புகின்றார், பண்டிதமணி. பொதுவாக இன்று நம் பலரது உணர்ச்சியும் இதுவே. ஆனால் கலைப் புலவர் அவர்களின் பூதஉடல் மறைந்தாலும் அவரது புகழுடல் எப்படி வளர்ந்துள்ளதென்பதற்கு, பல அன்பர்களின் புகழுரைகளே சான்றுபகர்கின்றன.

காலஞ்சென்ற பெரியோர்களைப் பாராட்டிவிட்டு, அத்துடன் அவர்களை மறந்துவிடுவது நம்மில் பலருக்கும் வழக்கமாக இருக்கின்றது. அவ்விதம் மறப்பதால், நஷ்டம் நமக்குத்தான். அப்படி மறந்துவிடாமல், கலைப் புலவரின் நினைப்பைத் தக்கபடி வளர்த்து, நாம் பயன் படுத்திக்கொள்வதே நமக்கும் நல்ல பலனுவதுடன் அவருக்கும் ஆத்ம சாந்தியாகும்.

புலவரவர்கள் பல அரியநூல்களை வெளியிட்டுள்ளார். இன்னும் வெளியாகாமல் இருக்கும் அவரது நூல்கள் பல. அவற்றையும் வெளியிட்டு, அவரது நூல்களால் பயன் பெறவும், அவர்களது மேலான இலட்சியங்கள் நிறைவேறவும் செய்யவேண்டும். இது நமது புனிதமான பணியாகும். அவர் தம் வாழ்விலே சேமித்துவைத்ததெல்லாம் அரிய நூல்களே. இந்தச் செல்வம் எல்லாருக்கும் பயன்படச் செய்வதுடன், கலைப்புலவரின் பெயரால், தகுந்தவர்கள் உயரிய கலைப் பயிற்சிபெற உபகாரச் சம்பளம் கொடுப்பதுடன், பரிசுகளும் வழங்கலாம். ஒரு விசேஷ குழுவை நியமித்து, இதற்கான ஒழுங்குகள் செய்வது, கலைப்புலவருக்கு மேலான காணிக்கையாவதுடன், அவர் பெயரால் இங்கு கலைகள் வளர, நமக்கு நாமே செய்துகொள்ளும் உதவியுமாகும். வாழ்க கலைப் புலவர் நாமம்!

## காதல் இன்றேல் சாதல்!

### மாணவியின் முடிவு

கொழும்பு, சனி

சிங்களப் பள்ளிக்கூடமொன்றைச் சேர்ந்த 17 வயதுள்ள ஒரு மாணவி குலகமா என்னுமிடத்தில் கிணற்றுள்குதித்துத் தற்கொலைசெய்துகொண்டாள்

அவள் எழுதிவைத்துள்ள ஒரு கடிதத்தில் தமது வாலிப நண்பர் தம்மை ஏமாற்றிவிட்டாரென்றும் தன்னைக் கைவிட்டுப் 'போர்னிடெயிலுடன்' கூடிய ஒரு புதுநாகரிகப்பெண் மீது கவனம் திருப்பவிட்டாரென்றும் அதனாலே தமக்கு வாழ்வு பிடிக்கவில்லை என்றும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

## "ஈழநாடு" தமிழ் நாடக விழா

### ஏப்ரல் முடிவில் கொழும்பில் நடத்த ஏற்பாடு

ஈழத்து தமிழ் நாடகத் துறையின் வளர்ச்சிக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள புதிய திட்டம் ஒன்றை நேயர்களுக்கு அறிவிப்பதில் ஈழநாடு மகிழ்ச்சியடைகிறது. இத்திட்டத்தின் மூலம் தமிழ் நாடகத்துறைக்கு சிறந்த நாடகங்கள் சில தேறுவதுடன் நாடக மன்றங்களுக்கு உதவவும், முன்னுக்கு வரத்துடிக்கும் கலைஞர்களுக்குப் புதிய தெம்பும் உற்சாகமும் ஏற்படுத்தவும் வழி ஏற்படும் என நம்புகிறோம்.

இவ்வாண்டு ஏப்ரல் மாத முடிவில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் நாடக விழாவின் மூலம் கொழும்பில் இதுவரை சிறந்த நாடகங்களை தயாரித்துள்ள நாடக மன்றங்களுக்கு உதவியளித்து அவர்களது மிகச் சிறந்த நாடகங்களை மீண்டும் மேடையேற்றச் செய்யவும் அவற்றுள் சிறந்த நாடகம், கலைஞர்கள் ஆகியோரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பரிசில்கள் வழங்கவும் முடிவு செய்துள்ளோம். ஐந்து நாட்கள் நடைபெறும் நாடக விழாவின் பின்னர் பரிசளிப்பு விழா நடைபெறும்.

நாடகவிழாவிற் பங்கெடுக்கும் நாடக மன்றங்களை தேர்ந்தெடுப்பதற்காக பூர்வாங்க தெரிவு ஒன்று நடைபெறும். நாடக மன்றங்களுள் பின் வரும் நிபந்தனைகளுக்குட்பட்டவரிடமிருந்தே இத்தெரிவுக்கான விண்ணப்பங்களும கோரப்படுகின்றன.

(1) 1959-ம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டுச் செயல்பட்டு வரும் நாடக மன்றங்கள் - இவை இதுவரை குறைந்த பட்சம் 3 நாடகங்களாவது கொழும்பில் அரங்கேற்றியிருத்தல் வேண்டும்.

அல்லது (2) 1960-ம் ஆண்டிலும் 1961-ம் ஆண்டிலும் மொத்தம் நான்கு நாடகங்கள் கொழும்பில் அரங்கேற்றியிருத்தல் வேண்டும்

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்ட மன்றங்கள் யாவும் இம்மாதம் 20-ந் திகதிக்கு முன்னர் காரியதரிசி, ஈழநாடு நாடக விழாக் குழு, சரஸ்வதி மண்டபம், லோறன்ஸ் வீதி, கொழும்பு—4 என்னும் விலாசத்திற்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

நாடக மன்றத்தின் பெயர், ஸ்தாபிக்கப்பட்ட திகதி, இதுவரை தயாரிக்கப்பட்ட நாடகங்களின் பெயர்கள் அவைபற்றிய முழு விபரங்கள் அவை அரங்கேற்றப்பட்ட மண்டபம் முதலிய முழு விபரங்களையும் விண்ணப்பக் கடிதங்களில் தருமாறு நாடகமன்றப் பொறுப்பாளர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

கொழும்பு இலக்கிய இரசிகர் குழுவினரின் பூரண ஒத்துழைப்புடன் இந்நாடக விழா நடைபெறுவதால், ஏற்கெனவே அவர்களுடன் தொடர்பேற்படுத்திக்கொண்ட மன்றங்களும் தயவுசெய்து மீண்டும் விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

இந்நாடக விழா பற்றிய விவரங்கள் தொடர்ந்து ஈழநாடு தினப்பதிப்புகளிலும் வாரப்பகுதியிலும் வெளிவரும்.

# உங்கள் இராசி பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர் எழுதுவது

பிலவ ஆண்டு மாசி மாதம் 28-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை (11-3-62) முதல் பங்குனி மாதம் 4-ந் தேதி சனிக்கிழமை (17-3-62) வரை உள்ள பலன்கள்.

இன்று பிலவ ஆண்டு மாசித் திங்கள் 28ந் திகதி ஞாயிற்றுக்கிழமை (11-3-62) பின்னிரவு 5-03 வரை ஷஷ்டி. பின் இரவு 5-32 வரை கார்த்திகை. பின் ரோகிணி. சித்தயோகம். கார்த்திகை விரதம். ஷஷ்டி விரதம். இன்று உபவாசமிருந்து முருகனை வழிபடுக.

### மேட இராசி

அச்சுவினி, பரணி, கார்த் (திகை 1-ம் பாதம் வரை.)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் எதிரிகளை வெற்றி கொளல், செய்காரியவெற்றி, முயற்சிகடுமை, குடும்பசுகம், புதுப்பதவிகள், பொருள்வரவு, பிரயாணசுகமும் வர்த்தக வெற்றியும், கல்வியில் ஊக்கமும் பயிர்த்தொழில் நலமும், பெண்களுக்கு சபகருமமுயற்சிகளும் காணப்படுகின்றன. மார்ச் 12, 15-ந் தேதிகள் சுப தினங்களாகும்.

★

### இடபஇராசி

(கார்த்திகை பின் முக்கால் ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் செய்தொழில் வெற்றி, பிரயாணக்கஷ்டம், நலக்குறைவு, பழிச்சொல் பரவுதல். இனப்பகை, வாக்குக் கஷ்டம், வர்த்தகநன்மை, உத்தியோக நலம், கமத்தொழில் கஷ்டம், வித்தை விருத்தி, பெண்களுக்கு குடும்ப சுகமும் பணவரவும் காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 11, 12, 13, 15 சுப தினங்களாகும்.

★

### மிதுன இராசி

(மிருகசீரிடம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 பாதம் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் தொழில் மந்தம், இனசனப்பகை, பொருளழிவு, தேகாரோக்கியங்குன்றல், புதிய செய்தொழில் வெற்றி, மதிப்பு, வர்த்தகத்தில் நிலை சிறப்பு, உத்தியோகத்தில் திருப்தி நிலை, கமத்தொழிலில் உழைப்புக்கேற்ற ஊதியம், மாணவருக்கு கல்வியில் ஊக்கம், பெண்களுக்கு பிதாவழி உதவி, குடும்ப நன்மைகள் காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 12, 15 சுபதினங்களாகும்.

★

### கடக இராசி

(புனர்பூசம் 4-ம் பாதம், பூசம் ஆயிலியம் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் பெண்வழிஉதவி, வைத்தியச் செலவு. வாக்குக் கலகம், செய்காரியத்தடை,, குடும்பச்சிறப்பு, கடும்உழைப்பு வர்த்தகத்தில் வருவாய், உத்தியோகத்தில் நெருக்கடி, கமத்தொழிலில் நட்டம், மாணவருக்கு கல்விச்சிறப்பும் உடல்நலக்குறைவும், பெண்களுக்கு குடும்பநன்மை காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 11, 12, 15 சுப தினங்களாகும்.

★

### சிங்க இராசி

(மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் நன்முயற்சி, ரோக பயம், பொருள் வரவு. செய்காரியவெற்றி, தொழில் ஊக்கம், பணியாளர் உதவி உத்தியோகத்தில் மேலோர் அதிருப்தி, கமத்தில் தொழிற் தடை, மாணவருக்கு கல்வியில் விருப்பு, பெண்களுக்கு ரோக பயம், குடும்பத்தில் பணவரவு காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 11, 12, 15 சுப தினங்களாகும்.

★

### கன்னி இராசி

(உத்தரம் 2, 3, 4 அத்தம், சித்திரை 1, 2, பாதம்முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் மனத்தைரியம், குடும்பநிர்வாகச்சீர், செய்தொழில் வெற்றி, தரும சிந்தனை, எதிரிகளழிவு, பிரயாசமிகுதி, வர்த்தகநலம், உத்தியோக புதுமுயற்சிகள், கமத்தில் பொருள்வரவு, மாணவருக்கு ரோகபயம், பெண்களுக்கு குடும்ப ஒற்றுமையும் சிறப்பும் காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 11, 12, 16 சுப தினங்களாகும்.

★

### துலா இராசி

(சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதம் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் செய்தொழிலில் மத்திம பலிதம், வண்டி வாகன செலவு, பிரயாணங்களும் செலவுகளும், வர்த்தகத்தில் இலாபம், பணவரவு. உத்தியோகத்தில் சஞ்சலகுணம், கமத்தொழிலில் தாமதமும் ஏமாற்றமும், மாணவருக்கு வித்தை மேன்மைக்கான முயற்சிகள், பெண்களுக்கு ரோக பயம் காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 11, 12, 15 சுபதினங்களாகும்.

★

### விருச்சிக இராசி

(விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை முடிய)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் அதிகாரிகளது உதவி, பெரியோர் நேசம், இனசனத்திற்காக அலைச்சல், பணச்செலவு, தொழில்சீர், பணவரவு, வர்த்தகநலம், உத்தியோகத்தருக்கு வெளிப்பிரயாணம், கடும் உழைப்பு, கமத்தொழிலாளருக்கு தொழிற்சீர், மாணவருக்கு பரீட்சைகளில் சித்தி, பெண்களுக்கு குடும்பச் சிறப்பு, நன்மை காணப்படுகின்றன. மார்ச் 12, 14, 15, 17 சுப தினங்களாகும்.

★

### தனு இராசி

(மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம் முடிய)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் பணவிவகாரவசதி, சமூகத்தில் மதிப்பு, நிலைமாற்றம், பிரயாணநன்மைகள், செய்காரியதடை, பெண்களால் நன்மை, வர்த்தகத்தில் சிறப்பு, உத்தியோகத்தில் கடும் உழைப்பு, கமத்தில் தொழிற் சிறப்பு, மாணவருக்கு கல்விச் சிறப்பு, பெண்களுக்கு மாதாவழி உதவிகளும் குடும்பச்சிறப்புக்களும் காணப்படுகின்றன மார்ச் 11, 12, 14, 17 சுபதினங்களாகும்.

★

### மகர இராசி

(உத்தராடம் 2, 3, 4 திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம் முடிய)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் கடும் உழைப்பு, குடும்பஒற்றுமை, பெண்வழி உதவி, இனசன உதவி, தொழில் வகையில் சாதகநிலை, நல்லோர் நட்பு, வர்த்தக உயர்ச்சி, பணவரவு, கமத்தொழில் தடை, பணநட்டம், உத்தியோகத்தில் பொறுமையின்மையால் கஷ்டம், மாணவருக்கு கல்விச்சிறப்பு, பெண்களுக்கு விவாகப்பேறுகளுக்கான ஏற்பாடுகள், குடும்பச் சிறப்பு. காணப்படுகின்றன இவர்களுக்கு மார்ச் 11, 12, 15 சுபதினங்களாகும்.

★

### கும்ப இராசி

(அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் பாதம் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் காரியத்தடை குடும்பச்சச்சரவு, கடும் உழைப்பு, நிலைமாற்றம், பிதா மாதா உதவி, வர்த்தகத்தில் செலவு அதிகரிப்பு, முயற்சித் தடை, உத்தியோகத்தில் வெறுப்பு, கமத்தொழிலில் தாயாதிகளால் நட்டம் ஏற்படல், மாணவருக்கு பரீட்சைப் பேறு, பெண்களுக்கு தனதானிய விருத்தியும் குடும்பச் சிறப்பும் காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 11, 12, 14 சுபதினங்களாகும்.

★

### மீன இராசி

(பூரட்டாதி 4-ம்பாதம், உத்தரட்டாதி, ரேவதி முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் முயற்சியால் செய்தொழில் சிறப்பு, பெரியோர்-அதிகாரிகள் மதிப்பு, நண்பரால் உதவி, அறிவு விருத்தி, இடையிடை பிரயாணச்செலவு, வர்த்தகத்தில் பொருள்வரவு, உத்தியோகத்தில் அவசரப்படாது பொறுமையாக இருத்தல், மாணவருக்கு பணச் செலவும் கஷ்டமும், கமத்தொழிலில்செலவு அதிகரிப்பு, பெண்களுக்கு குடும்பச்செலவு, பணமுடை காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 12, 13, 15 சுபதினங்களாகும்.

# எல்லாம் அன்பின் விளக்கம்

## உலகுக்குத் தமிழகத்தின் போதனை

— பண்டிதர் க. இராசையா —

மேனாட்டுத் தத்துவ சாத்திரங்களெல்லாம் மனிதன் பரிணாமத்தின் மூலம் ஈவஸ்ர நிலை எய்துகிறான், என்று கூறுகின்றன. அவை அங்ஙனம் கூற, சைவ சமயத்தத்துவ சாத்திரங்கள் யாவும் இறைவனின் அம்சமே மனிதன், அவன் இன்று கீழ் நிலையடைந்துள்ளான்; மீண்டும் சுயநிலை அடையப் பெறுவான் எனக் கூறுகின்றன. சைவசமயத் தத்துவ சாத்திரங்களைத் தமிழ்நாட்டின் எல்லைக்குள் அல்லது உலகின் எல்லைக்குள் அடக்கிவிட முடியாது. அவை யாவும் ஒரே ஒரு பரம்பொருளைப்பற்றியே கூறுகின்றன "நீதான் அது அல்லது அது தான் நீ" என்கிறது அத்தத்துவ சாத்திரங்கள். அச் சாத்திரங்களிலும் அவற்றின் பண்பாட்டிலும் நன்கு ஊறியவர்களுக்கே இது விளங்கும் "கடவுளின் சுருக்கமே மனிதன், மனிதனின் விரிவே கடவுள்" என்பது சைவ சமயத்தத்துவ சாத்திரம். மக்கள் எல்லோரும் சமம் என்னும் நிலையை எண்ணுவதற்கோ அல்லது அடைதற்கோ ஐந்து படிகள் உண்டு. இவ்வைந்து படிகளையும் கடந்து ஐந்தாவது படியை மனிதன் அடைந்தால் மட்டுமே சமத்துவ உணர்ச்சி ஏற்படும். இந்த ஐந்து படிகளையும் சைவசமய சாத்திரங்கள் ஐந்து கோசங்கள் என்று கூறுகின்றன. (அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம்) ஐந்தாவது கோசமாகிய ஆநந்தமயகோசத்தை மனிதன் எய்தியதும் பிரம்மநிட்டை அடைகின்றான். பிரம்ம நிட்டையில் தான் உண்மையான சமத்துவம் நிலவும். இந் நிட்டையில் உள்ளவனுக்கு மக்கள் அனைவரும் இறைவனின்விளக்கமாக அம்சமாகத் தோன்றுவார்கள். இந்நிலையில் பேதத்திற்கு இடமில்லை. எல்லாம் ஒரே ஆனந்தமயம். எல்லாம் அன்பின் விளக்கம். மேல் நாட்டுச் சிந்தனையாளர் சிலர், எல்லோரும் சமம் என்னும் சமத்துவ வேதாந்தம் போதிக்கின்றனர். ஆனால் இவர்கள் போதிக்கும் சமத்துவத்தை அடைவதற்கு ஐந்தாவது படியாகிய ஆனந்தமயகோசத்தை அடையவேண்டும். மேலைத்தேய சாத்திரங்களின் போக்கு புறவுலகை நாடிச் செல்கின்றது. அவைவிஞ்ஞான ஆராய்ச்சியில் மிக முன்னேற்றம் அடைந்துள்ளன. சைவசமயதத்துவ சாத்திரம் அன்பையே ஆதாரமாகக் கொண்டது. எதிரியையும் நேசிக்கும் தன்மையது. சகடு போற்சுழலும் வாழ்க்கையின் இன்பதுன்பங்களுக்கு அப்பாற்பட்டது. அதீத நிலையை அடைவதற்கு அது வழி காட்டுகின்றது. அன்பு, அகிம்சை, சத்தியம் ஆகியவற்றையே அது உலகத்துக்குப் போதிக்கின்றது. மேலைநாடுகள் விஞ்ஞானத்தில் முன்னேறியுள்ளன. தமிழ்நாடு ஆத்மீகத்துறையில் முன்னேறியுள்ளது. விஞ்ஞான ஆராய்ச்சி தமிழ்மக்களுக்குப் புதிய தொன்றல்ல. ஆனால் விஞ்ஞான சாத்திரங்களைத் தமிழ்நாடு பேணிப் பாதுகாக்கவில்லை. விஞ்ஞான சாத்திரங்கள் பக்குவம் அற்றவர்கள் கையில் சிக்கினால் மனிதகுலத்துக்கே கேடுவிளைவிக்கும் என்ற காரணத்தால் அந்த விஞ்ஞான சாத்திரங்களை அழித்து விட்டார்கள். இராவணன் புட்பக விமானத்தில் பறந்தான். அனுமான் கடலைத் தாண்டினான் சீவகனின் அன்னையாகிய விசயை மயிலூர்தியில் பறந்து சென்றாள். சீவகன் ஆகாய ஊர்திமூலம் அகிலவுலகங்களையும் சுற்றிவந்தான் இவை யாவும் தமிழ் மக்களின் ஆதிகால விஞ்ஞான வளர்ச்சியைக் குறிப்பனவாகும். பாரதத்தில் உள்ள யுத்த பருவத்தில் கூறப்படும் யுத்தக்கருவிகள் யாவும் அக்கால விஞ்ஞானத்தின் நிலையை நன்கு புலப்படுத்துகின்றன. ஆனால் தமிழ்நாடு விஞ்ஞானத்தில் நாட்டம் செலுத்தாது ஆத்மீகத் துறையில் நாட்டம் செலுத்தி அதில் முன்னேறிச் செல்கின்றது. உலகநாடுகளுக்கு இன்று அது போதிக்கும் தத்துவமும் அதுவேயாகும்.


## ஈழநாடு

தேசிய தினசரி

### சந்தா விபரம்

ஈழநாடு தினசரி (பக்கங்கள் 8) பிரதி சதம் 10
ஈழநாடு வாரப்பதிப்பு (பக்கங்கள் 12) பிரதி சதம் 15

விற்பனையாளர் மூலம்.

முற்பணம் கட்டுபவர்களுக்கு தபால் அல்லது ஆள்மூலம் வசதிபோல். (தினப்பதிப்பு)

| | |
|---|---|
| ஒரு வருடம்: | ரூபா 33-00 |
| 6 மாதம்: | ரூபா 17-00 |
| 3 மாதம்: | ரூபா 9-00 |

மூன்று மாதத்துக்குக் குறைந்த சந்தாதாரர்களாகச் சேர விரும்புவோர் சமீபத்திலுள்ள ஏஜண்டுகளிடம் சந்தாவைச் செலுத்தும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

வாரப் பதிப்பு உட்பட

| | |
|---|---|
| ஒரு வருடத்துக்கு | ரூபா 40-00 |
| 6 மாதத்துக்கு | ரூபா 21-00 |
| 3 மாதத்துக்கு | ரூபா 11-00 |


## பிரிட்டிஷ் அணுவிசை நீர்மூழ்கிக் கப்பல்

பாரோ-இன்பர்னஸ் கப்பல் நிர்மாணத் தளத்தில வாலியன்ட் என்ற அணுவிசை நீர்மூழ்கிக்கப்பலுக்கு அடித்தளம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டது. இது பிரிட்டனில் கட்டப்படும் இரண்டாவது அணுவிசை நீர்மூழ்கிக்கப்பல் பாரோ-இன்பர்னஸ் தளத்தில் கட்டப்பட்ட முதல் அணுவிசை நீர்மூழ்கிக்கப்பலின் பெயர் 'டிரெட்நாட்' இதில் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட அணு உலையைப் பொருத்தினார்கள்.

வாலியன்டைச் கட்டுவதற்குத் தேவையான சாதனங்கள் அனைத்தும் பிரிட்டனிலேயே தயாரிக்கப்படும். இதைக்கட்ட சுமார் 20 000 000 பவுண்கள் ஆகலாம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

சிலம்பின் சிறப்பு: 4

# வாழ்க்கையும் நோக்கமும்

.... வித்துவான் பொன். முத்துக்குமாரன் ....

**துன்பத்தில் இன்பம் காணுதலும், வேற்றுமையில் ஒற்றுமை காணுதலும் உயர்ந்தவர்க்கே இயலும். அதுபோல, வேறு வேறு திசைநோக்கிய இருவரது இல்வாழ்வில் வியக்கத்தக்க நற்பெரும் பண்புகளை நாம் காணத் தக்கவாறு இளங்கோ தமது காப்பியத்தை அமைத்துத்தந்துள்ளார்.**

சங்க காலத்திற் செய்யப்பட்ட அகப்பொருள் நூல்களில் பேசப்படும் தலைவனும் தலைவியும் பிறப்பு, குடிமை முதலியவற்றால் ஒத்ததன்மையுடையவர்களே. பிற்காலத்திற் செய்யப்பட்ட பெருங் காப்பியங்களில் காணப்படும் கதாநாயகன், கதாநாயகி ஆகியவர்களும் உள்ளப்பாங்கு முதலியவற்றால் ஒத்த இயல்பினரே. உதாரணமாக, இரமபிரான் எத்தகைய உயர்ந்த உள்ளப்பாங்கு உடையவரோ சீதாதேவியும் அத்தகைய அரும் பண்பு அமையப் பெற்றவரே யாவர். அவ்வாறே அர்ச்சுனன்-திரௌபதி, அரிச்சந்திரன்-சந்திரமதி, நளன்-தமயந்தி ஆகியோரும் ஒத்த பண்பினரே. அவர் அவ்வாறாக, சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகளால் சித்திரிக்கப்பட்ட கோவலனும் கண்ணகியும் பிறப்பு, குடிமை, அழகு, அறிவு முதலிய பலவற்றாலும் ஒப்புமையுடையோராய் வாழ்க்கையின் நோக்கம் பற்றிய தன்மையில் இருவர் தம் உள்ளங்களும் வேற்றுமையுடையனவாய்க் காணப்படுகின்றன.

## இல்லறம்

மனிதப் பிறப்பும் விலங்குப் பிறப்பும் ஒன்றுக்கொன்று நெருங்கிய உறவுடையன. மக்களில் மாக்களும் உள்ளனர்; மாக்களில் மக்கட் பண்பும் அரிதாய்க் காணப்படுகின்றது. ஐம்புல நுகர்ச்சியோடு சுயநலமும் உடையது விலங்குப் பிறப்பு. ஐம்புலத்திற்கும் அப்பாலாய்ப் பகுத்தறிவும் அதனால் பிறர் நலம் பேணுதலும் உடையதே மக்கள் பிறப்பு. ஐம்புலனையும் பகுத்தறிவையும் உடைய ஒருவன் சுயநலத்தையே பேணி நடப்பனேல் அவனது வாழ்க்கை ஏனைய உயிரினங்களின வாழ்க்கையை ஒத்ததேயாகும். உயர்ந்த பிறப்பெனப்படும் மனிதப்பிறவியை எடுத்த ஒவ்வொருவனும் மனைவியோடும் மக்களோடும் கூடி இல்வாழ்க்கை நடத்தாது இல்லறம் நடத்தலே முறைமை. வள்ளுவர் பெருமான் இல்வாழ்க்கையியல் என்னது இல்லறவியல் என்று பெயர் கொடுத்து, அதன் முதற் கண் அமைந்த அதிகாரமாக இல்வாழ்க்கையைக் கூறி, அவ்வில்வாழ்க்கையும் இயல்புடைய மூவர் துறந்தார், துவ்வாதவர், இறந்தார், தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்று கூறப்பட்ட எல்லார்க்கும் துணையாய் நின்று அறமாதல் வேண்டுமென வற்புறுத்தியுள்ளார். உருவாலும் உணர்வாலும் பலர் மக்களேயாயினும் வாழ்க்கையும் அதன் நோக்கமும் என்ற இருதன்மைகளால் அவர்கள் வேறுபடுகின்றனர். கோவலனும் கண்ணகியும் என்னும் இருவரும் உரு, உணர்வு முதலியவற்றால் ஒருவரை ஒருவர் ஒத்தனராயினும் வாழ்க்கையில் இருவரும் வேறு வேறு திசையில் செல்பவரே. வாழ்க்கையை இன்பப் பேற்றிற்காக நடத்தினன் கோவலன். வாழ்க்கையை அறமாக்க முயன்றாள் கண்ணகி இல்வாழ்க்கையை இன்பம் நிறைந்ததாகச் செய்தற்கு மனைவியே வேண்டும் என்பதில்லை. ஆயின் இல்வாழ்க்கையை இல்லறமாக்குதற்குக் கணவனுக்கு மனைவியும் மனைவிக்குக் கணவனும் துணையாதல் இன்றியமையாதது.

## மாதவி உறவு

அழகினையும், அழகுக் கலையினையும் சுவைக்கும் திறன் கோவலனிடத்தில் உண்டு. ஐம்புலன்களாலும், அறிவாலும் அழகுள்ள பொருள்களை நாடி அவற்றின் சிறப்பைத் தெரிந்து இன்பம் கொள்வதே கோவலனின் இளமைக் கால இலட்சியமாயிருந்தது. குணங்களாற் சிறந்த கண்ணகியை வாழ்க்கைத் துணையாகப் பெற்றும் கோவலன் தனக்கினிய துணையைப் பெறாதவன்போலானன். இல்லிலிருந்து இனிய மனையாளோடு நல்லறங்கள் பலவும் செய்ய எண்ணுமல் இன்பத்தை நாடித் திரிந்தான். கல்வி, அறிவு, செல்வம், இளமை ஆகிய எல்லாம் ஒருங்கமைந்த கோவலனின் இலட்சியம் நிறைவேற ஏற்றகாலம் வந்தது. அழகு, கலைத்திறன், அறிவு ஆகியன முற்றும் நிரம்பப்பெற்ற மாதவி என்னும் இளம் பருவத்துக் கணிகையொருத்தி அந்நாளிற்றான் நடனம் அரங்கேற்றிச் சோழ மன்னனது பரிசும் பெற்றாள். மன்னன் அவளுக்குப் பரிசாக வழங்கிய மாலையை விலைகொடுத்து வாங்கியதன் மூலம் கோவலன் மாதவியின் உறவையும் வாங்கிவிட்டான். கோவலன் வாழ்வில் அவன் கருதியது கைகூடப்பெற்றமையால் ஓர் எழுச்சியும், கண்ணகி வாழ்வில் அவள் கருதியது கைகூடாமையால் ஏமாற்றமும் ஏற்படலாயின. கோவலன் கண்ணகியிடத்தில் அழகைமட்டும் கண்டான். அழகோடு கலைச் சிறப்பும் ஒருங்கு அளிக்கத்தக்கவளாய் விளங்கிய மாதவியின் உறவால் அவனது இன்ப அநுபவம் வளர்பிறை போல் நாளும் சிறந்து மிகுந்தது.

## இளங்கோ ஆற்றல்

சிலம்பில் அமைந்த கதாநாயகனும் கதாநாயகியும் இவ்வாறு முரண்பட்ட இலட்சிய நோக்குடன் வாழ்க்கையைத் தொடங்குகின்றனர். கதாபாத்திரங்களை இவ்வாறு படைத்துக் காப்பியத்தை உருவாக்குவதன்மூலம் இளங்கோவடிகள் பிறரிடத்துக் காணப்படாத தனிச் சிறப்புடன் விளங்குகின்றார். கதா நாயகர்களாகிய கோவலனும் கண்ணகியும் பிறப்பு முதலிய பல திறத்திலும் ஒருவர்க்கொருவர் ஏற்புடையவராகக் கூறப்படுதலையும் உள்ளத்தின் ஆழத்தில் அமைந்த பண்பின் தன்மை

## இலக்கியச் சோலை

யால் ஒருவர்க்கொருவர் மாறுபட்ட திசையில் செல்பவராகக் கூறப்படுதலையும் நோக்கும் போது அடிகளாரின் நுண்ணிய ஆற்றல் பாராட்டத்தக்கதாயுள்ளது. கோவலனைப்பற்றி அடிகளார் நமக்கு அறிமுகப் படுத்தும்போது,

"மண்தேய்த்த புகழினன்
மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த மொழியினர்
ஆயத்துப் பாராட்டிக்
கண்டேத்தும் செவ்வேள்"

என்று இசை போக்கிக் காதலாற்
கொண்டேத்தும் கிழமையான்"

எனக் கூறுவதிலிருந்து கோவலன் சாதாரண ஆண் மக்கள் எல்லாரினும் மிகமேம்பட்டவன் என்பதை உணர்த்தினர். அவ்வாறே கண்ணகியை

"போதிலார் திருவினள்
புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறம்
இவள் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய
பெருங்குணத்துக்
காதலாள்"

எனக்கூறி அவளது ஒப்புயர்வற்ற பண்புகளை அறிவுறுத்தினர். இவ்வாறு புறத்தோற்றத்திலும் போற்றத்தக்க செயல்களிலும் அவ்விருவரது ஒத்த தன்மைகளை உரைத்து அவர்களது உள்ளத்தின் ஆழத்தில் அமைந்த மாறுபட்ட தன்மைகளையும் வாழ்க்கை நோக்கம் பற்றிய வேறுபட்ட பண்புகளையும் அவர்களது வாழ்க்கைக் கூறுபாடுகளை வகுத்துக் கூறுவதன் மூலம் உய்த்துணர வைத்துள்ளார். துன்பத்தில் இன்பம் காணுதலும், வேற்றுமையில் ஒற்றுமைகாணுதலும் உயர்ந்தவர்க்கே இயலும். அதுபோல வேறு வேறு திசைநோக்கிய இருவரது இல்வாழ்வில் வியக்கத்தக்க நற்பெரும்பண்புகளை நாம் காணத்தக்கவாறு இளங்கோ தமது காப்பியத்தை அமைத்துத் தந்துள்ளார். எனவே, ஏனைய காப்பியங்களிலுள்ள கதாபாத்திரங்களில் காணப்படும் இலட்சியப் பண்புகளைக் காட்டிலும் சிலம்பில் கூறப்பட்ட கோவலனதும் கண்ணகியதும் வாழ்வில் காணும் சீரிய பண்புகள் ஒருவகையில் வேறுபட்டும் உயர்ந்தும் உள்ளன.

---

## மலிவான விலையில் பிரிட்டிஷ் நூல்கள்

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மலிவுநூல் பிரசுரத்திட்டத்தின்கீழ் பல்கலைக்கழகப் பாடப் புத்தகங்களைத் தவிர வேறு சில புத்தகங்களையும் வெளியிட உத்தேசித்திருப்பதாகவும் இவற்றில் ஒன்பதுபுத்தகங்கள் அண்மையில் விற்பனைக்கு வருமெனக் காமன்ஸ் சபையில் தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மத்திய தகவல்நிலையம் பிரிட்டனிலுள்ள பிரபல பிரசுராலயங்களின் கூட்டுறவுடன் மலிவுநூல்களை, சராசரியாக முதல் பதிப்பின் விலையின் மூன்றிலொரு பங்கு விலைமதிப்பில் வெளியிடத்திட்டமிட்டிருக்கிறது. பின்வரும் நாடுகளுக்கு மலிவுநூல்கள் அனுப்பப்படும். இந்தியா, இலங்கை, ஆப்கானிஸ்தான் புருணி, பர்மா, ஹாங்காங், இந்தோனிசியா, மலேயா, நேபாளம், வடபோர்ணியோ, பாகிஸ்தான், ஸராவக், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம்.

---

# குமிழ் எழுத்தில் நூல்கள்

## பிரிட்டனில் தேசியக் கழகத்தின் சேவை

பிரிட்டனில் மேரி வில்ஸன் என்பவர் சிறியதோர் எம்பாஸிங் மிஷினின் உதவியால் கெட்டியான மணிலா தாளில் பிரெய்லி எழுத்துக்களைப் பதித்து புத்தகங்களைத் தயாரிக்கிறார். அதுதான் அவருடைய பொழுது போக்கு. சென்ற பல ஆண்டுகளாக இந்தப் பணியிலீடுபட்டிருக்கும் அவர், இப்போது பதினன்காவது புத்தகத்தை தயாரித்துக்கொண்டிருக்கிறார். "எனக்கு ஓய்வுநேரம் அதிகமாக இருக்கிறது. ஒருபார்வையற்ற பெண் அல்லது பிள்ளை நன்றாகப் படித்து முன்னுக்கு வர உதவிசெய்யலாம் என்ற ஆசையில் இந்தப் பணியிலீடுபட்டிருக்கிறேன்" என்றார் அவர்.

பிரிட்டனில் விழியற்றோர்க்கு உயர்நிலைப்பள்ளியிலிருந்து கல்லூரி வரையில் படித்து பட்டம் பெறுவதற்கான வசதிகளும் வாய்ப்பும் உண்டு. விழியிழந்தோர் சாதாரண அச்சுப்புத்தகங்களைப் படிக்கமுடியாது. அவர்களுக்காக பிரெய்லி எழுத்துக்களில் புத்தகங்கள் அச்சிடப்படுகிறது. பிரெய்லி எழுத்துக்கள், புள்ளிகளாலானவை. காகிதப்பரப்பில் எழும்பிநிற்கும் இவற்றை விழியற்றோர் கையால் தடவி உணர்ந்து படிப்பார்கள்.

### பிரெய்லி முறை

பிரிட்டனிலுள்ள பார்வையிழந்தோர் தேசியக்கழகம் (ராயல் நேஷனல் இன்ஸ்டியூட் பார் தி பிளைண்ட்) ஆண்டு ஒன்றுக்கு 7000,000 பிரதிகள் புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் - பிரெய்லி முறையில்-அச்சிட்டு வழங்குகிறது. காமன்வெல்த்திலுள்ள மிகப்பெரிய பிரெய்லி வெளியிட்டு நிலையம் இது.

"பிரெய்லிமுறையில் புத்தகங்களை அச்சிட செலவு அதிகமாகிறது. பொதுமக்களுடைய ஆதரவில் பணியாற்றும் அந்தகர் நல தேசியக் கழகத்திற்கு நிதிவசதி அதிகமில்லை. இரண்டொரு மாணவர்களுக்குத் தேவையான பாடப்புத்தகங்களைத் தயாரிப்பது எளிதாக இல்லை" என்றார் மேரிவில்சன்.

ஆனல் கழகம் எப்படி இவ்வளவு அச்சிட்டு வழங்குகிறது என்றால் "நானும் என்னைப் போல ஓய்வுநேரம்அதிகமுள்ள 250 அன்பர்களும் இந்த மாபெரும் பணிகருத் துணை செய்கிறோம். பிரெய்லி எழுத்துக்களை நல்ல கெட்டியான தாளில் பதிப்பிக்கவேண்டும். அச்சு எழுத்தை பிரெய்லி எழுத்தாக மாற்றும் போது பக்கங்கள் அதிகரிக்கின்றன. சாதாரண அச்சிலுள்ள ஒரு புத்தகம் பிரெய்லி எழுத்துக்களில் தயாரிக்கும்போது பல புத்தகங்களாகிவிடும். இந்தப் பணியில் ஈடுபட்டுள்ள நாங்கள் வேலையைப் பகிர்ந்து கொண்டு லண்டனிலுள்ள அந்தகர் நல தேசியக் கழகத்தின் நூலகத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் புத்தகங்களை வழங்குகிறோம்."

தேசியக்கழகத்தின் நூலகத்தில் ஏறக்குறைய 26,000 புத்தகங்கள் உண்டு இவை ஆங்கிலத்திலும் வேறு மொழிகளிலும் உள்; பல்வேறு பொருள்களைப் பற்றியவை. படித்து முன்னேற விரும்பும் விழியற்ற பையனுக்கு உதவுவதே எங்கடைய பணி. ஒரு பையனுக்குத் தேவையான பாடப் புத்தகமோ, வேறு புத்தகமோ நூலகத்தில் இல்லாவிட்டால் அவனுக்காக அதை நாங்கள் தயாரித்து விடுவோம். அந்தப் பையன் தன்னுடையபடிப்புமுடிந்ததும் அதைஎங்களிடம் திருப்பிக்கொடுத்துவிடுவான் வேறு ஒரு பையனுக்குத் தேவைப்படும் வரையில் அது நூலகத்தில் இருக்கும். நாங்கள் தயாரிக்கும் புத்தகங்களை உலகின் பல பகுதிகளிலுள்ள மாணவர்களுக்கு-அவர்கள் எந்த இன, நிற, சமயத்தைச் சேர்ந்தவராயினும் – அனுப்பிஉதவுகிறோம்" என்றார் மிஸ வில்ஸன்.

### நற்பணி

"இந்தத் தொழிலைக் கற்றுக் கொள்வது ஆரம்பத்தில் கடினமாகத்தான் இருக்கும். ஆனல் இது போற்றுதற்குரிய பணி. அந்தகர் நல தேசியக் கழகத்திற்கு பல தொண்டர்கள் தேவை. ஆனல் தொண்டாற்ற முன்வருவோரில் பலர் அவசியத்திற்கேற்றபடி சிறந்த தகுதி பெறுவதில்லை. கழகத் தொண்டர்களாகப் பணியாற்றுவதற்கு இரண்டு தகுதிகள் அவசியம். முதலில் ஏதாவது ஒரு துறையில் அறிவு இருப்பது அவசியம். இரண்டாவது பிரெய்லி எழுத்துக்களின் அமைப்புமுறையைத் தெரிந்து கொண்டு அவற்றை விரைவில் பதிப்பிககப் பயிற்சிவேண்டும். நான் மொழியியலில் சிறபபுப் பயிற்சியுள்ளவள் பிரெய்லி புத்தகங்களைத் தயாரிக்கவும் தெரியும்" என்றார் அவர்.

பிரெய்லி எழுத்துக்களைப் பயிலவும் தேசியக்கழகம் விரும்பும் முறையில் வேகமகவும் பிழையில்லாமலும் அவற்றைப் பதிக்கவும் ஓராண்டு காலம் பயிற்சி பெறுவது அவசியம். சிலர் பயிற்சியில் தேருமலேயே விலகிவிடுகிறார்கள்.

பிரெய்லி முறையில் சித்திரங்களை வரையும துறையில் வழிகாட்டியவர் திரு. டைவர் எண்பது வயது கடந்த அந்த நல்லவர் இன்றுகூட, பிரெய்லி முறையில் சித்திரங்களை விளக்கித் தருகிறார்.

---

## ஏராளம் பேர்

... ச. வே. ப. ..

இடையில் கந்தை நடையில் துன்பம்
உடலில் பலவீனம்
உடையன் ஒருவன் நெடுமிவ் வழியில்
அடையும் இன்னல்காண்!

சுற்றி அவனின் வற்றல் உடலைப்
பற்றிச் சிறுவர்கள்
எற்ற உறுதி அற்றே வீழ்ந்து
உற்றான் மிகுதுன்பம்!

எழுவன் எற்ற விழுவன் மீண்டும்
அழுவன்! இதுபோலத்
தழுவித் துன்பம் உடலின் மெலிவால்
அழிவர் சிலபேரே!

விலையில் ஆன்ம வலிமைக் குறைவால்,
மலியும் உணர்வுகள்
பலவும் உந்த நலிகின் றவரோ
உலகில் ஏராளம்!

# உலக மேடை

டி. எம். எம்.

## ஜெனிவா மகாநாடு

அடுத்தவாரம் ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் ஆயுதப் பரிகரண மகாநாடு வெளிநாட்டு மந்திரிகள் அந்தஸ்திலேயே நடைபெறும். இதற்கு முன் நடைபெற்ற எந்த ஆயுதப் பரிகரண மகாநாடும் பெருந்தலைவர்களைக் கொண்ட உச்சி மகாநாடாக நடைபெற்றதில்லையாதலால், இப்போது இவ் விஷயத்தில் நமக்கு எவ்வித ஆச்சரியமும் ஏற்படவில்லை. மகாநாட்டை இன்னும் உயர்தர அந்தஸ்தில் நடத்த வேண்டுமென குருஷ்சேவ் பல முறை வற்புறுத்திவந்தபோது, தனது வற்புறுத்தலை அவர் கைவிட்டுவிடுவார் என்று நாம் இப்பத்தியில் கூறியிருந்தோம். ரஷ்யப்பிரதமர் சில விஷயங்களைக் கையாண்ட முறைகளை அவதானித்து வந்ததின் மூலம் இவ்வாறு கணிப்பதில் நமக்குச் சிரமம் எதுவும் இருக்கவில்லை. குருஷ்சேவ் தன்நிபந்தனையைக் கைவிட்டது நாம் எதிர்பார்த்த முடிவே ஆகும்.

மகாநாடு கூடவிருக்கிறது என்றால் எல்லாம் வெற்றி பெற்றுவிட்டது என்று அர்த்தமல்ல. ஆயுதப் பரிகரண பேச்சு வார்த்தைகள் முந்நூறு தடவைகளுக்கு மேல் முறிந்துபோய் இருக்கிறதென்ற உண்மையை உணர்பவர்கள், பெரிய நம்பிக்கை எதுவும் கொள்ளமாட்டார்கள். மகாநாடு கூடுவதற்கு வழியில் ஏற்பட்டிருந்த முட்டுக்கட்டைகள் நீக்கப்பட்டிருக்கின்றன. மகாநாடு நிச்சயம் ஆரம்பமாகப்போகிறது என்ற அளவில் தான் இதை ஒரு முன்னேற்றமாகக் கருதலாமே தவிர, கூட்டமுடிவில் பூரண ஆயுதப் பரிகரணம் ஏற்பட்டுவிடும் எனச் சொல்வது அல்லது எதிர்பார்ப்பது தவறாகும்.

மேகத்தில் மறைந்து மறைந்து வெளிவரும் நிலவைத் தான் ஆயுதப்பரிகரணம் நமக்கு நினைவுறுத்துகிறது. மகாநாட்டைக் கூட்ட வல்லரசுகள் இணங்கியிருப்பது இருளிலிருந்து வெளிப்பட்ட நிலவொளியைப் போன்றதாகும். ஆனால் ஜெனிவா மகாநாடு முடிவடைவதற்குள் எத்தனையோ முட்டுக் கட்டைகள் அங்கு ஏற்படவிருக்கின்றன. பல மாதங்களுக்கு, தொடர்ந்தாற்போல் இந்த மகாநாடு நடைபெறுமானால் அது ஆச்சரியமில்லை. வெளிநாட்டுமந்திரிகள் நீண்டகாலம் நிரந்தரமாக ஜெனிவாவில் தங்கினாலும் அது ஆச்சரியமில்லை.

மகாநாடு ஆரம்பமாவதற்கு முன் அமெரிக்க, பிரிட்டிஷ், வெளிநாட்டு மந்திரிகளுடன் ரஷ்ய வெளிநாட்டுமந்திரி திரு. குரோமிகோ பேச்சுவார்த்தைகள் நடத்த இணங்கியுள்ளார். மாஸ்கோவில் அமெரிக்கத் தூதர் தாம்ஸனுக்கும் சோவியத் வெளிநாட்டு மந்திரிக்குமிடையே நடைபெற்ற சம்பாஷணைகளின் அடிப்படை ஒற்றுமை ஏற்படாதது மகாநாட்டு வட்டாரங்களுக்கு ஒருஏமாற்றமாய் இருக்கலாம். இதேசமயம் பிரான்ஸ் இந்த மகாநாட்டில் கலந்துகொள்ள மறுத்திருப்பது மற்ருெரு ஏமாற்றமாயும் இருக்கலாம். இந்த மகாநாட்டில் உருப்படியான பலன் எதுவும் ஏற்படும் என ஜெனரல் டிகால் நம்பாததே பிரெஞ்சுப் பிரதிநிதிகள் ஜெனிவா போகாததற்குக் காரணம் எனச் சொல்லப்படுகிறது. அமெரிக்கா நிலத்திற்கு மேல் அணுசோதனை நடத்த திட்டமிட்டிருப்பதும், அப்படியானால் புதுவகையான அணுக்குண்டுகளைச் சோதிக்கப் போவதாய் ரஷ்யா அறிவித்திருப்பதும் மகாநாட்டின் ஆரம்பத்திற்கு நல்ல சகுனமாயில்லை. இந்தச் சூழ்நிலைகளை வைத்துக்கொண்டு கவனிக்கும் போது ஜெனிவாபேச்சுக்களில் பல முட்டுக் கட்டைகள் ஏற்படக்கூடும் என்றும், நீண்ட காலம் பேச்சுவார்த்தைகள் நடக்குமென்றும் கருதுவது சரியாய் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

நடுநிலைமை நாடுகள், மகாநாட்டில் கலந்துகொள்ளவிருப்பது ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். வல்லரசுகளை ஒரு இணக்கத்திற்குக் கொண்டு வரும் தீவிர முயற்சியை நடுநிலைமை நாடுகள் மேற்கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. முக்கியமாக திரைமறைவு நடவடிக்கைகள் ஜெனிவாவில் வெகுதீவிரமாய் இருக்கும். ஆனால் விஷயம் பெரியது. ஆயுதப்பரிகரணம் சர்வதேச அரங்கின் மூன்று முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகும் (பெர்லின், ஜெர்மனி ஆகியன மற்றவை.) ஆயுதப் பரிகரணம் சாத்தியமானால் உலகின் பொருளாதார வாழ்வே தலைகீழாக மாறிவிடும் என்பது எவருக்கும் தெரிந்த உண்மை. அதை ஒரு சகாப்த மாறுதலாகவே கொள்ளலாம். ஆயுத உற்பத்தியில் செலவாகும் கோடானுகோடி ரூபாய் ஆக்க சக்திக்கு உபயோகமாகும். பின்தங்கியநாடுகள் இதனால் துரிதமுன்னேற்றமடையவும் வழியுண்டு.

அணுக்குண்டுப் போட்டியை நீடிக்கவிடக்கூடாது என குருஷ்சேவ் கூறியிருக்கிறார். எனவே அணுசோதனை, உற்பத்தி ஆகியவற்றுக்குத் தடைவிதிக்கும் விஷயத்தில் உதவி புரிய ரஷ்யா முன்வரவேண்டும். ஆனால் இதற்கு ரஷ்யா இணங்காது. ஆயுதப்பரிகரணத்தை இரண்டுபிரிவுகளாக்க ரஷ்யா விரும்பவில்லை. பூரண ஆயுதப் பரிகரணம் வேண்டும் என அது ஒற்றைக்காலில் நிற்கிறது. மேற்குநாடுகளோ எப்படியாவது அணு ஆயுதத் தடையை முதலில் சாதித்துவிடவேண்டும் என நிற்கின்றன. இந்த அடிப்படை வேற்றுமை தீரும்வரை எவ்விதப் பலனும் ஏற்படாது.

## மாக்மில்லன் கருத்து

உலக முழுவதும் சங்கிலித் தொடர்போல் ராணுவத்தளங்களை வைத்திருக்க வேண்டிய அவசியம் மறைந்து வருகிறது என பிரிட்டிஷ் பிரதமர் திரு. மாக்மில்லன் கூறியிருக்கிறார். இதே கருத்தை பிரிட்டிஷ் பாதுகாப்பு மந்திரி திரு. வாட்கின்ஸனும் வெளியிட்டிருக்கிறார். பிரிட்டிஷ் பாதுகாப்பு மந்திரி ஒரு கூட்டத்தில் பேசியபோது, அணு ஆயுதங்களை உபயோகித்திருந்தால் மத்திய கிழக்கில் சண்டைகள் ஏற்பட்டிருக்காது என்றும் கூறியிருக்கிறார். மேற்குநாடுகள் அணு ஆயுதங்களை உபயோகிக்கத் தயங்கக்கூடாது என்ற கருத்தில் அவர் பேசியுள்ளார்.

இந்த அடிப்படையில் தான் உலகெங்கும் தளங்கள் இருப்பது அவசியமில்லை என அவர் கூறியிருக்கிறார். போதும். பிரிட்டன், ஏடன், சிங்கப்பூர் ஆகிய முக்கிய தளங்களை மட்டும் வைத்திருந்தால் போதுமானது என்பது அவர் அபிப்பிராயம். வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால் இந்த இடங்களில். அணுசக்தி ராக்கெட்டுகள் உட்பட, சக்திமிக்க நவீன ஆயுதங்களை வைத்திருக்கலாம் என்பதே. குவாய்த்தில் பிரிட்டிஷ்படைகள் துரிதமாகவும், திறமையாகவும் இறக்கப்பட்டதைச் சுட்டிக் காட்டிய பிரதமர் மாக்மில்லனும் பிரதான தளங்களை வைத்திருந்தால் போதும் என்பதற்கு இவை அத்தாட்சியாகிவருகின்றன எனக் கூறியுள்ளார்.

இந்த அடிப்படையில் பிரிட்டன் தன் பாதுகாப்புக்கொள்கைகளைக் கடைப்பிடித்தால், வேறு பல நாடுகளுக்கு அதனால் நன்மை ஏற்படக்கூடும். உதாரணமாக மாலைதீவு போன்ற இடங்களில் பிரிட்டனுக்குத் தளங்கள்தேவையிருக்காது இதனால் பணமும் மிச்சப்படும். பிரிட்டன் மீது சில நாடுகளுக்கு இருக்கும் மனக்கசப்பு நீங்கவும் வழிபிறக்கும். ராணுவ தொழில்நுட்பம் வாய்ந்த இந்த யோசனைகள் உண்மையில் எப்போது அமுலாகும் என்பதைக் கூறுவது கஷ்டம்.

## பாக். அரசியல் சாஸனம்

பாகிஸ்தானில் வெளியாகியுள்ள அரசியல் சட்டம் ஜனநாயகவாதிகளுக்கு ஏமாற்றத்தை அளித்திருக்கும். அயூப்கானின் அரசியல் சட்டம், பார்லிமெண்டுக்கில்லாத அதிகாரத்தை ஜனாதிபதிக்கு அளித்திருக்கிறது. ஜனப்பிரதிநிதிகளின் தீர்மானம் ஜனாதிபதியின் சர்வாதிகாரத்துக்குப் பலியாகிவிடும். இந்தத் திட்டம் பாகிஸ்தானின் ராணுவ சகாவான அமெரிக்காவுக்குக் கூட திருப்தியளிக்கவில்லை என்பது தெளிவு. இது சம்பந்தமாக ஜனாதிபதி கென்னடியின் வெளிவிவகார ஆலோசகர்களில் ஒருவரான திரு. செஸ்டர் பவுல்ஸ், சமீபத்தில் அளித்த பதில் இந்த உண்மையை நிரூபிப்பதாய் இருக்கிறது. மத்திய கிழக்கிலும், தென்கிழக்காசியாவிலும் ராணுவசர்வாதிகாரங்கள் ஏற்பட்டுவருவது அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு உள்ளூரவிருப்பமில்லாதபோதிலும், பெரும்பாலும் அவை கம்யூனிஸ்ட் சார்பற்றவைகளாய் இருப்பதனால் ஓரளவு ஆறுதலாய் இருக்கும். ஆனால் ராணுவ ஆட்சி நிரந்தரமான ஒன்றல்ல என்பதே சுதந்திர உலகுக்குக் கவலையளிக்கும் விஷயமாகும் ராணுவ சர்வாதிகாரத்தில் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகள் கட்டுபடுத்தப்படுகின்றன. பாகிஸ்தான், இந்தோனேஷியா, பர்மா, நேபாளம் போன்ற நாடுகளில் ஜனநாயகத்துக்குச் சோதனை ஏற்பட்டிருப்பது எவருக்குமே நன்மையளிக்காது.

## வட ரொடீஷியா

வட ரொடீஷியாவுக்கான அரசியல் சாஸனத்தை பிரிட்டன் வெளியிட்டிருக்கிறது. மூன்றாவது தடவையாக இந்த சாஸனம் வெளியிடப்பட்டிருக்கிறது. மத்திய ஆபிரிக்க பெடரேஷனில் வட ரொடீஷியா, தென்ரொடீஷியா, நயாஸலாந்து ஆகியன மூன்று உறுப்புக்கள். சம்மேளனத்தின் பிரதமர் வெள்ளைக்காரரான சர் ராய் வெலன்ஸ்கி. இந்தமூன்று உறுப்புக்களில் உள்ள வெள்ளையர்கள் மொத்தம் 3 லட்சம் பேர்தான். ஆனால் வெள்ளையருக்காகவே வெள்ளை ஆட்சி அங்கு நடைபெற்றது. இவற்றில் ஒன்றான நயாஸலாந்து தேர்தலில் டாக்டர் ஹேஸ்டிங்ஸ்பண்டாவின் மலாவிகாங்கிரஸ் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து அப்பகுதி அநேகமாகச் சம்மேளனத்திலிருந்து பிரிந்துவிடும் நிலையில் இருக்கிறது. 28,10,000 ஆபிரிக்கர்கள் வாழும் இப்பகுதியில் 9300 வெள்ளையர்களே இருக்கின்றனர் வடரொடீஷியாவில் 28,40,000 ஆபிரிக்கர்களும், 76,000 வெள்ளையர்களும் இருக்கின்றனர். தென்ரொடீஷியாவில் 28,30,000 ஆபிரிக்கர்களும், 2,23,000 வெள்ளையர்களும் இருக்கின்றனர்.

வடரொடீஷியாவுக்கான அரசியல் திட்டம் இப்போது 3-வது தடவையாக வெளியிடப்பட்டிருக்கிறது என ஏற்கெனவே சொன்னோம். இப்பகுதியில் ஆபிரிக்கர்களுக்கு அதிகப்பிரதிநிதித்துவம் அளிக்கும்படியான அரசியல் சாஸனம் வெளியிடப் பட்டபோது, சம்மேளனப்பிரதமர் சர் ராய், கடுங்கோபம் கொண்டார். அவரது தலையீட்டின் பேரில், இத்திட்டம் மாறுதலுடன் இரண்டாவது முறையாக வெளியிடப்பட்டது. ஆபிரிக்கர்கள் இதைக்கண்டு கொதித்தெழுந்து கலகம்செய்தார்கள். இதைத்தொடர்ந்து மீண்டும் இடபோது பிரிட்டன் 3 வதாக ஒரு திட்டத்தை வெளியிட்டிருக்கிறது. இதையும் உடைத்தெறியும் பொருட்டு சர் ராய் லண்டனுக்கு அழையாவிருந்தாளியாகச் சென்று முட்டுக்கட்டையிட முயன்றார். இம்முறை அவர் வெற்றிபெறவில்லை. எனவே இது சம்மேளனத்தை உடைக்கும் முயற்சி எனவும், இறுதிவரை இதை எதிர்த்துப் போராடப்போவதாயும், பலாத்காரத்தை உபயோகித்தாவது சாஸனம் அமுலாகாமல் செய்யப்போவதாயும் அவர் கூறியிருக்கிறார். ஆபிரிக்கர்கள் இங்கு பெரும்பான்மைபலம் பெற்றால் சம்மேளனத்திலிருந்து துண்டித்துக் கொள்வார்கள் என்ற பயமே இதற்குக் காரணம். ஆனால் சம்மேளனப் பிரதமர் இதற்கு முட்டுக்கட்டையிட்டால் அங்கு பெரும் கலவரங்கள் நிகழுமெனத் தெரிகிறது. பெரும் வேலைநிறுத்தங்கள் நடத்தப்படும் என்றும் கென்னத் கௌண்டா போன்ற ஆபிரிக்கத் தலைவர்கள் பயமுறுத்தி வருகின்றனர். முக்கால் லட்சம் ஐரோப்பியர்கள் 28 லட்சம் ஆபிரிக்கர்களுக்கு எஜமானர்களாய் இருப்பதை எந்த நியாயத்தின் பேரிலும் ஏற்கமுடியாது. இதேபோல் தென்ரொடீஷியாவில் இரண்டேகால் லட்சம் வெள்ளையர்கள் 28 லட்சம் ஆபிரிக்கர்களை ஆண்டுவருகிறார்கள். மத்திய ஆபிரிக்கசம்மேளன அரசியல் ஒரே குழப்படியாய் இருக்கிறது. இதற்கிடையில் காங்கோவின் கடாங்காமாகாணத்தை ரொடீஷிய சம்மேளனத்தில் இணைக்க சர் ராய் வெலன்ஸ்கி ஷோம்பேயுடன் பேச்சுநடத்தியதாயும் ஒரு செய்தி கூறுகிறது. இவையெல்லாம் எங்கு கொண்டு விடுமோ தெரியவில்லை. ஆபிரிக்க அரசியல் இனி வரவர சுவாரஸ்யமாய் இருக்கும். அரசியல் பொருளாதார காலனிகளின் கடைசிப் பிடிப்பு இந்தக் கண்டம் தான். "சுதந்திர உலகம் உண்மையில் சுதந்திரமற்ற நாடுகளைக் கொண்ட உலகமாகவே இருக்கிறது" என ஸ்ரீநேரு கூறியது சரியானதே. ஆபிரிக்காவின் "கறுப்பு வர்ணம்" அழிக்கப்படும் போதே சுதந்திர உலகம் உண்மையில் சுதந்திர நாடுகளைக் கொண்டதாய் இருக்கும்.

இதை எழுதும் போது, சம்மேளனப் பார்லிமெண்டைக் கலைத்துவிட்டு புதிய தேர்தலை நடத்தப்போவதாய் சர் ராய் வெலன்ஸ்கி அறிவித்திருப்பதாய்ச் செய்தி கிடைத்தது. சம்மேளனம் குலைந்துவிடாமல் இருக்கவும், நயாஸாலாந்து அதிலிருந்து பிரிந்துவிடாமல் இருக்கவுமே தாம் இந்த நடவடிக்கையை எடுத்துக்கொள்ளப்போவதாய் அவர் அறிவித்திருக்கிறார். அவர் நடத்தவிருக்கும் தேர்தலில் வெள்ளையர்கள் மட்டுமே வாக்களிப்பார்கள். சம்மேளனத்தை ஆதரித்தே அவர்கள் வாக்களிப்பார்கள். இதன் மூலம் புதிய அரசியல் சாஸனத்தைக் குறுக்குவழியில் தடுத்துவிட ராய் முயற்செய்கிறார். ரொடீஷியா மற்றோர் தென்னாபிரிக்காவாக உருவெடுக்கும் என்பது இப்போது தெரிந்து விட்டது. கறுப்பர் தலைவர் கவுண்டா இதை வன்மையாக எதிர்த்திருப்பது இதற்கு அத்தாட்சியாகும். காங்கோவுக்குப் பிறகு இனி ஆபிரிக்காவின் முக்கிய குழப்ப நாடாக ரொடீஷியா காட்சியளிக்கப்போகிறது.

> **சழப்பாட்டனின் கடிதங்கள்**
>
> இடமின்மையால் இவ்வாரம் வெளியாகவில்லை.

## பத்திரிகை நிருபர்கள்

அல்ஜீரிய தேசியவாதிகளின் மீது நிர்ப்பந்தத்தை உபயோகிக்கும் பொருட்டு ஓ. ஏ. எஸ். இரகசிய ஸ்தாபனத்தை ஜெனரல் டிகால் பயன்படுத்துவதாக தேசியவாதிகளின் வெளிநாட்டுமந்திரி குற்றஞ்சாட்டியிருக்கிறார். அல்ஜீரியாவிலிருந்து இத்தாலிய நிருபர்களை பயங்கரவாதிகள் மிரட்டி அங்கிருந்து வெளியேறச் செய்ததைப் பற்றியே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். ஆனால் இதில் ஒரு நிருபர் மட்டும் துணிச்சலுடன் அங்கிருந்து வெளியேற மறுத்துள்ளார். பயங்கரவாதிகள் நிருபர்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்குள் புகுந்து, அல்ஜீரியாவிலிருந்து வெளியேறாவிடில் அவர்களைச் சுட்டுக் கொன்றுவிடுவதாய்ப் பயமுறுத்தியிருக்கிறார்கள். இச் செயல் பல நாடுகளில் கண்டனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. பிரெஞ்சுத் துருப்புகள் இந்த லட்சணத்தில் தான் பாதுகாப்புச்செய்கின்றன என்று குற்றஞ்சாட்டும் தேசியவாதிகள் தலைவர், நிர்ப்பந்தத்தை தங்கள் மேல் உபயோகிக்க பிரான்ஸ், ஐரோப்பிய பயங்கரவாதிகளை பயன்படுத்துவதாயும் கூறியுள்ளார். அல்ஜியர்ஸ், ஓரான் ஆகிய பட்டினங்களில் சமூக வாழ்க்கை எவ்வளவு பயங்கரத்தை அடைந்துள்ளதென்பதற்கு இது ஓர் அத்தாட்சியாகும்.

## கம்யூனிஸ்ட் பிரச்சினை

இந்தியத் தேர்தலில் கிருஷ்ணமேனன் வெற்றிபெற்றது மேற்குநாடுகளுக்கு எரிச்சலை மூட்டியிருக்கும் என்பதை அந்நாடுகளிலுள்ள பல செல்வாக்குள்ள பத்திரிகைகள் அவர் மீது வசைபாடியுள்ளதிலிருந்து அறியலாம். உதாரணமாக, வாஷிங்டன் பத்திரிகை ஒன்று இந்த வெற்றியைப்பற்றிக் குறிப்பிடுகையில், அமெரிக்க இந்திய நட்புறவுக்கு வெடிவைப்பதிலேயே மேனனின் திறமை செலவிடப்படுகிறது எனக் கூறியிருக்கிறது. கம்யூனிஸ்ட் நாடுகளிடம் அளவற்ற விஸ்வாசமும், மேற்கு நாடுகளிடம்–குறிப்பாக அமெரிக்காவிடம் அளவற்றதுவேஷமும் கொண்டு அவர் செயலாற்றிவருவதாயும், மற்றோர் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. "அபாயகரமான இந்தப் பேர்வழி இந்திய அரசியல் அரங்கில் எழுச்சிபெற்றுவருவதும், அரசாங்கத்தில் அதிகச் செல்வாக்கு பெற்றுவருவதும் இருநாட்டு நட்புறவுகளும் ஏற்பட்டுள்ள ஒரு சவாலாக" அப்பத்திரிகை கருதுகிறது. இதேபோல் பல லண்டன் பத்திரிகைகளும் அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றன. இந்தியத் தேர்தல் பற்றிக் குறிப்பிட்ட போதெல்லாம் பிரிட்டிஷ் ஒலிபரப்பு நிலையம், ஒவ்வொரு முறையும் மேனனின்தேர்தலைப் பற்றிக் குறிப்பிடத்தவறவில்லை. இதிலிருந்து அவரது தொகுதியில் நடைபெற்ற தேர்தலை அமெரிக்க, மேற்குஐரோப்பிய நாடுகள் எவ்வளவு அக்

(5ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு
EELA NADU
11-3-62

மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தையும் நல்லுறவையும் ஏற்படுத்த சமயம் உதவுதல் வேண்டும்...... பகுத்தறிவுக்குப் பொருத்தமானதும், ஆத்மீக வளர்ச்சிக்கு ஏற்றதுமான சமயக் கொள்கைகள், ஆசிய மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைதல் வேண்டும்.

—கலைப்புலவர் நவரத்தினம்

## கலைப்புலவர் நவரத்தினம் அனுபந்தம்

# ஒரே ஒருவர், அவரும் போய்விட்டார்

—பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை—

கலைப்புலவர் தாமேயோ காலகதி யானர்
நிலைப்புலவர் யாரே நிலத்தில் — பலப்பல நூல்
கற்றூர் ஒருவரைக் காட்டுவதற் கென்செய்வோம்
ஏற்றேயாழ்ப் பாணம் இனி!

23—2—62 காலை கலைப்புலவர் அவர்களின் மறைவை அறிந்தபோது, என் உணர்ச்சி மேற்குறிப்பிட்ட பாட்டாய் உதித்தது. அதனை ஒரு காகிதத்திற் குறித்து வைத்துவிட்டுச் சற்றே ஆறினேன். ஆயினும் அவர்களைபபற்றிய நினைவு அலைகள் மேன்மேல் எழுந்து கொண்டேயிருக்கின்றன.

இந்த நூற்றூண்டிலே யாழ்ப்பாணத்திலே அறிவு விருத்திக்கென்று நூல்களை தேடிக் கற்பவர்கள் மிகச் சிலரினுஞ் சிலரே. அவர்களுள் தலைசிறந்த ஒரே ஒருவர் கலைப்புலவர் திரு. நவரத்தினம் அவர்கள். இறுதி மூச்சுவரை பல்வேறு கலைத்துறைகளில் ஈடுபட்டு இடையறுது உழைத்துக் கொண்டிருந்தார்கள்.

முப்பது வருடங்களுக்குமுன் அவர்களால் நிறுவப்பட்டது கலாநிலையம் என்னுங் கழகம். பலவேறு கலைநூல்கள் அங்கே சேகரித்து வைக்கப்பட்டன. கலாரசிகர்களைத் தம்முடன் சேர்ந்து நுகரும்படி கூவியழைத்தார்கள். என்போன்ற சங்கோசிகளைக்கூட அதிற் பங்குபற்றி நாலுவார்த்தை பேச, இரண்டு வசனம் எழுத, ஒன்றிரண்டு நூலையாவது படிக்கத் தூண்டுதல் செய்தார்கள்.

கலாநிலைய முயற்சி பொழுது போக்கான ஒரு விளையாட்டு முயற்சிபோல அப்பொழுது எனக்குத் தோன்றியது. இப்பொழுது அதன் நோக்கத்தைச் சிந்தித்துப் பார்க்கும்போது, கலைப்புலவர் அவர்களின் தீர்க்க சிந்தனையை எத்தனைதரம் பாராட்டினுலும் போதியதாகாது.

நாவலர் அவர்களுக்குப்பிறகு நாவலர் அவர்களின் விரிந்த சிந்தனைகளைத் தொடர்ந்து பற்ற முடியாமல் முடங்கித் துயில்கூடிய யாழ்ப்பாணத்தைத் தட்டி எழுப்பி, கலைத்துறை, கலைத்துறைகளில் அகில உலகத்தோடு தொடர்பு வைத்துக்கொள்ளவும், தாய்நாடு, அயல்நாடு இவைகளுடன் அறிவுப் பரிவர்த்தனை செய்துகொள்ளவும், கல்விமான்களுக்கு உறைவிடம் யாழ்ப்பாணம் என்ற பெயரை நாட்டவும் செய்த அடிநிலை முயற்சியே கலாநிலையம் என்பது நன்கு தெரிகின்றது.

சமய, சமூக, கலாசார சீர்திருத்தங்களில் சிறிது கருத்து வேற்றுமையிருந்தபோதும், கலைப்புலவர் அவர்களின் பல்வகை நூலறிவையும் உழைப்பையும் பெரிதும் போற்றுபவன் யான்.

"செய்வன திருந்தச் செய்" என்ற பாடத்தைக் கலைப்புலவர் தொட்ட எந்த விஷயத்திலும் நாம் படிக்கலாம். புலவர் அவர்கள் கண்ட கனவு பல; கைகூடியவை சில. அவர்களது இடம் நிரப்பக்கூடிய தன்று. "ஏற்றேயாழ்ப் பாணம் இனி!"



கலைப்புலவர் க. நவரத்தினம்

# நண்பன் நவரத்தினம்

— ச. பேரின்பநாயகன் —

விபுலானந்த அடிகள் தவக்கோலம் பூணுமுன் மயில்வாகனம் என்னும் இயற் பெயருடன் மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபராய் இருந்தபோது எனது அயலில் வாழ்ந்தார். அப்பொழுது அவருடன் சிறிது பழக்கம். அவர் சுவாமியான பிற்பாடும் முன்னிருந்ததிலும் கூடிய பழக்கமும் நட்புர் ஏற்பட்டது. தமிழிலும், தமிழர் பாரம் பரியம், பண்பாடு போன்றவற்றிலும் என் மனம் ஈடுபடத் தொடங்கிய காலம் அது. இந்த ஈடுபாட்டால் விபுலானந்த அடிகளாருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக்கிடைத்தது. நான அவரைக் காணப் போகும்போதும் அவர் கூட்டங்களில் பேசும் இடங்களிலும் இரு வாலிபர்கள் இணை பிரியாமல் அவருடன் இருப்பார்கள், ஒருவர் ஆசிரியர் செ மயில்வாகனம் (சிறிது காலத்திற்கு முன் யாழ் பாணம் மாகாண அதிபராய் இருந்த திரு ஸ்ரீகாந்தாவின் தந்தையார்) மற்றவர் நவரத்தினம். இந்த நாட்களில் தான் வாலிபர் மகாநாடும் உருவானது. வாலிபர் மகாநாடு வெறும் ஆட்சிச் சுதந்திரத்தையே குறிக்கோளாகக் கொள்ளவில்லை கலைத்துறையிலும் ஈடுபட்டது. வாழ்க்கையின் பல அம்சங்களிலும் மறுமலர்ச்சிக்கு உழைத்தது. கலியாணசுந்தர முதலியார், சோமசுந்தர பாரதியார் போன்ற தமிழறிஞர்களை அழைத்துச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவித்தது. ஹரீந்தரநாத சட்டோபாத்தியாயர் (சரோஜினி தேவியின தம்பியார்) வெங்கடாசலம் போன்ற கலைவிற்பன்னரை அழைத்து நாடகக் காட்சிகள், ஓவியக் காட்சிகள் நடத்தியது. இவை யாவற்றிலும் நவரத்தினமும் வேறு பல நண்பர்களும் என்னுடன் உழைத்தார்கள். (மற்றவர்களை இங்குக் குறிப்பிட வேண்டியதில்லை) விடாமுயற்சி, கலைத்துறையில் நுண்ணறிவும் பேரார்வமும் நவரத்தினத்தின் தனிச் சிறப்புகள். பெரும்பாலும் கலைக் காட்சிகளை அமைத்தல் போன்றவற்றைத் தம் தனிப்பொறுப்பாய் ஏற்று உண்ணுமல் உறங்காமல் உழைப்பார்.

வாலிபர் மகாநாடு தோன்றிச் சில ஆண்டுகளுக்குட் பின் சிறப்பாய்க் கலைத்தொண்டிற்கெனக் கலாநிலையம் உருவாயிற்று இலக்கியம் மொழி நூல் (Philology), தத்துவ நூல் (Philosophy), சிற்பம், ஓவியம், வரலாறு போன்ற வற்றைப்பற்றி ஆராய்ச்சி விரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன அழகசுந்தரத் தேசிகர் (Rev. Eranci's Kingsbury) வண. சுவாமி ஞானப்பிரகாசர் வண எராஸ் சாமியார் Rev. Fr. Heras) பண்டிதமணி கணபதிப்பிள்ளை, வித்துவ சிரோமணி கணேசையர், சோமசுந்தரப் புலவர் போன்ற மேதைகள் இங்கு சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். ஆராய்ச்சியாளருக்கு உதவும் தகுதி வாய்ந்த நூல்நிலையம் ஒன்று நிறுவப்பட்டது. அன்று பரமேஸ்வரக் கல்லூரி அதிபர் சு நடேச பிள்ளை நெடுங்காலம் தலைவராய்க் கடமையாற்றினர் உண்மையில் நவரத்தினந்தான் கலாநிலையத்தின் உயிர்.

எமது நட்பும் இறுகி வளர்ந்தது. எமக்குரிய தனிப்பிரச்சினை, குடும்ப அலுவல்கள், ஆட்சி இயல் முயற்சிகள் எல்லவற்றிலும் ஒருவரை ஒருவர் கலந்து ஆலோசிக்கும் வழக்கம் வலுப்பெற்றது. எவ்வித முக்கிய முயற்சியிலாவது நாம் இருவரும் ஒருவரையொருவர் கலந்தாலோசிக்காமல் இறங்குவது அரிதிலும் அரிது. ஒருவர் முயற்சியில் மற்றவருக்குப் பங்கு இருந்தேதீரும் ஏதாவது எழுதினால் நவரத்தினம் பார்த்துச் சரிபிழை செல்லலன்றி மனம் ஆறுதலடையாது. அதுபோலவே நவரத்தினமும் எழுதிய நூல்கள் கட்டுரைகளை நான் பார்வையிடவேண்டும் என்று என்னிடம் கொடுப்பார். வேறு பல சொல்லலாம். பின்னர் என்றோ ஒரு நாள் அப்படிச் செய்யலாம் என்று எதிர்பார்க்கிறேன். இங்கு இன்னுமொன்று மாத்திரம் கூற விரும்புகிறேன்

நவரத்தினம் பல்கலைக்கழகத்தில் படித்து அரங்கேறவில்லை. அவருடைய தாய்தந்தையர் செல்வமோ செல்வாக்கோ படைத்தவர்களல்லர். அவரும் பெரும்பொருள் ஈட்டும் வாய்ப்பைத் தேடவுமில்லை; பெறவுமில்லை. தனது உழைப்பால் ஆர்வத்தால் இந்நாட்டின் அறிஞர் உலகில் தனக்கே உரிய தனியிடத்தைப் பெற்றூர் பட்டதாரிகளும் பண்டிதர்களும் அவரை நாடி வழிபட்டு அவர் உதவியைப் பெற்ருர்கள். செல்வர்களும் செல்வாக்குள்ளவருங்கூட அவரை (பொருளுதவிக்கல்ல) நாடி உதவி கோரினர்.

# இந்துமத வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய கலைஞர்

— சுவாமி பிரேமாத்மானந்தா —

கலைப்புலவர் நவரத்தினம் அவர்களின் பிரிவால் பொதுவாக இலங்கையும் சிறப்பாக யாழ்ப்பாணமும் இராமகிருஷ்ண-விவேகானந்த இயக்கத்தின் தூணாக விளங்கிய ஒருவரை இழந்துவிட்டன. ஸ்ரீராமகிருஷ்ணர் சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் போதனைகளை அவர் சாதனை மூலம் விளக்கியிருந்தார். பள்ளிக்கூடமாணவனாக இருக்கும்போது அவர் பகுத்தறிவுச்சங்கத்தின் (Rationalist Press) வெளியீடுகள் பலவற்றையும் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமிவிவேகானந்தர், சுவாமி இராமதீர்த்தர் ஆகியோரின் வாழ்க்கைவரலாறுகள் போதனைகளையும் நன்கு படித்திருந்தார். இந்தியத் தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகள் அவரது மனதைப் பெரிதும் கவர்ந்துவிட்டன. வாலிபனாக இருந்த காலத்தில் வேதாந்த இலக்கியங்களைப் படிப்பது அவரது பொழுது போக்காக இருந்தது. யோகர் சுவாமி, செல்லாச்சிம்மா, சுவாமி சர்வானந்தஜி ஆகியோரின் வாழ்க்கை அவரைப் பெரிதும் கவர்ந்த தியானத்திலும் சிந்தனையிலும் தனித்தியாலக்கணக்காக ஆழ்ந்திருப்பார்.

1920-30-ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பல இளைஞர்களும் வளர்ந்தோரும் இந்துமதத்துக்குப் புத்துயிரூட்ட அரும்பாடுபட்டனர். இந்து வாலிப சங்கத்தை யாழ்ப்பாணத்திலும் ஏனைய பாகங்களிலும் நிறுவினர்.

ஆனைப்பந்தியடியிலுள்ள விவேகானந்த சங்கம் இளைஞர்களிடையே சமய உணர்ச்சியையும் தேசிய எழுச்சியையும் உண்டாக்குவதற்காக [illegible] பணியாற்றியது. திரு. நவரத்தினம், மயில்வாகனம் மாஸ்டர், பண்டிதர் மயில்வாகனம், திரு எம். எஸ். இளையதம்பி, திரு. சுப்பையா, திரு வி. எஸ். எஸ். குமாரசுவாமி, திரு. ஆலசாப்பிள்ளை முத்தையா, திரு. சிவகுருநாதன் ஆகியோரும் வேறும பலரும் இச்சங்கத்தின் அங்கத்தவர்களாக இருந்து உழைத்துவந்தனர்.

பி. ஜே. ஹோணிமன் எழுதிய 'அமிர்தாரும் இந்தியாவுக்கு நமது கடமையும்' எனும் நூல் விவேகானந்த சபை அங்கத்தவர்களிடையேயும் நவரத்தினத்திடமும் புதிய உணர்ச்சியை ஏற்படுத்தி [illegible] சியிலிருந்து இலங்கையையும் இந்த [illegible] முயற்சிகளில் ஈடுபடச்செ[illegible]

(VI-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்த் தாயின் தவப்புதல்வன்

.... ம. யேக்கப் ..

[யாழ்ப்பாண மேயர்]

கலைப் புலவர் க. நவரத்தினமும்," திரு. ஏ. ஈ. தம்பரும், நானும் இணைபிரியாத தோழர்களாக வாழ்ந்து வந்தோம். கலைப்புலவரின் மறைவு அவருடைய உற்றார் உறவினருக்கு மட்டுமல்லாமல் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ் கூறும் நல்லுலகத்திற்குமே மாபெரும் நஷ்டமாகும்.

நான் மாநகர முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டபோது தனது நோய் வாய்ப்பட்ட உடல் நிலையையும் பொருட்படுத்தாது எனது இல்லத்துக்கு வந்து, என்னை வாழ்த்தி, என்னுடனிருந்து நீண்டநேரம் அளவளாவிவிட்டுச் சென்ற போது, இவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து எங்கள் வாழ்வை மட்டுமல்லாமல் தமிழர் வாழ்வையும் சிறப்பிப்பாரென்று எண்ணினேன். ஆனால் இரண்டொரு தினங்களுக்குப் பின் அவர் காலமான செய்தி கேட்டு தாங்கொணாத் துயரமடைந்தேன்.

கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள் ஒரு சிறந்த கல்விமான். இப்பெரியார் தமிழர் வரலாறு, தமிழ்மொழி வளர்ச்சி, தமிழ்க் கலைகள் ஆகியவற்றில் பெரும் பங்கு கொண்டுழைத்துத் தனது புகழை ஈழத்தில் மட்டுமன்றித் தமிழகத்திலும் நிலைநாட்டினர். இவர் யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் பல்லாண்டுகளாக ஆசிரியராகக் கடமையாற்றியவர். "கணக்குப் பதிவு நூல்", "உயர்தர கணக்குப் பதிவு நூல்" "இக்கால வாணிப முறை" ஆகிய நூல்களைத் தமிழில் எழுதி, தமிழ் மாணவர்களுக்கு அரிய தொண்டாற்றினர். யாழ்ப்பாணத்துக்கு கவியரசர் ரவீந்திரநாத் தாகூர், உபஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள் வருகை தந்தபோது கலைப்புலவர் அவர்கள் வரவேற்பு நிகழ்ச்சிகளையும் இதர அலுவல்களையும் மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

மேலும், ஆலயங்களில் மிருக பலியை நிறுத்தவேண்டுமென்றும், தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்றும், மது விலக்குக் கொள்கையை நிலைநாட்ட வேண்டுமென்றும் இவர் நண்பர்களுடன் தீவிரமாக உழைத்துவந்தார்.

கலைப் புலவர் அவர்கள் வாழ்க்கையில் நானும் ஒன்றியிருந்தேன். அவர் மறைவு தமிழ் உலகுக்கே பெரு நஷ்டமாகும். அவர் அருமை மனைவி தனது அன்புக் கணவனையிழந்தார். மாணவர்கள் தெய்வமாகிய தமது தந்தையையிழந்தனர். நான் எனது பிராண நண்பனையிழந்தேன். தமிழ்த் தாய் தனது அருந்தவப் புதல்வனை இழந்தாள். அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதற்காக நாம் அனைவரும் பிரார்த்திப்போமாக.

# புராதனப் பண்புகள் நிறைந்த குரு

—ஏ. எம். ஏ. அஸீஸ்—

[சகிராக் கல்லூரி அதிபர்]

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சிரேஷ்ட வகுப்புக்களில் மாணவனாக இருந்த போது நவரத்தின மாஸ்டரை—கலைப்புலவர் கே. நவரத்தினமவர்களை—அறியலானேன். அவ்வமயம் அவர் யாழ். மத்திய கல்லூரியில் போதனாசிரியராயிருந்தார். இவ்வறிமுகம் அவர் மீதுமதிப்பையும் மரியாதையையும் என்னிடம் உருவாக்கிற்று. நவரத்தின மாஸ்டரை அறிந்து கொள்ள காரணஸ்தராயிருந்த திரு கே. வி. தங்கராசா கல்வித்துறையிலும், எழுத்துத் துறையிலும் தன்னலங்கருதாது எடுத்துக் கொள்ளும் முயற்சிகளுக்கு நவரத்தின மாஸ்டர் நன்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்துள்ளார்.

சுமார் 40 வருடங்களுக்குமுன் நான் கலைப்புலவரை அறியலானேன். அறிவு நூல்களை வாசிப்பதில் ஆர்வமும், கல்வி ஞானமும் உடைய மாணவர் கூட்டமொன்று அவரது அரவணைப்பிலிருந்தது. பாடசாலைகளுள் வாசிகசாலைகள் அப்போது இல்லை. பாடசாலைகளுக்குள்ளும், தரப்பட்ட பகுதிகளுக்குள்ளுமே பொது வாசினை அடங்கிக் கிடந்த காலம் அது. வெள்ளையர்களின் கலாசாரம் அரசோச்சி வந்தது. இருக்கிற நிலையிலேயே இருக்கவேண்டுமென்ற நம்பிக்கையில் எமது முன்னோர்கள் எங்களைப் பெரும்பாலாக வளர்த்து வந்தகாலம். அரசாங்கத்தில் பட்டமும் பதவிகளும் பெறும் வழிவகைகளிலேயே பொதுச் சம்பாஷணைகள் வட்டமிட்டுக்கொண்டிருந்தன.

நவரத்தின மாஸ்டர் தோற்றத்தில் சாதாரணமானவராயும், குணபாவங்களில் அமைதியானவராயும் இருந்தாரெனினும், இந்தவகையான சமாதான நிலையைக் குலைப்பவராகவே அவர் உண்மையில் இருந்தார்.

அரிய நூல் தொகுப்புகளைக் கொண்ட வாசிகசாலையொன்று அவரிடமிருந்தது. அன்றைய யாழ்ப்பாணத்தில் அவை அரிதாகவே இருந்தன. விசேஷமாக கீழைத்தேய கலாசாரம், இந்திய மறுமலர்ச்சி ஆகியன பற்றியே அவர் நூல்கள் சேகரித்துவந்தார். அன்றைய யாழ்ப்பாணத்திலிருந்த மற்றைய ஒரேயொரு யாழ். பட்டண வாசிகசாலையோடு ஒப்பிடுங்கால் அளவில் மாறுபட்டதாயும், விகிதாசாரத்தில் ஒத்ததாயுமிருந்தது. பட்டண வாசிகசாலையோ நீதிமன்றங்களுக்குச் சமீபமாயிருந்தது. சட்ட அறிஞர்களே, அடிக்கடி போய்வந்தனர். ஆங்கிலேய அரசியல், ஆங்கிலக் கவிதைகள்பற்றிய நூல்களே இப் பட்டண நூல் நிலயத்தில் அதிகமாயிருந்தன. அறிவுப் பசியிருந்தும் அந்தஸ்து இல்லாத மாணவர்களுக்கு யாழ். பட்டண நூல்நிலயக் கதவுகள் திறக்கப்படாதிருந்தன. ஆனால் நவரத்தின மாஸ்டர் அவர்களின் நூல்நிலயமோ அவரது நூல்களிலுள்ள அறிவு ஞானத்தை உண்மை அன்போடு பெறவிரும்பிய யாவருக்கும் திறந்துவிடப்பட்டிருந்தது. அவரது நூல்நிலயத்திலுள்ள நூல்களிற் காணப்படடனவற்றிற்கு நவரத்தின மாஸ்டர் விளக்கவுரைகளும் தெளிவுரைகளும் விரும்பியவர்களுக்கெல்லாம் அளித்து வந்தார். வாழ்க்கையின் பல்வேறு துறைகளிற் பிரபல்யமடைந்துள்ள இன்றைய தலைமுறையைச் சேர்ந்த பலருக்கு அவரது நூல்களும், அவற்றிற்கு அவர் அவ்வப்போது அளித்துவந்த விளக்கங்களும் நற்பயனளித்துள்ளன. திருவாளர்கள் கே. வி. தங்கராசா, என். அம்பிகைபாகன், ஸ்ரீகாந்தா, ஏ. ஈ. தம்பர் அவர்களுட் சிலராவர்.

இராம கிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் அரிய சாதனைகள் பற்றியும், கவியரசர் தாகூர், மகாத்மா காந்தி ஆகியோர்களின் அபிலாஷைகள் பற்றியும் நவரத்தின மாஸ்டர் தந்த விளக்கவுரைகள் அவரைச் சூழ்ந்திருந்த பல மாணவர்களின் ஆழ்மனதில் அழியா இடம்பெற்றுள்ளன. இற்றை நாட்களில் அரிதாய்க் காணப்படும் புராதனப் பண்புகள் நிறைந்த குருவாக அவர் காணப்பட்டார். அவரால் அவரது மாணவ நண்பர்கள் பலர் விழிப்படைந்தனர், அவர்களின் அறிவு தூண்டப்பட்டது, தன்னலமற்ற சேவா மார்க்கத்தில் அவர்களின் வாழ்க்கை திருப்பப்பட்டது.

கலாச்சார போலி வேஷத்தையும், சமயத்துறையில் சகியாத்தன்மையையும் எதிர்த்துக்கொண்டே தமது வாழ்நாள் முழுவதும் மதத்திற்காகவும், கலாச்சாரத்திற்காகவும் சேவை செய்தார். எமது நாட்டின் ஒரு கலாசார பிரதிநிதியாக புதுடில்லிக்குச் செல்லும் வழியில் எமது மதிப்பிற்குரிய பல நண்பர்களுடன் 1956ல் எனது வாசஸ்தலத்தில் அவர் சமுகந்தந்து எனக்குப் பெருமை அளித்தார். அவர் இப்போது எம்மிடையே இலலை. ஆனால் அவரால் தன்னலமற்ற சேவையாளர்களாக்கப்பட்ட பலர்மீது படிந்துள்ள அவரது செல்வாக்கின் வாயிலாக அவர் கொள்கைகளும் இலட்சியங்களும் என்றென்றும் நிலைத்திருக்கும்.

# திரு. நவரத்தினம் அவர்கள் மறைவு

(கோவைக் கிழார் ம. இராமச்சந்திரனார்)

கையறு நிலை

மறைந்தனரோ கலைப்புலவர், மன்னுயிர்வாழ் வகன்றனரோ
உறைந்தனரோ இறைவனடி, உலகியலை விட்டனரோ
குறைந்தனவென்று இக்கலைகட் கொள்கைகளை விட்டொழித்து
நிறைந்தன வென்றும் பர்கலை நிகழ்த்திட அங்குற்றனரோ

ஈழத்தில் கலைபரப்பும் எவ்வியக்கம் எங்குறினும்
ஆழத்தில் வினையாற்றும் அடிப்படையில் யாரிருப்பார்?
சூழத்துச் சுடர்பொலிய சுளைசுளையாய் நூற்பொருளை
பாழற்ற பான்மையிலே பரப்பவலார் எவருளரோ?

தென்னாட்டுச் சிற்பங்கள் தீந்தமிழில் உரைவகுத்தும்
எந்நாட்டும் இவைபோல எழிற்பெருமை இல்லையென
முன்னாட்டி ஓவியங்கள் முதன்மைபெற இயற்றிட்டார்
அன்னாரின் அடிபற்றி ஆர்புரிவார் இனியென்கோ?

அருள் மகனார் பண்புகளுக் கமைவீயும் வீட்டரசி
தெருள் மலிந்த இன்னிசையில் திகழ் மாகே சுவரியம்மை
மருள் மலியத் தத்தளிக்க வைத்திட்டே அவர் மறைந்தார்
இருள்மலிய, நெஞ்சழிய ஏக்கமுற விட்டனரே.

மொழி வளர்த்தும் தமிழ் விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணர்
வழிவளர்த்தும் பேரவையை வகுத்தமைத்த செயலாளர்
பழிவளர்த்தும் சொல்லின்றிப் பாங்காக நடத்தினரால்
கழிவன்மைப் பெருஞ் செயலைக் கண்டமைப்பார் எவருளரே.

# இனி யார் உளர்?

— குலசபாநாதன் —

கலைப்புலவர் திரு. க. நவரத்தினம் அவர்கள் ஒரு தனித் தாபனம். ஈழ நாட்டிலே கவின் கலைகளைப் பற்றி அறிய விரும்பி வரும் பிறநாட்டறிஞரும் உள்நாட்டறிஞரும் தவறாது தரிசிக்கும் கலைப் பீடமாக விளங்கியது கலைப்புலவர் வாழ்ந்த இல்லமாகிய சாந்திநிகேதன். கவின்கலைகள் விளங்கும் நூல்கள் தமிழில் மிகமிகக் குறைவு. இப்பெருங் குறைவினைப் பல்லாற்றானும் நிறைவு செய்து வந்தார் கலைப்புலவர் அவர்கள். இவ்வறிஞர் முதன் முதலில் எழுதிய "தென்னிந்திய சிற்பவடிவங்கள்" எனும் நூல் தாய் நாட்டிலும், சேய் நாட்டிலும் சிறந்த வரவேற்பைப் பெற்றது. சிற்பவடிவங்களைப் பற்றிய நூல்கள் எல்லாம் ஆங்கிலத்திலும் வட மொழியிலுமே காணப்பட்டன. ஆனால் இவற்றைத் தமிழர் நன்குணருமாறு தமிழிலே வெளியிட்ட பெருமை கலைப்புலவர் அவர்களையே சாரும்.

திரு. நவரத்தினம் அவர்கள் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியில் ஆசிரியராக இருந்த காலத்தில் நான் ஒரு மாணவனாக இருந்தேன். அக்காலத்திலேயே ஏனைய ஆசிரியர்கள் திரு. நவரத்தினம் அவர்களின் சிறந்த குணங்களைக் கண்டு அவர் பால் நன்மதிப்பு வைத்திருந்தனர். அக்காலம் தொடக்கம் அவர் இவ்வுலகவாழ்வை நீக்கும்வரை அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புகள் பல கிடைத்தன. எனது வேண்டுகோளுக்கிணங்கி கலைப்புலவர் அவர்கள் சில கட்டுரைகளை 'ஸ்ரீலங்கா' வில் வெளியிடுவதற்கு உதவி புரிந்தார்கள்.

'ஈழகேசரி' யினை மாத சஞ்சிகையாக வெளியிட வேண்டுமென்று முதலில் ஒரு கடிதம் எழுதினார்கள். அதனைத் தொடர்ந்து பிறிதொரு கடிதம் எழுதிக் கட்டுரையினை விரைவில் அனுப்பி வைக்குமாறு பணித்தார்கள். யான் கட்டுரையை எழுதி அனுப்புவதற்கிடையில் கலைப்புலவர் அவர்கள் இவ்வுலக வாழ்வைத் திடீரென நீத்த செய்தி எனக்குப் பெரிய ஏமாற்றத்தையும் தீராத கவலையையும் அளித்துள்ளது. யான் யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் போதெல்லாம் புலவர் அவர்களையும் தரிசித்து வருவது வழக்கம். கடந்த மாதம் அவர்களைத் தரிசித்தபொழுது தாம் எழுதிய இந்து சமய நூல் மிக விரைவில் வெளிவரும் எனப் புன்முறுவல் பூத்த முகத்துடன் கூறினார்கள்.

ஈழநாட்டிலே கவின் கலைஞர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு ஊக்கமளிப்பதில் கலைப்புலவர் அயராது உழைத்து வந்தார்கள். கலைப்புலவர் அவர்களுடைய அரும் பெருந்தொண்டினாலேதான் வடக்கு இலங்கையில் கவின்கலைகள் புத்துயிர் பெற்றன. கவின்கலைகள் சம்பந்தமாகவும் இந்து சமயம் சம்பந்தமாகவும் கலைப்புலவர் அவர்கள் அநேக நூல்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆக்கியுள்ளார்கள். ஈழநாட்டிலே வெளிவந்த பழைய நூல்களைக் கண்ணுற்காண வேண்டுமானால், சாந்திநிகேதனிலுள்ள நூல்நிலயத்துக்கே செல்ல வேண்டும். யான் பிறப்பதற்கு முன் வெளிவந்த பழைய நூல்கள் பலவற்றைக் கலைப்புலவர் அவர்கள் ஒருமுறை பல்மணி நேரமாக எனக்கு எடுத்து எடுத்துக் காட்டி விளக்கினார்கள். கலைபற்றிய சந்தேகங்களை விளக்கும் கலைப் பீடம் மறைந்து விட்டது. இப் பெரும் பணியைத் தொடர்ந்து நடத்த இனி யார் உளர்.

புலவர் அவர்களைப் பிரிந்து துயருறும் சங்கீத மேதை மகேஸ்வரி தேவி அவர்களுக்கு இறைவன் ஆறுதல் அளிப்பாராக. கலைப்புலவரை நினைவு கூருமுகமாக ஈழத் தமிழர் ஒன்றுபட்டுச் சிறந்த ஞாபக சின்னத்தை உருவாக்க வேண்டுமெனப் பணிவுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

# வள்ளன்மை வாய்ந்தவர்

—வ. பொன்னையா—

கலைப்புலவர் க. நவரத்தினம் என்பவரை அறியாதார் ஈழத்தில் இல்லை எனலாம். தமிழ் நாட்டிலிருந்து யாழ்ப்பாணம் வரும் அறிஞர் பலருக்கும் விருந்தளித்து உபசரிப்பது அவர் வழக்கமாதலால், அவரது இசை தமிழ் நாட்டிலும் பரவிக்கிடக்கின்றதென்று கூறின், அது மிகையாகாது. வணிகம், கணக்குப் பதிவியல், அரசியல், சமூகவியல், சிற்பம், ஓவியம், உளநூல், அறிவியல, மெய்யியல் என்னும் பல துறைகளையுங் கற்றுத் தேறியவர். இவற்றுள் எத்துறையையேனுங் கற்றவரைக்கண்டாரெனின் அவரோடு உரையாடி அளவளாவுவர்; தமது ஊதியஞ் சிறிதென்பதையும் பொருட்படுத்தாது பலதுறை நூல்களையும் விலைக்குக் கொண்டு அவற்றைத் தாமுங் கற்று அதனோடு அமையாது பிறருக்குங் கொடுத்துதவிக் கற்கச் செய்யும் வள்ளன்மை வாய்ந்தவர். அதனால் அவரோடு நெருங்கிப் பழகியவர் ஒரு துறையிலாயினும் மேம்படாதிருத்தல் முடியாது. அவரால் நன்மையடைந்தவர் பலர். அவர் மறைவு யாழ்ப்பாணத்திற்கு ஓர் உபகாரியை இல்லாமற் செய்தது என்று நினைக்க என் உள்ளம் உடைகின்றது. தம் நண்பர்க்கு வேண்டிய நேரத்தில் வேண்டிய புத்திமதி கூறிச் சாந்தம் அளிக்கும் அன்பர் அவர்; இனிப் பூதவுடலோடு காணப்படாரெனினும் அவர் நினைவு என்றும் அவர் நண்பர் உள்ளங்களில் நின்று நிலவும் என்பதன் கண் ஐயம் யாதுமில்லை. அவரை நாற்பது ஆண்டுகளாக யான் அறிவேன். அவர் வாழ்க்கையை ஒரு விளையாட்டாகக் கருதி வாழ்ந்தவர். விளையாட்டு முடிந்தது; அவர் சென்றுவிட்டார். அவரோடு கூடி விளையாடிய யாமும் அவர் மனையாளும் அவரை விளையாட்டுக் களத்திற் காணாது ஏங்குகின்றோம். தோற்றரவிற் பல காரியங்களில் ஈடுபட்டிருந்தாலும் அவர் உள்ளம் உண்மையாக என்றும் ஆன்ம வீடேற்றத்தின்கண் உறுத்தியிருந்ததென்பது யான் கண்ட உண்மை.

## கல்வியறிவோடு நிர்வாகத் திறமையும் படைத்தவர் கலைப்புலவர்

— சு. நடேசபிள்ளை —

கலைப்புலவர் நவரத்தினம் யாழ்ப்பாணத்தில் ஒரு தீபமாக விளங்கினர். அவரது மறைவு இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஒரு பெரும் நட்டமாகும். கலைத்துறையிலும், தமிழ்த்துறையிலும், சமய ஆராய்ச்சித்துறையிலும் அவர் ஆற்றிய பணிகள் பல. முக்கியமாகக் கலைத்துறையில் அவர் செய்த சேவை தமிழ் மக்களது பாராட்டுக்கு என்றும் உரியதாகும். கலைப்புலவர் என்ற பட்டம் அவருக்கு மிகவும் பொருந்தியதாக அமைந்தது.

கலாநிலையம் என்ற தாபனத்தை அவர் யாழ்ப்பாணத்தில் முப்பது ஆண்டுகளுக்கு முன் தோற்றுவித்தார். அக்காலத்தில் அது பயன்மிகக ஒரு தாபனமாக விளங்கிற்று. பல தமிழறிஞர்களும், கலையார்வம் கொண்டவர்களும், சமய ஆராய்ச்சித் தேட்டமுடையவர்களும், அரசியல், பொருளாதாரம் முதலிய சாத்திரங்களை முறையாகக் கற்க விரும்பியவர்களும் இக்கலாநிலையத்தை நாடினர். அங்கு ஆராய்ச்சி வகுப்புகள் ஏற்படுத்தப்பட்டன. உபந்நியாசங்கள் வாரந்தோறும் நடைபெற்றன. தமிழிலும் ஆங்கிலத்திலுமுள்ள பல நூல்கள் சேமித்து வைக்கப்பட்டன. இந்நிலையத்தின் ஆதரவில் "ஞாயிறு" என்ற ஒரு சிறந்த பத்திரிகை வெளிவருவதாயிற்று. இப்பத்திரிகை இலங்கையில் மாத்திரமன்றி தென்னிந்தியத் தமிழகத்திலும் பல அறிஞர்களின் நன்மதிப்பைப் பெற்றது. கலாநிலையம யாழ்ப்பாணத்தில் புதியதொரு தீவிரமான தமிழுணர்ச்சியை உண்டாக்கி வளர்த்தது என்று கூறுவது மிகையாகாது. கலாநிலையத்தின் இயக்கத்துக்கு உயிர்நாடியாக இருந்தவர் கலைப்புலவர் நவரத்தினம். இவ்விபக்கத்தில் என்னையும் ஈடுபடுத்தியவர் அவர். கலாநிலையம் தோன்றிய காலத்தினின்று எங்களிருவருக்குமிடையே நெருங்கிய நட்புத் தொடர்பு உண்டாயிற்று.

கலைப்புலவர் நவரத்தினம் பல நூல்களின் ஆசிரியராக விளங்கினர். அவர் முதன் முதல் வெளியிட்ட நூல் 'தென்னிந்தியச் சிற்ப வடிவங்கள்' என்பதாகும். அவரது கலையார்வமும் கலை ஆய்வுத்திறனும் இந்நூலினின்று நன்கு புலப்படும். இந்நூல் ஆனந்தகுமாரசுவாமி, ஓ. சி. கங்குலி முதலிய கலை அறிஞர்கள் ஆங்கிலத்தில் எழுதிய நூல்களின் வழியைப் பின்பற்றியதாகும். இலங்கையில் தமிழ்க் கலை வளர்ந்த வரலாற்றை ஆராய்ந்து, கலைப்புலவர் நவரத்தினம் எழுதிய நூலும் படித்து இன்புறத்தக்கது. இலங்கைக் கலாச்சாரத்தில் தமிழ் நாகரிகம் எவ்வளவு உட்புகுந்துள்ள தென்பதை விளக்கி அவர் ஆங்கிலத்தில் ஓர் அரிய ஆராய்ச்சி நூலை எழுதியுள்ளார். சமய ஆராய்ச்சித் தொடர்பாகவுள்ள சில சிறந்த நூல்களையும் அவர் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார்.

கலைப்புலவர் நவரத்தினம் பல்கலைக்கழக பயிற்சி பெற்றவர் அல்லர்; சுய முயற்சியினலே பல துறைகளிலும் பயின்று கல்விமேம்பாடு அடைந்தவர். இவ்வகையில் அவர் தனிச்சிறப்புப்பெற்று விளங்கினர். அவர் கல்வியறிவோடு அதிக நிர்வாகத் திறனும் படைத்தவர். "செய்வன திருந்தச் செய்" என்ற குறிக்கோளை உடையவர். யாழ்ப்பாணத்தில் பல சங்கங்களும் இயக்கங்களும் அவரது நிர்வாகத் திறனல் பயன்பெற்றன. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் விழா, கலைக்காட்சி முதலியன அவரது முயற்சியால் சிறப்புற்றன. யாழ்ப்பாணத்தில் அவர் ஈடுபடாத பொதுநலத் தொண்டுகள் இல்லையென்று கூறலாம்.

அவருடைய தமிழார்வமும் கலையார்வமும், சமய ஆர்வமும் அவரது வாழ்க்கையை மலரச் செய்தன. அவரது நினைவு என்றும் போற்றற்குரியனவாகும்.

## ஈழத்தின் கலைவிளக்கு

— முதலியார் செ. முத்துத்தம்பி —

நாற்பத்தைந்து வருட காலமாக ஒளி பரப்பிக் கொண்டிருந்த கலைவிளக்கு அணைந்துவிட்டது. கலையுலகு இன்று இருள் சூழ்ந்து கிடக்கின்றது.

நாவலர் என்றல் அது எங்கள் ஐந்தாங் குரவர் ஆறுமுக நாவலரைத்தான் குறிக்கும். அதே போல, கலைப்புலவரென்றல் அது எங்கள் நவரத்தினத்தைத்தான் குறிக்கும்.

திரு நவரத்தினம் கலைப் புலவராக மட்டும் விளங்கவில்லை. சகல மதங்களையும் படித்தறிந்து சமரச ஞானம் படைத்தவராகவும் விளங்கினர். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரைப்போல் எல்லா மதங்களிலும் உள்ள உண்மைகளைக்கண்டறிந்தவர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஒரு சிறந்த போதகாசிரியராக நாற்பது ஆண்டுகள் பணியாற்றினர் அக்கல்லூரியில் அவருக்குப் பெருமதிப்பு இருந்தது. மாணவர்களுக்கு எல்லாம் ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். மாணவர்கள் அவரைத் தெய்வமாக மதித்தனர்.

அவர் இறைவனடி சேரும் வரை பகவத் கீதையிற் கூறப்படும் கர்மயோகியாகவே இருந்துவந்தார். தமது தொண்டுகளை இறைவனுக்கே அர்ப்பணித்தார்.

திரு. நவரத்தினம் ஒருகலைப் பொக்கிஷம் அருமையான நூல்களைச் செந்தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆக்கி வெளியிட்டுள்ளார்; இறைவனடியே அவ... ஆசிரியராகப் பெற்றிருந்தார் எனக் கூறினும் தகும். அவர் அளவாகப் பேசுவார், அற்புதமாக எழுதுவார்.


காந்தம் இரும்பை இழுப்பது போல் அவரிடம் சென்றவர்களை அவர் கவர்ந்துகொள்வார். 'தாரமும் குருவும் தலைவிதிப்படி' எனப் பெரியோர் கூறுவர். பெருங்குடிப் பெண்மணி வாழ்க்கைத் துணைபாகக் கிடைக்கும் பேற்றை இவர்பெற்ருர்.

கொழும்புத்துறை மாமுனிவர் அவரின் குரு, எனவே அவரது வாழ்க்கை பொலிந்து விளங்கிற்று. அம்மையார் வாழ்க்கைக்கு வேண்டிய உதவிகளைச் செய்துவந்தார். மாமுனிவர் ஞான வழியைக் காட்டி வைத்தார். திரு. நவரத்தினம் தாம் செய்யவேண்டிய பணிகளைச் செவ்வனே செய்தார்.

'எந்நன்றி கொன்ருர்க்கு
உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற
மகற்கு'

என்பது வள்ளுவன் வாக்கு.

கலைப்புலவர் சுயநலமின்றித் தமிழினத்துக்கும், தமிழுக்கும் சைவத்துக்கும், தமிழ்க் கலைகளுக்கும் உழைத்து வந்தார். அவரது நினைவு என்றும் பசுமையுடன் நிலைக்க வேண்டும். கலைப்புலவருக்குக் கிடைத்த அம்மையார் கஷ்டமின்றி வாழ நாம் ஆக வேண்டியவற்றைச் செய்யவேண்டும். இதைப்பற்றி அன்பர்கள் யோசிப்பார்களாக.



திரு. நவரத்தினம் அவர்களின் "இலங்கையின் கலைவளர்ச்சி" என்னும் நூல் அரங்கேற்றப் பெற்ற பொழுது, அவருக்கு கலைப்புலவர் என்னும் பட்டம் வழங்கி, பொன்னுடை போர்த்துக் கௌரவித்தனர்.

## மறைந்த கலைவிளக்கு

வண்ணை சிவ. ஐயம்பிள்ளைக் குருக்கள்

நமது யாழ்ப்பாண நாட்டில் பலபாஷை விற்பன்னராக விளங்கிய கலைப்புலவர், சமயம், தத்துவம் இலக்கியம், கலை, வாணிபம் முதலிய ஆராய்ச்சித்துறையில் நடுவு நிலையாக அந்தந்த சமயாகமப்படி சிவ வழிபாட்டில் சைவரெல்லோரும் சித்தாந்திகளே என்றும் சைவாகமங்களின்படி சைவர்களான எம்மனேருக்கு சாதிச் சழக்குகள் இல்லையென்றும் சைவம் காஷ்மீரத்திற்கு வடகிழக்கிலுள்ள பெரிய மலைத் தொடராகிய கயிலாயத்தில் தோன்றிய சிவாகமங்களில் முதல் உதித்த பிரத்ய பிஞ்ஞான தரிசனமே சிவாத்வைதம், சைவசித்தாந்தம் என்றும், இதை மத்ய தேசத்தில் நிலைநாட்டியவர் வீரசைவ நவீன புனருத்தாரண குரு ஸ்ரீ பஸவேசுபரர் என்றும், தென்னட்டில் நிலைநிறுத்தியவர் திருவெண்ணை நல்லூர் மெய்கண்டதேவர் என்றும் அறுதியிட்டிச் சொல்லுவர். இதுவே சமய நூல்களைக்கற்றறிந்தவர் கூறும் உண்மையாகும்.

இவர் கலாநிலையம் நிறுவி அப்போது சமயபேதமன்றி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் ஒவ்வொரு சமய போதகரால் சமய போதனைகளைச் செய்வித்து ஸ்ரீ பஸவேசுபரரது புதிய சைவோற்பத்தியையும் வீர சைவ பாதுகாவலரால் சொற்பொழிவும் செய்வித்தார். கலை நிரம்பிய புலவர் ஆறந்த ஆசாரியர்களதும் ஸ்ரீ சங்கராசாரியரதும், வீர சைவாசாரியரதும் உற்பத்தி தினங்களையும் கொண்டாடி வந்தனர். கலைப்புலவரது இல்லத்தில் சாந்தமே உருவாகிய தில்லைக் கூத்தப் பெருமானது உருவச் சிலையை வைத்து நித்ய வழிபாடாற்றி சிவார்ப்பணப் பிரசாதமாகவே உணவருந்தும் நியமமுள்ள சிவாத்வைதியாயிருந்தார்.

இவர் தமது சிறு பராய காலத்திலேயே சிவாத்வைத சைவராகிய ஸ்ரீ குமாரதேவர் சாத்ரக் கோவையை அவரது தந்தையாருடைய கட்டளைக்கமையக் கற்று அதிலிருந்து அதன் உண்மைகளை மிகநுணுக்கமாக ஆராய்ந்து உண்மையுணர்ந்தார என்பது எங்கள் சைவ சம்பாசணையில் எனக்குச் சொல்லியுள்ளார் மேலும் அவர் தமக்கு ஒரு சமயத்திலும் வெறுப்பில்லை, எல்லாச் சமயமும் சிவனையே வழிபட்டு சிவகதியே அடைவதென்ற உண்மையினல் என்ருர். இப்படியே அந்தக்காலத்து சைவர்கள் சாந்தலிங்க சுவாமிகள் பிரபந்தம் சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தம் குமாரதேவர் பிரபந்தம், கைவல்லிய அரிய சாஸ்திரங்களை படித்து யோக ஞானப்படிகளை அடைந்தனர் என்றும் கூறுவர்.

காங்கேயன்துறை வீர சைவ நாகலிங்கேசுபர மடாலயத்தில் வீர சைவ மாபெருங் கூட்டம் தொடங்கியபோது கலைப்புலவரும், எமது பழைய நண்பர் ஸ்ரீ மஹாலிங்க சிவமும் ஆகிய இவர்கள் இக்கூட்டத்தை பீடு பெறச் செய்து வீர சைவம் அல்லது இலிங்காயதம் என்ற விஷயம்பற்றிப் பேசிய அந்த விஷயத்தை சிறிய புத்தக ருபமாக அச்சிட்டுதவினர்கள்.

நான் வண்ணர்பண்ணையை விட்டு முரசுமோட்டையில் குடியேற்றத் திட்டத்தில் கமஞ் செய்ய நிலம் எடுத்து கலைவிளக்கைப் பிரிந்துவிட்டாலும், எங்கிருக்கிருர் எப்படி என்றெல்லாம் விசாரித்துக்கொள்வார். நான் பிரிந்தும் அவர் என்னைப் பிரியவில்லை. அப்படியான அந்த பேரறிஞர் கிளிநொச்சியில் அக்கரையானுக்கு சமீபமான நடுக் காட்டில் பழைய சிவாலயமிருப்பதை அறிந்து அதற்கொரு பெரிய சபையைக் கூடி அரசாங்கத்திடம் 10 ஏக்கர் நிலம்பெற்று அந்தக் காட்டில் கண்டெடுக்கப்பட்ட சிவலிங்க உருவைப் பிரதிட்டைசெய்ய என்னையே கூட்டிப்போய் பிரதிட்டையைச் செய்வித்து பிரதிட்டாசாரியராகவும், பூசகராகவும் நியமித்து சாதிசமயப் பாகுபாடின்றிச் சுத்தமான வழிபாடாற்றும் வண்ணம் மாதப் பூசைச் செலவும் தந்து என்னைக் கௌரவப்படுத்தி வைத்தார். இந்தப் பெரிய விஷயங்களை ஏதேன் கைமாறு வேண்டி, சுயநலம் பேர் புகழ் வேண்டிச் செய்தாரல்லர். கைமாறு கருதாக் கலை விளக்கை கடைசியாக மறைவுக்கு இரண்டுநாள் முன் சந்தித்து சிவாத்வைதக்கண்டனம்செய்த ஒருவரைப்பற்றிப் பேசி விஷயங்களைக் குறிப்புக்கூறி இப்படி எழுதும் என்றும் தாமும் அதைப்பற்றி எழுதி இந்து சாதனத்தில் வெளியிடத் தயாராயிருக்கிறேன் என்றும் அவ் விஷயங்களை வாசித்துக்காட்டி திரு. சூரிய நாராயண சாஸ்திரி சிவாத்வைத நிர்ணயம் என்ற நூலே இதற்குப் பிரமாணம் என்றும் சொல்லி எம்மை வழியனுப்பிவிட்டு தாமும் போய்விட்டார். அதனல் எமது சமயம் வீழ்ச்சியுற்றதென்றே நாம் சொல்லவேண்டியதில்லை.

கலைப்புலவர் பண்பின் இருப்பிடம். அவரின் பிரிவு தமிழ் உலகுக்குப் பெரு நஷ்டமாகும்

# நவரத்தினத்தின் புலமை

—அத்தியட்சகர் வண. எஸ். குலேந்திரன்—

கலைப் புலவர் நவரத்தினம் அவர்களின் பிரிவால் யாழ்ப்பாணம் ஆற்றல் மிக்க அறிஞர் ஒருவரை இழந்துவிட்டது. இந்தியகலை, கலாசாரத் துறைகளில் சுமார் நாற்பது ஆண்டுகளுக்குமேலாக சுயநலங் கருதாது மிகுந்தஆர்வத்துடன் கலைப்புலவர் அயராது உழைத்து வந்தார். இந்தியா மிகப் பரந்தநாடு. பலதரப்பட்டநாடு. அந்தப் பெரிய நாட்டைப் போலவே இந்திய கலை, கலாசாரத் துறைகளும் பெரும் பரப்பையுடையது. அப்பெரும் பரப்பின் எல்லாத்துறைகளிலும் கலைப்புலவர் முதன்மை பெற்று விளங்கினரென நாம் கூறிவிடமுடியாதெனினும் ஒரு சில துறைகளை அவர் நன்கு அறிந்திருந்தார்.

இந்திய சிற்பம், கட்டட பிரமாணக் கலை, சரித்திரம் ஆகிய துறைகளில் கலைப்புலவர் ஞானம் மிகுந்தவர். எனினும் இந்துசமயத்திலும், இந்துமத தத்துவசாஸ்திரத்திலும் அவர் உயர்ந்த பாண்டித்தியம் பெற்றிருந்தார். ஒரு துறையில் விசேஷ ஞானம் படைத்த ஒருவர், வேறு துறைகளையும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம் என்பதைக் கலைப் புலவர் நன்கு உணர்ந்திருந்தார். மேலைநாட்டுத்தத்துவங்களையும் அவர் பெருமளவுக்குக் கற்றிருந்தார். தெளிந்த சிந்தையுடன் கலையாராய்ச்சி முடிபுகளைக் காண்பதற்கு இந்தப் பரந்த அறிவு அவருக்குப் பேருதவியாய் இருந்தது.

எனினும் அவர் தமக்குரிய சொந்தத்துறைகளிலேயே செறிந்தஅறிவையும் நுண்ணிய ஆர்வத்தையும் பெற்றிருந்தார். ஆச்சரியப் படக்கூடிய அளவுக்கு அவர் இந்துசமயத்திலும் இந்திய தத்துவசாஸ்திரங்களிலும் பேரறிவு படைத்திருந்தார். சைவசமயத்தின் ஒரு பிரிவான வீரசைவம் மிகச் சிலரால் பின்பற்றப்படுகின்றது. வீரசைவத்தைப்பற்றி அறிவதற்காக ஒருசமயம் அவரிடம் சென்றிருந்தேன். வீரசைவம் பற்றித் தாம் எழுதிய ஒருசிறு நூலைக் கலைப்புலவர் எனக்கு உடனே கொடுத்தார். இது எனக்குப் பெரிய ஆச்சரியத்தை விளைவித்தது.

சிவஞானசித்தியாரைப்பற்றியும் அறுவர் உரை பற்றியும் மதிப்புரை ஒன்று எழுதுமாறு எனக்கு அண்மையில் பணிக்கப்பட்டது. இந்த உரைகளைப் பற்றி அறிவதற்காக நான் கலைப்புலவரிடம் சென்றிருந்தேன். அறுவர் உரை கொண்ட பழம் பதிப்பொன்றை அவர் உடனே எனக்குத்தந்து உதவினார். இந்நூல் இப்போது இலங்கையிலோ இந்தியாவிலோ கிடைப்பதரிது.

அவருடைய அறிவு அகலமும் ஆழமும் உடையதாய் இருந்தது. மாக்ஸ்முல்லர் எழுதிய தத்துவநூலொன்றிலிருந்து ஜே. எஸ். நல்லசாமிப்பிள்ளை மேற்கோள் காட்டியிருந்தார். அந்த மேற்கோள் மாக்ஸ்முல்லரின் தத்துவ நூலில் எங்கு எழுதப்பட்டிருக்கின்றதென்பதை என்னால் கண்டுபிடிக்கமுடியவில்லை. கலைப்புலவரிடம் சென்று இதைப்பற்றி விசாரித்தபோது குறித்தமேற்கோள் நூலின் முகவுரையில் இருப்பதாக எவ்வித மயக்கமுமின்றி உடனே தெரிவித்தார்.

வடமொழி அறிவு நிரம்பப் பெற்றவர்களே இந்தியக்கலைத் துறையில் ஆராய்ச்சி செய்ய முடியுமென்பது மேனாட்டு கலைவல்லுநரின் கருத்தாகும். திராவிடக கலாசாரமபற்றிய அறிவு மேனாட்டு ஆராய்ச்சியாளருக்கு அதிகம் இல்லை. தமது சொற்ப வடமொழி அறிவைக் கலைப் புலவர் பெரிதும் பயன்படுத்திக் கொண்டார். இந்துசமயத் தத்துவங்களில் இராமநாதன் கல்லூரி திரு. சு. நடேசபிள்ளையைத் தவிர கலைப்புலவர் போன்ற ஞானமுள்ள வேறு ஒருவரைக் காணமுடியாது.

கலைப்புலவர் ஒரு நல்லஎழுத்தாளராக இருந்ததோடு கலையாக்கத்துக்காகவும் உழைத்து வந்தார். 'தென்னிந்திய சிற்ப வடிவங்கள்' எனும் அவரது நூல் பெருமதிப்புடையது. வேதாந்தம், சைவசித்தாந்தம் என்பனபற்றி அவர் எழுதிய சிறு நூல்களும் சிறந்தவை. இவற்றைவிட அவர் பல கட்டுரைகளையும் சிறிய பிரசுரங்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். அவர் கடைசியாக எழுதிய பெரிய நூல் ஒன்று இப்போது அச்சில் உள்ளது. எழுத்துத் துறையில் அவர் பிறரை ஊக்குவித்தலுடன் அவர்களின் எழுத்துக்களையும் வெளியிடச்செய்து வந்தார். சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது தமிழ்விழாவைச்சிறப்புற நடாத்தியவர்களில் இவர் முக்கியமானவர்.

பல பெரிய அறிஞர்களுக்குள்ள பட்டப்படிப்போ பெரும் வருவாயோ, அல்லது பெரிய ஆராய்ச்சி நிலையங்களுடன் தொடர்போ இவருக்கு இல்லாதிருந்தும் இத்தகைய தேவைகளை அவர் அறிவைப் பெறுவதில் அயராது உழைத்ததன் மூலம் பூர்த்திசெய்தார். நமது நாட்டில் இது போன்று வேறு எவரும் செய்ததில்லை எனலாம். ஐரோப்பாவில் மத்திய காலத்தில் வாழ்ந்த ஞானிகளின் ஆர்வத்தோடு தமது ஆராய்ச்சிகளை நடாத்திவந்தார். இவ்வாறு அறிவுவளர்ச்சிக்கான வசதிகள் இல்லாத காலத்தில் வாழ்ந்த அறிஞர்களின் வாழ்க்கையையே இவருடைய வாழ்க்கை நினைவூட்டியது. கலைப்புலவர் பணத்தையோ புகழையோ எதிர்பார்த்து அறிவு வளர்ச்சியில் இறங்கவில்லை. அவர் லௌகீக ஆதாயத்தைக் கருதாது உழைத்துவந்தார். அறிவுபெறுவதில் இவருக்கு இருந்த உயர்ந்த நோக்கம் மக்களின் பெருமதிப்பை எப்பொழுதும் கவரும்.

மன்னர்களுக்குத் தமது தேசத்திலே தான் சிறப்பு. ஆனால் கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பென்பதைத் தமிழ் நூல்களும் வடமொழி நூல்களும் எமக்கு எடுத்துரைக்கின்றன. ஆகவே, புலவர்கள் மக்களிடமிருந்து மதிப்பை எதிர்பார்க்கலாம் என எண்ணுவர். ஆனால், கலைப்புலவரோ அத்தகைய மதிப்பை ஒருபோதும் காத்திருக்கவில்லை. அவர் பணிவு மிக்கவர். மேன்மைகளுக்கு இரிமை பாராட்டாதவர். அவரைப் போன்ற வேறு ஒருவரைக் காண்பதரிது.

யாழ்ப்பாணம், தான் பெருமைப் படக்கூடிய ஒரு மகனை இழந்துவிட்டது.

# கலைப்புலவர்

— க. இராமச்சந்திரன் —

திரு. க. நவரத்தினம் அவர்கள் எழுதிய 'இலங்கையிற் கலை வளர்ச்சி' எனும் நூல் திரு. சு. நடேசபிள்ளை அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணத்தில் அரங்கேற்றப் பெற்ற போது அங்கு கூடியிருந்த புலவர்களால் 'கலைப் புலவர்' எனும் பட்டம் அதன் நூலாசிரியருக்கு வழங்கப்பெற்றது.

இது ஓர் புத்தம் புதிய பட்டம். மதுரைச் சங்கத் தமிழ்ப் பேரகராதியில்கூடக் காணப்படாத ஒன்று. அதனை இந்தியாவில்சரி, இலங்கையில்சரி, முதன் முதலாகப் பெற்றவர் திரு. க. நவரத்தினம் அவர்களே. அவருக்குப் பின் தானும் வேறெவரும் அதனைப் பெறவில்லை. கோயில் என்றால் சிதம்பரத்தைக் குறிப்பது போலவும், நாவலர் என்றால் நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்களையே நினைவூட்டுவது போலவும், கலைப்புலவர் என்றபட்டம் திரு. நவரத்தினம் ஒருவரையே கருதுமாறு நம்மைச் செய்துவிட்டது. இந்தச் சிறு உண்மையிலிருந்து, காலஞ்சென்ற எமது பெரியாரது கலைத்தொண்டின் அருமையையும் பெருமையையும் யாம் ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம். உண்மையில் அவர் ஓர் கலைக் களஞ்சியமாக விளங்கியதோடு, சமயத்துறையில் ஓர் அரிய சமரச ஞானியாகவும் வாழ்ந்தனரெனலாம். தென்னிந்தியச் சிற்பககலையை விளக்கி அவரால் வரையப்பட்ட நூலின்பிரதி ஒன்றை ஸ்ரீ ரமணாச்சிரமம் வாசிகசாலைக்கு நன்கொடையாக அளிக்கும் புண்ணியமும் பாக்கியமும் எனக்குக் கிடடியது. அதனைப் படித்ததும் பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷி, "இது ஓர் இணையற்ற நூல். இதற்கு முன் எவராவது இப்படிப்பட்ட நூலை இயற்றவில்லை. இதன் புகழ் நீடித்து நிற்கும்" என்று ஆசி கூறினர்.

எனவே எமது பெரியாரின் பூதவுடல் மறைந்த போதிலும், அவரது புகழுடல் என்றும் நிலைத்து நிற்கும். ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுகளாக, அவருக்கும் எனக்குமிடையே இருந்துவந்த நட்பு, அத்யாத்ம உறவாக மலர்ந்தது சென்ற ஐந்தாண்டு எல்லைக்குள்ளேயாம். 1960-ம் ஆண்டு மத்தியிலிருந்து, 1961-ம் ஆண்டு ஆரம்பத்தில் அவர் நோய்வாய்ப்படும் காலம் வரையில், ஆன்மீக சம்பந்தமான பல விஷயங்கள் குறித்து இருவர்க்குமிடையேஅடிக்கடிகடிதப்போக்குவரத்து இருந்துவந்தது. அவரது அன்புக கடிதங்களிலும் அரிய கட்டுரைகளிலும் நாம் என்றும் அவரைக் காண முடியும். மரணமெனும் நிகழ்ச்சியால் அவரது சொரூபமும் அதன் நிழலும் அழிந்துவிடவில்லை. அவர் இப்போது எடுத்துள்ள புது உடலையும் நிழலையும் காணமுடியா நிலையில் நமது இந்திரியங்கள் இறந்தன. மரணத்தின் மாண்பில் அடங்கிய பேருண்மை இதுவேயாம்.

பிரிந்த பெரியார் என்ன இலட்சியத்திற்காகத் தமது வாழ்வை அர்ப்பணஞ் செய்தாரோ, அந்த இலட்சியத்தை நாமும் பேணி, அவர் ஆற்றிய பணியைத் தொடர்ந்து செய்வதே நாம் அவருக்குக் காட்ட வேண்டிய நன்றியும், அவரது ஆன்மாவின் திருப்திக்காகச் செய்யவேண்டிய கடமையுமாகும்.

# கல்லாக்கழிப்பர் தலையாயர்

வித்துவான் பொன். முத்துக்குமாரன்

மெய்ப் பொருளை உணர்ந்த வள்ளுவரது உள்ளமும் ஒரு நாள் வியப்பில் ஆழ்ந்தது. கல்வியின் பயனைக் கண்ணாரக் கண்டபின்னரும் கற்றவர்களும் கற்றலைக் கைவிட்டுவிடுகின்றார்களே! சாந்துணையும் ஒருவன் கல்லாதவாறு என்! பொருள்தேடும் வாழ்க்கையிற் புகுந்ததும் கல்விக்கு முற்றுப் புள்ளி வைத்துவிடும் வழக்கம் வள்ளுவர் காலத்திலேயே இருந்ததென்றால், இன்றும் அவ்வழக்கம் வேருன்றியிருப்பதில் விந்தை ஒன்றுமில்லை. இவ்வழக்கத்திற்கு விதிவிலக்கானவர் இந்நாளிலும் நம் கண்கான ஒருவர் இருந்தார். அவரைத் தமிழறிஞர் உலகம் கலைப்புலவர் என அழைக்கின்றது. நாலடியார் அவரைத் தலையாய பெருமகன் எனப் போற்றுமாறு சாற்றுகின்றது. "கல்லாக் கழிப்பர் தலையாயர்; நல்லவை துவ்வாக்கழிப்பர் இடையாயர்; கடைகள், இனிதுண்ணேம் ஆரப்பெறேம்யாம் என்னும் முனிவினாற் கண்பாடிலர்" என்பது நாலடிப் பாட்டு.

கலைப்புலவர் நாலடியைப் படித்த பின்னர்தான் கல்வியில் நாட்டம் கொண்டாரல்லர். 'யாதானும் நாடாம்'என்ற வள்ளுவர் கூற்றை நம்பியும் கல்வியில் கருத்தூன்றினர் அல்லர். கல்வி அவரது பிறப்பில் இயல்பாய் அமைந்தது. பொருளுக்காக இவ்வுலகம் எத்துணைப் போராடுகின்றது? பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் என வள்ளுவர் கூறிய பொருளையே ஒரு பொருளாக மதியாதவர் கலைப் புலவர் அவர்கள். பொருள் கிடைத்துவிட்டால் தாம் நெடுநாள் பெற விரும்பிய நூலை விலைக்குவாங்கிவிடுவார். அவர்க்குப் பொருள் அறிவு நூல்களே.

கலைப்புலவர் இல்லத்தில் அவரைச் சூழப் பல சிந்தனைச் செல்வர்களும் சிவஞானிகளும் கூடியிருப்பர். மெய்கண்டார், சங்கரர், தாயுமானர், நாவலர் முதலியோர் மட்டுமன்றி மேனாட்டுத் தத்துவ ஞானிகளும் அங்குக் காணப்படுவர். அவர்கள் மத்தியில் கலைப்புலவர் தமது பொழுதை இனிது கழிப்பர். அன்னாரோடு தாம் உள்ளங்கலந்து உறவாடிப் பெற்ற பெரும் பொருளைத் தம் நண்பர்க்கு எடுத்துரைத்தலும், காலம் வாய்ப்பின் நூலாகவும் கட்டுரையாகவும் வெளியிடலுமே கலைப்புலவர் கண்ட இன்பம். "தாமின்புறுவது உலகு இன்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்" என்ற குறளுக்கு இலக்கியமாய் விளங்கியவர் கலைப்புலவர் அவர்களே.

# அழகியற் கலைஞர்

— பண்டிதர் கா. பொ. இரத்தினம் —

கலைப்புலவர் நவரத்தினம் அவர்களுடைய மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவர் தமிழுக்கும் சைவத்துக்கும் பலதுறைகளில் பணியாற்றினர்; பலபணிகளை ஆற்றுதற்குத் திட்டமிட்டிருந்தார்.

யாழ்ப்பாண நகரத்தில் முப்பது ஆண்டுகளுக்கு முன்னரே கலாநிலயத்தை நிறுவி, யாழ்ப்பாணத்தைத் தமிழ் நிலையமாக ஆக்கிய பெருஞ் செயலாளர் அவர். தமிழ்மணம் அருகிவிட்ட யாழ்நகரைத் தமிழ் மயமாக்க அவர் அரும்பாடுபட்டார்.

அவர் ஓர் அழகியற் கலைஞர். கலையின்பத்தை அனுபவித்துத் தம் வாழ்வையே கலைமயமாக்கியவர். சிற்பககலைப் புலமையில் அவருக்கு இணையானவர்கள் ஈழத்தில் இல்லை எனலாம். அவருடைய கலைப்புலமையையும் சமய ஆராய்ச்சியையும் அவர் எழுதிய பல நூல்கள் நன்கு காட்டுகின்றன.

கலைப்பணி, தமிழ்ப்பணி, சமயப் பணிகள் மட்டுமன்றிச் சமூகப் பணியினையும் அவர் நன்கு செய்துளர். தமிழினத்தின் சாபக்கேடான சாதிவேற்றுமையையும், சைவசமயத்தைப் பாழாக்கும் தீண்டாமைபாராட்டலையும் ஒழிப்பதற்கு ஓயாது பாடுபட்ட உத்தமர் அவர். இவற்றை ஒழிக்கவேண்டுமென்று சொல்லுதற்குத்தானும் நெஞ்சுரமின்றி, மாவிலும் ஒட்டாமல் மாங்காயிலும் ஒட்டாமல் வாழும் அறிஞர்களையும் தலைவர்களையும் நிறையக் கொண்ட நம்மினத்திலே, கொடுமையானவை எனத்தாம் உணர்ந்தவற்றை அஞ்சாது எடுத்துரைத்துத் தமிழினத்தைச் சீர்திருத்தமுயன்ற ஆண்மையாளர் அவர் என்பதை எடுத்துரைத்தல் இன்றியமையாதது. தீண்டாமையை-சாதி வேற்றுமையை - நீக்கித் தமிழ் மக்களைச் சாதிமதவேறுபாடின்றி ஒன்றுபடுத்தமுயலும் எமது தமிழ் மறைக்கழகத்தின் உறுப்பினராகவும் இவர் இருந்து எமது பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கினர். இவரைப் பிரிந்து துன்புறும் இவருடைய மனைவியாருக்கும் சுற்றத்தாருக்கும் எமது தமிழ் மறைக்கழகத்தின் கையறு நிலைப்பரிவினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# தமிழ் வளர்ச்சிக் கழகம்

(The Tamil Academy)

தி. சு. அவினாசிலிங்கம் கலைக் களஞ்சியக் காரியாலயம்,

'சர்வகலாசாலைக் கட்டிடம்'

சேப்பாக்கம், சென்னை 5.

12-5-1951.

அன்பார்ந்த திரு. கே. நவரத்தினம் அவர்களுக்கு,

நமஸ்காரம். இலங்கையிலிருந்து நேராக டில்லி, கல்கத்தா முதலிய இடங்களுக்குச் சென்று இன்றுதான் இங்கு திரும்புகிறேன். திரும்பியதும் தமிழ் விழா சம்பந்தமாக நீங்கள் எல்லோரும் செய்த அரிய வேலைகளுக்கு எங்கள் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

விழா மிகச் சிறப்பாக நடந்தேறியது. அதற்குக் காரணம் தாங்களும் இதர நண்பர்களும் தமிழின்பால் எல்லை இல்லா அன்பு பூண்டு உழைத்ததே ஆகும். இந்தியாவிலிருந்து வந்த நண்பர்கள் அனைவருக்கும் மிகுந்த திருப்தி அளித்தது.

தங்களுக்கு இதன் மூலம் தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கு ஏற்பட்டிருக்கும் தொடர்பும், தமிழ் அன்னைக்கு சேர்ந்து செய்யக்கூடிய சேவையும், என்றும் நிலைத்திருக்க வேண்டும் என்பது தான் எங்கள் அவா.

சந்தர்ப்பம் வாய்க்கும்போது தாங்கள் அவசியம் இனிமேல் நடக்கும் விழாக்களில் கலந்து கொள்ள வேண்டும் தங்களுக்கு எங்கள் அன்புகலந்தநன்றி. அனைவருக்கும் அன்பு.

திரு. கே. நவரத்தினம்,
பி. ஏ. தம்பி லேன்,
யாழ்ப்பாணம்.

தங்கள் அன்புள்ள
அவினாசிலிங்கம்

# கலைப்புலவரின் ஆத்மீக வாழ்க்கை

-- ச. அம்பிகைபாகன் --

**1927**ம் ஆண்டில் யான் இந்துக்கல்லூரியில் படித்த காலத்தில், நெடுங்காலம் இராமநாதன் கல்லூரியிலும் பின் சில காலம் வைத்தீசுவர வித்தியாலயத்திலும் ஆசிரியராயிருந்தவரும் முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்களின் தந்தையாருமான திரு. செ. மயில்வாகனம் அவர்களுடன் வண்ணார் பண்ணையில் சில காலம் தங்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. நான் 'கேம்பிரிட்ஜ் சீனியர்' பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் சில நூல்களை வாசிக்க விரும்புவதாக திரு. மயில்வாகனம் அவர்களிடம் கூறினேன். அதற்கு அவர், "புத்தகப் பித்துப்பிடித்த ஒருவர் இருக்கிறார். அவரை உனக்கு அறிமுகப்படுத்தி விடுகிறேன். அவரிடமிருந்து உனக்குத் தேவையான புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம்" என்று கூறி கலைப்புலவர் அவர்களை எனக்கு அறிமுகஞ் செய்து வைத்தார். அன்று தொடக்கம் அவர் இறக்கும் நாள் வரை எனது அறிவுப் பசியைத் தீர்ப்பதற்குப்பேருதவியாயிருந்தார்.

திரு. மயில்வாகனம் அவர்களுடன் வாழ்ந்தபொழுது ஒரு சிவராத்திரி தினத்தை, நாம் வசித்த இல்லத்தில் கொண்டாடினோம். அதற்கு யோகர் சுவாமிகளும், திரு. நவரத்தினமும், வேறு பல அன்பர்களும் வந்திருந்தார்கள். அன்றிரவு முழுவதும் சுவாமிகளும் திரு. நவரத்தினமும் இருந்த இடம் விட்டு அசையாமல் தியானத்தில் அமர்ந்திருந்தனர். காலை ஐந்து மணியளவில் சுவாமிகள் தான் முதல் எழுந்து வெளியே போனதாக ஞாபகம். இதிலிருந்து திரு. நவரத்தினத்தின் சாதனை அந்தக் காலத்தில் எவ்வளவு தீவிரமாக இருந்ததென்பதை அறியலாம்.

### வாழ்க்கையில் திருப்பம்

திரு. நவரத்தினம் அவர்கள், தமது வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியவை சுவாமி சர்வானந்தரின் சொற்பொழிவுகள் என்று பலமுறை கூறியுள்ளார். சுவாமி சர்வானந்தர் இலங்கைக்கு 1916-ம் ஆண்டில் விஜயம் செய்தாரென்பதும் அந்தக் காலத்தில்தான் இராமகிருஷ்ண சங்கம் வைத்திசுவர வித்தியாலயத்தைக் கையேற்றதென்பதும் குறிப்பிடத்தக்கன. தாம்கிறிஸ்தவ கல்லூரியில் படித்தபடியால்இந்து சமயத்தின் சிறப்பை அறிந்திருக்க முடியவில்லையென்றும், சர்வானந்தரின் சொற்பொழிவுகள் மூலமே சனாதன தர்மத்தின் சிறப்பியல்புகளை அறிய முடிந்ததென்றும், இதன் பின்தான் தாம் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் போதனைகளையும் சுவாமி விவேகானந்தரின் சொற்பொழிவுகளையும் படித்துப் பயன் அடைந்ததாகவும் கூறுவர். இந்து சமயத்தின் சிறப்பியல்புகளையும், நுணுக்கங்களையும் அறிவதற்கு சுவாமி விவேகானந்தரின் நூல்கள் போல் வேறொன்றும் உதவி செய்யாதென்பது அவரது முடிவான கொள்கையாகும். அவர் இறக்க ஒருவாரத்துக்கு முன், அடுத்த வருடம் வரவிருக்கும் விவேகானந்தர் நூற்றுண்டு விழாவின் போது யாழ்ப்பாணத்தில் விவேகானந்தருக்கு ஒருதக்கஞாபகச்சின்னம் ஏற்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தினர்.

இந்தக் காலத்தில் திரு. நவரத்தினம் அவர்கள் வண்ணை வைத்தீசுவரன் கோயில், பெருமாள் கோயில் முதலிய கோயில்களுக்குச் சென்று முறையாக வழிபாடு செய்து வந்தார். பெருமாள் கோயிலில் பஜனையில் பாடுவதற்காக இவர் சில பாடல்களை இயற்றியுள்ளார் என்பதை அறிய சிலர் ஆச்சரியப்படுவர்.

### குரு தரிசனம்

திரு. நவரத்தினம் அவர்கள் தாம் முதன்முதல் யோகர்சுவாமிகளைச் சந்தித்ததைப் பற்றி எங்களுக்குப் பலமுறை கூறியுள்ளார். இந்தச் சந்திப்பை ஏற்படுத்தியவர் காலஞ்சென்ற திரு. டி.என். சுப்பையாவாகும். அந்தக் காலத்தில் (1919) யோகர் சுவாமிகளை அறிந்தவர் மிகக்சிலரே. யோகர் சுவாமிகள் அந்தக்காலத்தில் பெரும்பாலான பொழுதை கொழும்புத்துறைச் சந்தியிலுள்ள இலுப்பை மரத்தின் கீழ்த்தான் செலவழிப்பார்; வெயில், மழை, பனி என்பவற்றைப் பொருட்படுத்த மாட்டார். சாதாரண மக்கள் அவர்களை அணுகுவது கிடையாது. திரு. நவரத்தினம் போனபொழுது சுவாமிகள் தியானத்தில் இருந்ததாகவும் கண் விழித்த பின் திரு. நவரத்தினத்துடன் அன்பாகப் பேசியதாகவும் சமயம் வாய்க்கும்போதெல்லாம் வரும்படி கூறியதாகவும் திரு.நவரத்தினத்திடமிருந்து அறிந்தோம்.

அன்று தொடக்கம் திரு.நவரத்தினம் யோகர் சுவாமிகளைக் குருவாகப் போற்றிவந்தார். ஆரம்ப காலத்தில் சுவாமிகளும் திரு.நவரத்தினமும் இணைபிரியாது வாழ்ந்து வந்தனர். தினசரி யோகர் சுவாமிகள் நவரத்தினம் வீட்டுக்குப்போவார்; சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் விடுதலை நாட்களிலும், இருவரும் ஊருராய்க் கால்நடையாய்ச் செல்வர். இப்படிச் செல்லும்பொழுது அநேகமாக செல்லாச்சியம்மா வீட்டுக்குப் போவது வழக்கம். சாயந்தர வேளைகளில் யாழ்ப்பாணம் முற்றவெளியில் இருந்து அரவிந்தர் நூல்களையோ விவேகானந்தர் நூல்களையோ திரு. நவரத்தினம் முதலியோர் வாசிக்க சுவாமிகள் கேட்டுக்கொண்டிருப்பர். இந்தக் கூட்டத்தில் திரு. மயில்வாகனமும், இப்பொழுது இலங்கை ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கத் தலைவராக விளங்கும் சுவாமி பிரேமாத்மானந்தரும் இருந்தனர்.

திரு. நவரத்தினம் அவர்கள் பொதுப் பணியில் ஈடுபட்ட பின்னர் சுவாமிகளை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புக் குறைந்தது. ஆனாலும் சுவாமிகளின் மீதுள்ள பக்தி எள்ளளவேனும் குறையவில்லை. என்னைக் காணும்போதெல்லாம் சுவாமிகளின் முதற்கேள்வி "நவரத்தினத்தின் சுகமெப்படி? இப்பொழுது என்ன செய்கிறான்?" என்பதுதான்.

திரு நவரத்தினம் அவர்கள் நோய்வாய்ப்பட்டு ஆபத்தான நிலைகளில் இருக்கும் பொழுதெல்லாம் சுவாமிகள் அவர்கள் இல்லத்துக்குச் சென்று ஆறுதல் கூறி ஆசீர்வதித்தனர்.

யோகர் சுவாமிகளின் அநுபூதி நிலையின் சிறப்பை அறிந்த ஒரு சிலரில் திரு. நவரத்தினம் சிறந்தவராவர். ஆத்மீக வாழ்க்

(VIII ம் பக்கம் பார்க்க)



புதுடில்லியில் 1956-ம் ஆண்டு நடைபெற்ற ஆசிய எழுத்தாளர் மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு இந்திய ஜனதிபதி இராஜேந்திரபிரசாத் அளித்த விருந்தில் கலைப்புலவர் க. நவரத்தினம்.

## பண்புமிக்க பெரியார்

டாக்டர் எச். டபிள்யு. தம்பையா

கலைப் புலவர் நவரத்தினத்தின் அகால மரணம் அவருடைய நண்பர்களுக்கும், சுற்றமித்திரர்களுக்கும், அவரை அறிந்தவர்களுக்கும், அறிஞர்களுக்கும், மாணவர்களுக்கும் மிகுந்த வருத்தத்தைத் தரும்.

அவரிடம் வித்துவத்தன்மையும், ஆராய்ச்சி வன்மையும் தாழ்மையும், ஊக்கமும், முயற்சியும் நிறைய இருந்தன.

அவர் பல்கலைக்கழகப் பட்டதாரியல்ல. எனினும் பல்வேறு கலைத்துறைகளிலும் அவர் ஆழ்ந்த அறிவுடையவராய் விளங்கினர். ஓவியம், சிற்பம், வர்த்தக இயல் ஆகிய துறைகளில் அவர் பேரறிவு படைத்தவர். தென் இந்திய சிற்ப வடிவங்கள், இலங்கையில் கலைவளர்ச்சி, இந்திய ஓவியங்கள் ஆகிய நூல்களையும் இக்கால வணிப முறைபற்றிய நூல்களையும் இவர் எழுதியுள்ளார். இந்நூல்கள் தமிழ் உலகில் அவருக்குப் பெருமதிப்பைத் தேடிக்கொடுத்தன.

கலைப்புலவர் தத்துவஞானம், சமயம், சிற்பம், இலக்கியம் ஆகிய துறைகளில் சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கிடைக்கக்கூடிய நூல்களைப் பயின்று விற்பன்னராக விளங்கினர். "Arts and Crafts in Jaffna", "Development of Art in Ceylon", "Religion and Art" எனும் சிறந்த நூல்களை ஆங்கிலத்தில் எழுதி உதவியுள்ளார். இருவருடங்களுக்கு முன்னர் மருதனமடம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தில் இந்துமத தத்துவங்கள் பற்றி (Studies in Hinduism) அரிய ஆராய்ச்சி விரிவுரைகளை நிகழ்த்தினர். இவற்றின் தொகுப்பு இப்போது அச்சில் இருக்கின்றது.

தமிழ் மொழி விருத்திக்கும் கலை ஆக்கத்துக்கும் அவர் ஆற்றிய பணிகள் பல. கலைஞர்களினதும் எழுத்தாளர்களினதும் நண்பனாக விளங்கி அவர்களுக்கு உற்சாகம் ஊட்டியதுடன் அவர்களின் நூல்களை வெளியிடுவதற்கும் உதவி செய்துவந்தார்.

"கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக" என்ற வள்ளுவரின் வாக்குக்கு இலக்காக அவர் விளங்கினர் கற்றவர்களில் பண்புமிக்கவர்கள் சிலரே. கலைப்புலவர் நவரத்தினம் தாம் பெற்ற அறிவின் பேருக ஆசாரம், இரக்கம், வாய்மை, புனிதம் ஆகிய நற்பண்புகளுக்கு இருப்பிடமாக மிளிர்ந்தார்.

அவர் சைவசீலராக வாழ்ந்தபோதிலும் பிறச்சமயங்கள் கூறும் உண்மைகளையும் போற்றிவந்தார். இவற்றிலும் மேலாக சமுகத் தொண்டுகளிலும் ஆர்வத்துடன் பங்குபற்றி உழைத்தார். சமுகத் தொண்டர்களுக்கு அவருடைய வாழ்க்கை ஒரு சிறந்த எடுத்துக்காட்டெனின் அது மிகையாகாது.

ஈழமணித்திருநாட்டுக்கு அவருடைய பிரிவு ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும்.

## இந்துமத வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய கலைஞர்

(Iம் பக்கத் தொடர்ச்சி)

தது. 'அமிர்தபஜார் பத்திரிகை' என்னும் ஆங்கிலத் தினசரியில் வெளியான ஆசிரிய தலையங்கங்கள் தாய் நாட்டின் சுதந்திரத்துக்கு உழைப்பதற்குப் புதிய உணர்ச்சியையும் ஆர்வத்தையும் ஊட்டின.

நவரத்தினம் இயல்பாகவே ஒரு சைத்திரிகர். சுவாமி விவேகானந்தரின் உருவப்படங்களை வெவ்வேறு தோற்றங்களில் வரைந்து பார்த்து மகிழ்வார். அவர் வாலிபராக இருந்த போது, சுவாமி விவேகானந்தரின் உருவப்படங்களை வரைந்து தமது அறையில் வைத்து அழகு பார்ப்பார். அந்தப் படங்கள் கையால் வரையப்பெற்றனவோ அல்லது அச்சிடப்பெற்றனவோ என்று கண்டுபிடிப்பதே சிரமம்.

அவர் தேகப்பயிற்சியில் அதிக ஆர்வமுடையவர். ஒழுங்கான முறையில் தேகாப்பியாசங்களைச் செய்யும்படி இளைஞர்களுக்கு உற்சாகமூட்டுவார். தேகாப்பியாசங்களை எப்படிச் செய்யவேண்டும் என அவர் செய்தும் காட்டுவார்.

நல்லஎழுத்தாளனுகவும் பேச்சாளனுகவும் அவர்விளங்கினர். அத்வைத வேதாந்தம் சைவ சித்தாந்தம், சிற்பம், சித்திரம், கட்டட நிர்மாணம் ஆகிய துறைகளிலும் பிற கலைகளிலும் அவருக்குத் தெளிந்த ஞானம் இருந்தது.

## தந்தையாகவும் சகோதரனாகவும் விளங்கினர்

—டாக்டர் டி. ரி. நயில்ஸ்—

கலைப்புலவர் க. நவரத்தினமவர்களது இறுதிச் சடங்குகளின்போது வண. டாக்டர் டி. ரி. நயில்ஸ் அவர்கள் நிகழ்த்திய உரை:

கடவுளுடைய குண லட்சணங்களுள் நாம் பாராட்டும் ஒரு பெரிய லட்சணம் அவருடைய பட்சமாகும். கடவுள் மனிதர் மேல் பாராட்டும் பட்சம் கலைக்கிறதில்லை. குறைகிறதில்லை. மாறுகிறதில்லை. மனுஷர் குறைவுள்ளவர்கள். குற்றமுள்ளவர்கள். பெலவீனமுள்ளவர்கள். ஆனால் கடவுளோ கலைக்காத பட்சத்தினால் மனிதரை ஆதரிக்கிறார். நவரத்தினத்தினுடைய ஜீவியத்திலே காணப்பெற்ற எல்லா லட்சணங்களுள்ளும் நான் அதிகமாகக் கௌரவித்த லட்சணம் அவர்பாராட்டிய பட்சமே. அவரும் யார் யாரோடு சம்பந்தப்பட்டாரோ அவர்கள் என்ன விதமாக நடந்து கொண்டாலும் அவர்களோடு மாருத, கலைக்காத பட்சமுள்ளவராக இருந்தார்.

சைவ மக்களுக்குள் ஒரு தகப்பனுகவும் சகோதரனுகவும் விளங்கினர். அவர்கள் தங்கள் தேவைகளில் கூசாமல் அவரிடம் வந்தார்கள். எல்லார் மத்தியிலும் ஒப்புரவைக் கொண்டுவரக்கூடிய மனப்பானமையுடையவராக இருந்தார். எல்லோரும் எந்த மார்க்கத்தவராயிருந்தாலென்ன, எந்தச்சாதியைச் சேர்ந்தவர்களாயிருந்தாலென்ன, எந்தத்தேசத்தவர்களாயிருந்தாலென்ன, ஒருவரோடொருவர் சமாதானமாய் வாழவேண்டுமென்று விரும்பினர். அதற்காக உழைத்தார்.

கல்லூரியிலே கலைப்புலவர் தம் மாணவரால் அதிகமாக மதிக்கப்பட்டார். தம் உடன் ஆசிரியருக்குள் ஆலோசனைக் கர்த்தாவாக இருந்தார். இப்பொழுது இறந்து விட்டார் என்று சொல்லுகிறோம். இறந்து விட்டார் என்று சொல்லும் பொழுது கடவுளிடம் போய் விட்டார் என்று அர்த்தம்.

# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அளித்த

# "ஜெம் நவரத்தினம்"

—கண்ணப்பன்—

சமீபத்தில் மறைந்த நவரத்தினப் பெரியார் அவருடைய உற்ற சிநேகிதர்களுக்கும் அவரின் பாரியாருக்கும் ஜெம் நவரத்தினம் என்ற அன்பு முகவுரைப் பெயரால் வழங்கப்பெற்றார். இவர் யாழ். மத்திய கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் இவரின் மாணவ நண்பர்களால் இவருக்கு இடப்பட்ட இவ்வன்புப்பட்டம் இவருடன் பிற்காலத்திலும் தொடர்ந்து வந்தது. இவரின் சீவியம், இப்பட்டத்துக்கு உவப்பாக இளமைப் பராயம் தொட்டு உயிர் பிரியும் வரையும் சொல்லிலும், செயலிலும், நடைமுறையிலுப் ஒளிவீசும் இரத்தினமாக இருந்துவந்தது.

அவரின் இளமைக் காலத்தில் கல்லூரியின் அதிபராயிருந்த கனம் உவில்க்ஸ் என்பவர் அவரின் சிநேகிதர் ஒருவருக்கு சுவாமி விவேகானந்தரை மெச்சிப் பேசியதைக் கேட்டதும், இவருக்கு விவேகானந்தரின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்க ஓர் ஆவல் உண்டானது. சுவாமி விவேகானந்தரின் சரித்திர வரலாற்றை ஒரு சிறிய புத்தகத்தில் ஊக்கத்துடன் படித்ததால் அவரின் உள்ளத்தில் புத்துயிர் கொடுக்கும் ஈவம் தோன்றியதாக அவர் தமது நண்பர்களுக்கு சுவையுடன் கூறுவார். அந்தப் புத்துயிரின் பலனாக ஆத்மீக சீவியத்தை வளரச் செய்யும் பல புத்தகங்களையும் வெளியீடுகளையும் படித்து ரசித்து நாளுக்குநாள் தனது ஆத்ம எழுச்சியை ஓங்கச் செய்ததாக அறியக் கிடக்கிறது. இவ்வாறான பெருநோக்குடன் இவரின் ரகசிய சீவியத்தை நடத்திவரும்காலத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் அடிச்சுவட்டில் தோன்றிய ஒளிச்சுடராகிய சுவாமி சர்வானந்தாஜீ யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து இந்துக் கல்லூரியில் ஞான உபதேசம் அடங்கிய ஓர் உபந்நியாசம் செய்யும் செய்தியைக் கேள்விப்பட்டு இளைஞர் நவரத்தினமும் அங்கு சென்றிருந்தார். அந்த உபந்நியாசத்தைக் கேட்டதும் ஆத்ம சீவியம் மலர்வதற்கு ஆயத்தமாகவிருந்த அவரின் பருவ உள்ளம் விரிவடைவதற்கு தெய்வாதீனமாக வந்த குரு உபதேசமாகவிருந்தது. ஆத்ம வளர்ச்சிக்கே தனது வாழ்க்கையை அர்ப்பணம் செய்ய வேண்டுமென்று ஆசையிட்டு இராமகிருஷ்ண விவேகானந்த அடிச்சுவட்டில் தன் ஈடேற்றத்தைத் தேடுவதற்கு தீவிர முயற்சி எடுத்தார் அன்றிரவு முதல் அவர் ஆத்ம ஞானத்தைப் பெறுவதற்கு உறங்கா ஊக்கத்துடன் விவேகானந்தரின் ஆங்கில வரலாற்றைப் படிக்கத்தொடங்கினார். நான்கு பெருந் தொகுதிகளில் பதிக்கப்பெற்ற வரலாறு சாதாரண மனிதருக்கு படித்து விளங்க ஒரு மாதமாவது செல்லும். இவர் உண்ணு உறங்கா ஊக்கத்துடன் இத்தொகுதிகளை தீவிரமாகப் படித்து உள்ளத்தில் சுவைத்து அவரின் ஞானக்கண்ணுல் பார்த்தறிந்து சுவாமி விவேகானந்தரின் யோக சாதனைகளையும் வேதாந்த உண்மைகளையும் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டார். இதன் பயனாக அவரின் சீவியத்தில் ஓர் அடிப்படை மாற்றம் ஏற்பட்டு அவர் உண்டுடுத்தி உலகத்தோர் போலிருந்த போதிலும் உள்ளத்தில் ஓர் உண்மைச் சிவ தொண்டனாக வாழ்ந்து வந்தார். அதன்பின் அவர் எந்த செயலைச் செய்தாலும் அதனைத் தன் ஆத்மலாபத்திற்கு ஓர் கர்மயோக சாதனையாகச் செய்தாரேயொழிய அவர் ஒருவித லௌகிய அல்லது உலகப் புகழைப் பெறுவதற்காகச் செய்திலார். அந்தக் காலத்தில் தான் சேர்த்த புத்தகங்கள் எல்லாவற்றையும் ஸ்ரீ ராமகிருஷ்ண நூல் நிலையமென்று பெயரிட்டு தான் வைத்திருந்த புத்தகங்களையும் வெளியீடுகளையும் ஸ்ரீ ராமகிருஷ்ண விவேகானந்தபிரத்தியட்சமாகக் காண்பித்த ஒளிச்சுவாலைக்கு ஒரு சாட்சியாகக் கருதி நடந்தார்.

இப்படி இவர் சீவித்தகாலத்தில் பாரத நாட்டில் அடிமை வாழ்வை ஒழித்து எக்காலமும் புண்ணிய பூமியாயிருந்த பாரதநாட்டை விடுதலை செய்து புத்துயிர் கொடுத்து அந்த நாட்டில் பண்டுதொட்டு துலங்கிய பரம்பரை ஞானத்தை உலகுக்குக் காட்ட முயன்ற விவேகானந்தரின் அடிச்சுவட்டில் தோன்றிய ஞானிகளும் தேசாபிமானிகளும் இயற்றிய பல நூல்களை ஆவலுடன்தேடி ஆர்வத்துடன் படித்து ஆராய்ந்துவந்தார். இவர் படித்த மேதாவிகளில் விசேஷமாய் சேர் ஜோன் வூட்றூவ் என்ற இந்திய ஞானக் கடலாகிய நீதிபதியின் நூல்களையும் அரவிந்த கோஷின் பகவத் கீதை உரை விளக்கங்களையும் கற்று இந்து சமயத்தின் ஆத்மீக சீவியத்தை பண்டுதொட்டு வளர்த்துவந்த ஞானப்பொக்கிஷங்களைச் சேகரித்துவந்தார். இதன் தொடர்பாக இந்தியக் கலை ஞானிகளில் முதல்வராயிருந்த டாக்டர் ஆனந்தக் குமாரசுவாமியின் இந்தியக் கலை ஆராய்ச்சிகளையும் கற்று இந்தியக் கலைகளாகிய சிற்பம், ஓவியம், சங்கீதம், நடனம் ஆகியவைகளில் அடங்கிய ரசானுபவ ரகசியங்களை நன்குணர்ந்து அறிந்து சுவைத்துவந்தார். ரசானுபவம் பிரமானுபவத்திற்கு ஓர் உபகரணமாக இருந்ததென்ற கொள்கையை இவரும் அக்காலத்தில் பெற்று, படித்து, விளக்கினர்.

இவ்விதமாக ராமகிருஷ்ண விவேகானந்த அரவிந்த கோஷ் போன்ற யோகிகளின் சிவானுபவ வரலாறுகளையும் விளக்கங்களையும் உணர்ந்து ஆனந்தக் குமாரசுவாமி வூட்றூவ் போன்ற கலைஞர்களின் இந்தியக் கலைகளின் பெருநோக்கங்களை விளக்கிய நூல்களையும் படித்து மனம் விரிந்தவராகவும் உளம் விரிந்தவராகவும் வாழ்ந்து வரும் காலத்தில் இவரின் சீவியத்தில் இன்னுமோர் மாபெரும் மலர்ச்சி தோன்றுவதற்கு விதிவசமாக தனது ஆத்ம திருப்திக்கு வேண்டிய பெருங் குருவை அதிர்ஷ்டவசமாக இவரின் உற்ற சிநேகிதன் காலஞ்சென்ற வழக்கறிஞர் திரு ரி. என். சுப்பையாவின் உதவியினால் கொழும்புத்துறையில் சந்தித்தார். இவர் குருவைச் சந்தித்ததும் அன்றுதொட்டு உயிர்விடும்வரையும் அவரின் அடிமைச் சீடராய் வாழ்ந்து வந்தார். ஓர் உருவம் ஓர் நாமம் இல்லாதானை பிரத்தியட்சமாகக் காட்டிக் கொடுத்த இந்த ஞானக்குரு அவரின் உள்ளத்தைக் கவர்ந்து தன்னுடன் நாள்தோறும் அன்புற்ற சிநேகிதனாகக் கவர்ந்து கூட்டிக்கொண்டு உண்மைத் துறவிகளாக எண்மை ஞானக்குருவைத் தியானித்துக்கொண்டு நாடு சுற்றித் திரிந்தது எவரும் அறிந்த விஷயம். இந்தக் காலத்தில் இவருடன் உற்றுண்மையாகச் சிறந்த பெரியார்களுள் அளவெட்டி திரு. செல்லப்பா மயில்வாகனமும், ஸ்ரீகாந்தாவின் தந்தையார் ஒருவராவர். இவர்கள் வெளித்தோற்றமில்லாதிருந்த போதிலும் உண்மைத் துறவிகளாக வாழ்ந்தனர். ஆனல் துறவிகளென்று நிஷ்டையிலிருந்து தன்னலம் கருதுவது துறவியாகாது என்பதால் தேச ஊழியத்திலும் சமூக சேவையிலும் தொண்டு செய்ய முன்வந்தார். ஆனல் எந்தச் சேவையில் ஈடுபட்ட போதிலும் திரு. நவரத்தினமும் அவரது சிநேகிதர்களும் சேவையை தங்கள் ஆத்மலாபத்துக்கு உபகரணமாக அர்ப்பணம் செய்து சீவியத்தின் கர்மயோக சாதனையாகக் கருதித் தொண்டாற்றினர்களேயன்றி பட்டங்களுக்கும் பதவிகளுக்குமாகச் செய்தவர்களல்ல.

1920-ம் ஆண்டு தொட்டு 1930-ம் ஆண்டு வரையில் இந்திய தேசிய இயக்கங்களின் முறையில் இலங்கையிலும் தேசிய இயக்கங்களை தொடக்கி பொதுசனங்களின் தேசிய உணர்ச்சிகளையும் கலை உணர்ச்சிகளையும் அடிமையை ஒழிக்கும் விடுதலை வாஞ்சையையும் தூண்டுவதற்கு வேண்டிய இயக்கங்கள் பலவற்றில் கலந்துகொண்டார். மாணவர் மகாநாடென்னும் இளைஞர் இயக்கத்தில் முன்னணியில் நின்றவர்களில் நவரத்தினமும் ஒருவர். மதுவிலக்கு இயக்கத்தை ஆரம்பித்து யாழ்ப்பாணத்தில் சிலகாலமாக மது வகைகள் விற்கும் தவறனைகளை மூடச்செய்த வீரக் கோஷ்டியினரில் நவரத்தினம் ஒரு தீவிரவாதியாயிருந்தார். அரசியல் முறையில் இலங்கையில் சிங்கள – தமிழர் ஒற்றுமையை வளர்க்க வேண்டுமென்று எக்காலத்திலும் முயற்சித்த முற்போக்காளர்களில் நவரத்தினமும் ஒருவர். எங்கள் சமுதாயத்தை உருக்கி அழித்த சமூக ஊழல்களை ஒழிக்க முயன்ற மேதாவிகளில் அஞ்சா நெஞ்சத்துடன் தொண்டாற்றி வந்தவர்களில் நவரத்தினம் ஒருவர். தீண்டாமையை ஒழித்து சாதித்துவேஷங்களை அழித்து சிறுபான்மைத் தமிழர்களுக்கு பள்ளிக்கூடங்களிலும் பொதுநிலையங்களிலும் சம உரிமைகளை கொடுக்கவேண்டுமென்றுதீவிர முயற்சிகள் செய்தவர்களில் நவரத்தினம் ஒரு தளகர்த்தர். சமீப காலத்தில் இந்து மதத்தைப் பாதிக்கும் பிரிவினைகளை ஒழிக்கும் வண்ணம் சிறுபான்மைத் தமிழரை ஆலயப் பிரவேசம் செய்வித்து, வேற்றுமையின்றி இறைவனை வழிபட உரிமைகள் கொடுக்க முயன்றவர்களில் நவரத்தினமும் ஒருவர்.

எந்த விஷயத்திலும் போதனைக்கு முன் சாதனை என்ற பெருங் கருத்தே நவரத்தினத்தின் குறிக்கோளாயிருந்தது. அவர் ஆசிரியராயிருந்த காலத்தில் எல்லாராலும் புறக்கணிக்கப்பட்ட வர்த்தக பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியராக யாழ் மத்திய கல்லூரியில் கடமையாற்றிவந்தார். அந்தக் காலத்தில் மேற்படிப்பு உதவாத மாணவர்களையே வர்த்தக பாட வகுப்புக்குச் சாட்டிவிடுவார்கள். ஆனல் பள்ளிக்கூடத்தைப் புறக்கணித்த மாணவர்கள் இவரின் வகுப்பில் படித்து வரும் காலத்தில் இவரைக் குருவாக வணங்கி இவரின் போதனையையும் சாதனையையும் கலனித்து தங்களை அறியாமலேயே தங்கள் சீவியம் நல்வழியில் மாறுவதையறிந்து அவர்கள் பொறுப்புள்ள மாணவர்களாக மாறி சோதனைகளில் சித்திபெற்று எல்லோரும் கணிக்கப்பெற்ற பெரும் உத்தியோகத்திலும் பதவியிலும் தேறி வந்திருக்கிருர்கள். இவர் தன் சீவியத்தின் முற்பகுதியில் அறிவும் ஆற்றலும் உள்ளவராய் சமயநூல்கள் கலைநூல்களைக் கற்றவராய் இருந்த போதிலும் சொற்பொழிவாற்றவும் பத்திரிகைகளிலெழுதவும் நெடுங் காலமாகப் பின்நின்றதைக் கவனிக்கத்தக்கதாயிருக்கது. தன் சீவியத்தில் ஆழ்ந்த அறிவும் ஆராச்சி நுணுக்கமும் வருமுன் பத்திரிகைக்கு எழுதுவதும் விரிவுரைகள் நிகழ்த்துவதும் முறையல்ல என்பது இவரது அடிப்படைக் கொள்கை.

கலையுணர்ச்சியைத் தூண்டுவதற்கும், கலைஅறிவை வளர்ப்பதற்கும், சமய நுண்கலை நூல் ஆராய்ச்சியைத் தொடங்குவதற்கும் உதவியாக 1930—31-ம் ஆண்டுகளில் கலாநிலையமென்ற ஓர் இயக்கத்தைத் தொடக்கினர். இந்த இயக்கத்தில் திரு. சு. நடேசன் தலைமையில் பல ஆராய்ச்சியாளர்களும் அறிஞர்களும் விரிவுரைகளியற்றி பல துறைகளின் ஆராய்ச்சிப் படிப்புகள் நடத்தி வந்தனர். இந்தக் காலத்தில் சங்கீதக் கலையை வளர்க்கும் வண்ணம் சங்கீத சமாஜம் என்னும் ஓர் இயக்கமும் திரு. மாசிலாமணியின் புதல்வியாகிய செல்வி மகேஸ்வரி தேவியால் கலாநிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டது. நாளடைவில் கலையும் சங்கீதமும் வளர்வதற்கு தெய்வச்செயலாக நவரத்தினத்திற்கும் மகேஸ்வரிக்கும் திருமணம் நிறைவேறியது. இதன்பின் திரு. நவரத்தினம் மகேஸ்வரி தேவியுடன் சாந்திநிகேதன் என்னும் இல்லத்தில் வாழ்ந்த காலத்தில் இவர்களது இல்லம் ஓர் கலைப்பொருட்கூடமாகவும் நூல் நிலையமாகவும், கலையறிவும் சமய அறிவும் வளர்க்கும் ஓர் நிலையமாகவும் யாழ்ப்பாணத்தில் இருந்தது. பண்டுதொட்டுப் பெயர்பெற்ற ஈழநாட்டில் புராதனக் கலையும் சமய அறிவும் குன்றியிருந்த காலத்தில் நூல்நிலையங்கள், ஓவியச் சாலைகள், உயர்கலாசாலைகளும் இல்லாத வறட்சியில் வருந்திய எங்கள நாட்டில் இவரின் இல்லம் ஆராய்ச்சிக்கும், கலையின் பத்தை நுகர்வதற்கும் ஓர் நிலைக்களமாகவிருந்தது பிற தேசங்களிலிருந்து வரும் கலை அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் இவரைச் சந்தித்து மெச்சாதவர்களில்லை. இவர் பலகாலமாகக் கற்றதன் பயனாக தென் இந்திய சிற்ப வடிவங்களைப் பற்றியும் இலங்கைக் கலைப் பொருள்களைப் பற்றியும் பல கட்டுரைகளும் நூல்களும் வெளியிட்டது எல்லோரும் அறிந்த விஷயம். இதை விட தற்கால முறையில் மேலைநாட்டு தத்துவ விஞ்ஞான முடிபுகளையொட்டிய பல சமய நூல்களையும் வெளியிட்டிருக்கிருர்.

இவரது ஆராய்ச்சிகளில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது Mysticism என்று சொல்லப்படும் ஞானிகளின் அனுபவ ரகசிய அநுபூதி முறையாகும். தற்கால முறையில் ஆங்கிலத்தில் வெளிவந்த பல நூல்களை இவர் இந்திய சிவானுபூதிச் சாஸ்திரங்களுடன் ஒப்பிட்டுப் பார்வையிட்டு கட்டுரைகளை எழுதிப் பிரசுரித்துள்ளார். உபநிடத கால ஞானிகளின் அநுபூதிகளையும் பௌத்த, கிறிஸ்தவ, மொகமதிய ஞானிகளின் அநுபூதிகளையும் ஞானசாஸ்திரங்கள் பலவற்றையும் படித்துச் சேகரித்து அவைகளைப் போலவே தமிழ்நாட்டு ஞானிகளின் சிவானுபூதிகளையும் விளக்க வேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தார். இவர் தனது குருவின் அனுபவ வரலாற்றையும் யாழ்ப்பாணத்தில் எல்லோருமறிய வாழ்ந்த சில தமிழ்ச் சிவஞானிகளின் வாழ்க்கை வரலாறுகளையும் உலகத்துக்கு விளக்கிக் காட்ட இருந்த ஆவலை நிறைவேற்ற இயலாமல் அவர் மறைந்தது மிகவும் வருத்தத்துக்குரிய விஷயமாகும். Mysticism என்னும் பொருளில் மேல்நாட்டில் வெளியான ஆராய்ச்சிகளையும் ஞானிகளின் அநுபூதிகளையும் 'பேரின்பக் காதல்' என்னும் தலைப்பில் கட்டுரைகளும் நூல்களும் இயற்றுவதற்காக இவர் சேர்த்து வைத்த ஆராய்ச்சிக் குறிப்புகளை உபயோகிக்காமலேயே மறைந்தது எமது துர்ப்பாக்கியமாகும்.

அவரின் வாழ்க்கை இலட்சியங்கள், நோக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றில் சிலவற்றை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமுடையதாகும். பாரத நாடு துறவறத்துக்கு இருப்பிடமாயிருந்த தென்றும் புண்ணிய பூமி என்றும் விவேகானந்தர் வர்ணித்தது பெரும் உண்மையென்று அவர் அடிக்கடி கூறுவார். காந்தியடிகள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த போது, அவரை நவரத்தினமும் சில இளைஞர்களும் சந்தித்தபோது விவேகானந்தர் பாரதபூமியை புண்ணிய பூமி என்று வர்ணித்தது சரியோவென்றும் அதற்கான ஆதாரங்களைக் காட்டுமாறும் காந்தியடிகளிடம் திரு. நவரத்தினம் கேட்டார். அதற்குக் காந்தியடிகள் விவேகானந்தர் கூறியது முழு உண்மையென்றும் துறவறம் விரும்பி துறவிகளாய் உலக சீவியத்தை வெறுத்து வீதிகளிலும் காடுகளிலும் வசித்து பித்தர்களைப் போல பாடிப்படித்து இறைவனைப் பாராட்டும் சாதுக்களின் தொகையில் பாரத நாட்டை வெல்ல உலகில் வேறு எந்த நாடும் கிடையாது என்று திடமாகச் சொன்னுர். பாரத நாட்டின் சேத்திரங்களையும் புராதன ஸ்தலங்களையும் அவர் ஏதோ முற்பிறப்பில் அறிந்த ஸ்தலங்களைப் போல மனோபாவனையில் வைத்திருந்தார். 1928-ம் ஆண்டில் இவர் தென் இந்தியாவுக்கு யாத்திரை செய்த பொழுது சிவஸ்தலங்களுக்குச் சென்று சிவனடியார்கள் பாடிப்போற்றியது போல உள்ளம் மலர்ந்து பிரார்த்தித்தார். முக்கியமாக காஞ்சி காமாட்சியம்மன் கோவிலில் ஆனந்தப் பரவசமாய்ப் பிரார்த்தித்து உள்ளங் கனிந்துருகி ஆனந்த நிலையில் இரவு முழுவதும் தன்னை மறந்திருந்தார். அண்மையில் டில்லியில் நடைபெற்ற எழுத்தாளர் மகாநாட்டிற்குச்சென்றிருந்தபோது அதற்கு அருகாமையிலுள்ள கிருஷ்ணர் பிறந்த இடத்தைப் பார்க்க ஆவல் கொண்டு கிருஷ்ணபுரிக்குச் சென்று செய்த தரிசனத்தை மெய் மகிழ்ச்சியுடன் பலருக்கும் பலமுறை உரைத்தார்.

இந்தியச் சிற்பம், சங்கீதம், ஓவியம், நடனம் யாவும் மனிதரின் வாழ்க்கைக்கு பெருந்துணையானவையென்பது அவரது அபிப்பிராயம். இவைவாழ்க்கையை சாந்தமாயும் அமைதியுடனும் கர்மயோக நெறியில் நின்று சிறப்பதற்கு உதவியாகும் உபகரணங்களென்பது அவரின் பெருங்கருத்தாகும். மேனாட்டு இயற்கை வடிவங்களையும் தற்கால நவீன கலை வடிவங்களை

(VIIம் பக்கம் பார்க்க)

# ஒரு பெரும் பிரம்மஞானி

— செ. மயில்வாகனம் —

கலைப்புலவர் திரு. க. நவரத்தினம் அவர்கள் தம்முடையவும் பிறருடையவும் ஆன்ம ஈடேற்றத்துக்காக சதாகாலமும் சலியாது உழைத்துவந்த ஒரு பெரும் "பிரம்ம ஞானி" என்பதை அத்துறையில் அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த ஒரு சிலரே அறிவர்.

1920-ம் ஆண்டுமுதல் ஆத்மீகத்துறையில் அவருடன் நெருங்கிய தொடர்புகொண்டு இணைபிரியாத தோழர்களாய் ஒரே குருவின் ஒரேகாலச் சீடர்களாய் சகபாடிகளாய் ஞானசாதனைகளில் ஈடுபட்டவர்களாய் நாம் இருவரும் வாழ்ந்தோம். அதனால் அவருடைய வாழ்க்கையின் இலட்சியம் என்னவாயிருந்தது என்பதை நான் நன்கு அறிவேன்.

அவருடைய சமய வாழ்க்கை 'சர்வம் பிரம்மம் கிஎதத், அயம் ஆன்மா பிரம்மம்', (ஈதெல்லாம் பிரம்மம் இந்த ஆன்மாவும் பிரம்மம் அல்லது முழுதும் உண்மை) என்னும் மாண்டுக்கிய உபநிடத மகாவாக்கியத்திற் கூறப்பட்டிருக்கும் அத்வைத வேதாந்த உண்மையை உயிர்நாடியாகக் கொண்டது. இந்த உபநிடதத்துக்கே, சகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகளின் குருவாகிய கௌடபாதர் என்னும் ஆசாரியர் 'மண்டுகிய காரிகை' என்னும் நூலை விளக்கவுரையாக எழுதியருளினார். சங்கராச்சாரிய சுவாமிகளும் மாண்டுக்கிய உபநிடதத்தையும், அதன் விளக்கமாகிய காரிகையையும் அடிப்படையாகக்கொண்டே உலகம் வியந்து போற்றும் அற்புத விரிவுரைகளை, பிரஸ்தானத்திரயங்களாகிய உபநிடதங்களுக்கும், பகவத்கீதைக்கும் பிரம்ம சூத்திரங்களுக்கும் எழுதி அருளினார்.

திரு. நவரத்தினம் அவர்கள் இந்த ஞானக்கண்கொண்டு உலகத்தையும் உலகவிவகாரங்களையும் உற்று நோக்குகிறார். உற்று நோக்கி உலகமும் உயிர்களும் இறைசொருபமே என்றும், தன் கடன் பணிசெய்து கிடப்பதே என்றும், 'கண்ணிற் காண்பது உன் காட்சி கைகயாற் ஞெழில்பண்ணல் பூசை பகர்வது மந்திரம்' என்றும் கருதும் திவ்விய காட்சியுடையாராய் தாம் செய்வனவற்றையெல்லாம் "சிவதொண்டாகக்"கருதிக் கடமைகளை ஆற்றி வந்தார். அதனால் அவர் தம் வாழ்க்கை முழுவதையும் சிவனுக்கே அர்ப்பணஞ் செய்து சிவனடியாராக வாழ்ந்தார்.

இந்த ஞானக்கண்கொண்டே கலையையும் கைப்பணிகளையும் நோக்கி அவற்றின் தெய்வீகத் தன்மைகளைக் கண்டு அவ்வாராய்ச்சிகளிலீடுபட்டார். கலைகளெல்லாம் தெய்வீகத்தன்மையை வெளிப்படுத்துவதற்கே அமைக்கப்பட்டன என்பது அவரது கொள்கை.

திரு. நவரத்தினம் அவர்கள், 'கற்பனவும் இனிமையும்' என்று கற்பதை நிறுத்தினர் அல்லர். 'யாதானும் நாடாமல் ஊராமால் என் ஒருவன், சாந்துணையும் கல்லாதவாறு' என்னும் தெய்வப்புலவர் திருவாக்கைப் பின்பற்றினர். தம் சொந்தச் சமய நூல்களையெல்லாம் துருவித் துருவி ஆராய்ந்தார். சங்கரர், இராமனுஜர், மாதவர் ஆகிய ஆசாரியர்களின் பாஷியங்களையெல்லாம் கற்ருர். பிற சமய நூல்களையெல்லாம் கற்ருர். காலத்துக்குக் காலம் வெளி வந்துகொண்டிருக்கும் புதிய புதிய ஆராய்ச்சிநூல்களையெல்லாம் கற்ருர். ஆனல் அவற்றையெல்லாம் கற்ருர். ஏன் கற்ருர்? உண்மையை அறிவதற்கல்ல. குருவருளாலும் சுவானுபூதியாலும் தாம் கண்ட உண்மைகளைப் பிறர் எவ்வாறு விளக்குகின்றனர்; எந்தக் கோணத்திலிருந்து பார்க்கின்றனர்; அவர்களுடைய அனுபவங்களை எவ்வாறு விளக்கியிருக்கின்றனர்; இவர்கள் கூற்றுகள் எவ்வாறு ஒன்ரேடொன்று ஒத்திருக்கின்றன என்று காண்பதற்கும், கண்டு மகிழ்வதற்கும் ஆகவே சாந்துணையும் கற்ருர் 'கங்குல் பகலற்ற திருக் காட்சியர்கள் கண்ட நெறி, எங்கும் ஒருநெறிகாண் எந்தாய் பராபரமே' என்று தாயுமானவர் கண்ட உண்மையை திரு. நவரத்தினம் கண்டு மகிழ்ந்திருந்தார்.

'கடவுளைக் கருத்தில்வை, கருமத்திற் கையையிடு' என்னும் கீதாவாக்கியத்தின்படி தம் கருமங்களையெல்லாம் சிவார்ப்பணமாகச் செய்து பெரும் கருமயோகியாய்த் திகழ்ந்தார். "பகுநாம் ஜன்மநாமந்தே ஞானவான்மாம் பிரபத்தியதே, சர்வம் வாசுதேவ சர்வமிதி சமகாத்மா துர்பல" பல சென்மங்களின் ஈற்றிலே ஞானவான் என்னை அடைகின்ருன் சர்வம் வாசுதேவன் (பிரம்மம்) என்று காண்கிருன். அவ்வித மகாத்மா கிடைத்தற்கரியன்' என்ற கீதாசாரியரின் வாக்கை, திரு. நவரத்தினத்தின் வாழ்க்கையை உற்றுநோக்குவோர், நினைவுகூரவேண்டியிருக்கிறது.

'மனை வாழ்க்கையில் ஈடுபட்டு இல்லறஞானியாக ஒருவன் வாழ்கின்ருன் காட்டில் வாழ்க்கையை மேற்கொண்டு துறவறஞானியாய் இன்னெருவன் வாழ்கின்ருன். சுவாமி இவர்களில் யார் பெரியார் என்று ஸ்ரீ ராமன் வசிட்டரைக் கேட்கிருன். "அவ் விருவரிதயமும் தண்ணென்றிருக்கின் வேற்றுமை ஓரிறையுமில்லை, அவ்விதய சீதளமே அனந்தவப் பயனகும்" என்று வசிட்டர் விடையிறுக்கின்ருர். இல்லற ஞானியாகிய திரு. நவரத்தினத்துக்கும் இக் கூற்று மிகப்பொருத்தமுடையது.

சீவன் முத்தர்கள் "நின்ற சைவார் புறத்தில் மயிற்ரேகை போல நிலைகலங்கார் மேருவைப்போல் நெஞ்சினுள்ளே' என்று வசிட்டபிரான் கூறியுள்ளார். எங்கள் நவரத்தினம் அவர்களும் என்ன நேர்ந்தாலும் மனம்கலங்காத மனத்திடம் படைத்திருந்தார். மரணத்திற்கும் அஞ்சினர் அல்லர். யாருக்கும் அஞ்சினர் அல்லர். சுண்ணவெண் சந்தனச் சாந்தும்...... தின்னென் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம் அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதுமில்லை" என்னும் இறுமாப்போடு வாழ்ந்தார் திரு நவரத்தினம் என்னும் சிவ தொண்டர்.

நண்பன் இரண்டாந்தடவை சுகவீனங்காரணமாக ஆஸ்பத்திரியில் இருந்தபோது நான் சென்று அவரிடம் உரையாடிக்கொண்டிருந்தேன். அவ்வேளையில் அவருடைய மனைவியாரும் அங்கில்லை அவருடைய சுவிகார புத்திரனும் அங்கில்லை. நான் கூறினேன் "நவம் உனக்கென்ன அறியவேண்டியவை வெல்லாம் அறிந்துவிட்டாய். அடைய வேண்டியபேறெல்லாம் பெற்றுவிட்டாய். நீ இறப்புக்கும் அஞ்சமாட்டாய். ஆனல் உனக்குப்பின் உன்னுடைய மகேஸ்வரிதேவி என் செய்வாள். அதுதான் எனக்குக் கவலை" என்று உடனே அவர் என்ன கூறினர் தெரியுமா? 'மாஸ்டர்' மகேஸ்வரி என்னை மணக்க முன்னரும் வாழ்ந்துவந்தவர் தான. நான் இறந்தால் இறந்த பின்னரும் வாழ்வார்தான் கடவுள் இருக்கிருர்" என்ருர். அவருடைய ஞான நிலையும் அஞ்சாநெஞ்சமும் கடவுள் நம்பிக்கையும் இதிலிருந்து தெரிகின்றதல்லவா?

திரு. நவரத்தினம் அவர்கள் சமயங்கடந்த மோன சமரச நிலையைத் தம் வாழ்க்கையிற் கடைப்பிடித்தார். அந்த மோன நிலையை அடைந்துவிட்டார். நாம் ஏன் கவலைப்படவேண்டும்?

## 'தமிழ்க்குலத்தின் மாணிக்கம்'

திரு. கே. கனகரத்தினம் அவர்கள் எழுதியது

திரு. நவரத்தினம் அவர்கள் தமிழ்க்குலத்தின் மாணிக்கமாய்த் திகழ்ந்தார். தமிழ்க் கலைக்கும் இலக்கியத்திற்கும் அவர் ஆற்றிய சேவைகள் நிகரற்றன. இந்து அறநிலைய விசாரணைச் சபையில் யான் பணி புரிந்த காலத்தில் யான் அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புக்கிடைத்தது. அச்சபை முன் அவர் தமது கருத்துக்களை அஞ்சாது துணிவுடன் எடுத்துரைத்தார். 1951-ம் ஆண்டில் தமிழ்விழாச் சபையின் செயலாளராய் இருந்து அவர் விலைமதிப்பற்ற அருப்பணி புரிந்தார். தமிழ்க் கலையுலகில் நிறைவேறப்படுதற்கான சாதனைகள் பலவற்றை அவர் விட்டுச்சென்றிருக்கின்ருர். தமிழ்க்கலையிலும் இலக்கியத்திலும் எவரெவர் ஆர்வம் மிக்கவரோ அவர்களுக்கெல்லாம் அவர் சிறந்த நண்பராய் விளங்கினர். அவரது தூய அன்பும் நுணுகிய செயற்றிறனும் குறித்து அவரது நட்புரிமையை யான் மேலாக மதிக்கின்றேன்.

எமது தமிழ்க்கலைக்கும் தமிழிசைக்கும் உங்களுக்கே யுரித்தான உயர்ந்த முறையில் பணியாற்றி அவற்றை முறையே உமது கணவரும் நீரும் சீர்திருத்திப் பாதுகாதது வளர்த்துவந்தமையை நோக்கும் போது, இந்துக் குடும்பத்தில் அமைய வேண்டிய இலட்சிய தம்பதிகளாக நீவிர் இருவீரும் களிப்புடன் இணைந்து வாழ்ந்தீர்கள் என்பது எனது கருத்து. இவ்விதமான தாம்பத்ய இணைப்பின் சிறப்பினை யான் வேறு எந்தக் குடும்பத்திலும் கண்டதில்லை. எமது தமிழ்க் கலைக்கும் சமயத்துக்கும் பல்லாண்டுகளாக ஒருங்கியைந்து பணியாற்றி, பின்னர் ஆருயிர்த் துணைவராம் அருமைக்கணவரைப் பிரிந்து பெருந்துயருறும் உங்கட்கு இறைவன் திருவருள் துணை நிற்பதாக.

## நூல்கள் தந்த புலவர்

— வ.மு. இரத்திநேஸ்வர ஐயர் —

கற்ருந் தொழுகு கலைப்புலவ! காசினியில்
கற்ரேய்ந்து வாழத் தரமிலையே — முற்றும்
தமிழுக்கு வேண்டுந் தகு நூல்கள் தந்தாய்
இமிழ்திரை ஞாலத்தே இன்று

இன்றிருந்தார் நாளை இராரென்ற பேருரையை
இன்றிருப் பாருன்னி இளைக்கவோ — கன்றி
நமன்
பற்றினன் நற்புலமைப்பண்பதனை யவ்வுலகில்
உற்றுரைப் பாயோ வுரை.

## "பூரண வாழ்வு வாழ்ந்த பெருமகன்"

வண. டாக்டர் ஜே. எஸ். மேதர் டி டி. அவர்கள் எழுதியது

திரு. நவரத்தினம் அவர்களை நீண்டகாலமாக யான் அறிவேன். அத்துடன் யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் மேற் பார்வைச் சபையில் அக்கிராசனராயும், வட இலங்கை மெதடிஸ்ற் திருச்சபையில் தலைவராயும் யான் இருந்த காலத்தில் அவருடன் மிகநெருங்கிப் பழகும் வாய்ப்புப் பெற்றேன். யாம் திருச்சபையைச் சேர்ந்தவர் என்ற முறையில் அவரை மிக உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து, அவரது தூயஒழுக்கம், நேர்மை, நம்பத்தகும் நல்லியல்பு, கடமையிற் கருத்துடைமை ஆகிய அரும்பண்புகள் குறித்து அன்னரை மிக மேலாக மதித்து நடந்தோம். எங்கள் கல்விப்பணி சம்பந்தப்பட்ட வகையில் அவர் எங்களுக்கோர் தூணக விளங்கினர். திரு. நவரத்தினம் அவர்கள் பூரணவாழ்வு வாழ்ந்தவர். அத்தகைய பெருமகனை நமக்குத் தந்த இறைவனை வாழ்த்துகிறோம்.

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அளித்த 'ஜெம் நவரத்தினம்'

(VIம் பக்கத் தொடர்ச்சி)

யும் அவர் ஒருபோதும் மெச்சவில்லை. தற்கால மனிதன் தன் உயிர் நிலையத்தை அறியாமல் தருமாறும் சீவியத்திற்கு தற்காலக் கலைவடிவங்கள் அறிகுறியென்று இகழ்ந்து பேசுவார். கல்வியின்நோக்கம் விவேகானந்தர் சொல்லியது போல் மனிதன் தன் உண்மை நிலையை அறிதற்குரிய மார்க்கமென்று விளக்குவார். அவரின் இலட்சியங்களுக்கு உதாரணமாக தாயுமானவர் க்ண்ணிகளை சுவைத்துக் கூறுவார். ' தன்னையறிந்து அருளே தாரகமாய் நிற்பதுவே உன்னையறிதற்குபாயம் பராபரமே' என்று தாயுமானவர் சொல்லியதுவே தமது உள்ளங்களை மக்கள் அறிந்துகொள்வதற்குரிய உபாயமென்பார். அவர் பல சமய ஞானிகளின் அநுபூதிக்கொள்கைகளை முறையாக ஆராய்ந்து கற்றதன் பயனக அவரின் அடிப்படைக் கொள்கை நோக்கமுடையதாயிருந்தது. இதற்கும் தாயுமானவரின் பின்வரும் கண்ணிகளையே அத்தாட்சியாக உரைப்பார்.

'கங்குல் பகலற்ற திருக்
காட்சியர் கண்டவழி
யெங்கு மொரு வழியே
எந்தாய் பராபரமே'

அவர் சிறு பராயம் தொட்டு தனது பெருநோக்காகிய ஆத்மலாபத்தைத் தேடும் அடியார்களையே தன் உற்ற சிநேகிதர்களெனக் கருதி வந்தார். இதற்கவர்

'கண்ணுவா ரேனுமுனைக்
கைகுவிய ராயினந்த
மண்ணுவார் நட்பை
மதியேன் பராபரமே'

என்ற தாயுமானவர் கண்ணியைக் கூறுவார். தனது நண்பர்களுக்கு மாத்திரமன்றி தன்னை நாடி வந்தவர்களுக்கும் அன்பும் கருணையும் காட்டும் தன்மையைத் தனையறியாமலேயே காண்பித்து வந்தார். தனது நடத்தைக்குக் குறிக்கோளாக

' எவ்வுயிரு மென்னுயிர்போ
லெண்ணி யிரங்கவு நின்
றெய்வ வருட்கருணை
செய்வாய் பராபரமே '

என்ற அடிகளைக் கூறுவார்.

இவரின் மறைவு நம் நாட்டில் ஒரு பேரொளி மறைந்ததற்குச் சமானம். தன் சீவியத்தை ஒளியுள்ள சீவியமாய், என்றும் தன் காயத்தைக் கோயிலாகவும் கடிமனத்தை அடிமையாகவும் ஆக்கியும், தன் உள்ளத்தை மலரச் செய்தும், வாழ்ந்தது மாத்திரமல்லாமல் அவரது உற்ற சிநேகிதர் உள்ளங்களிலும் உள்ள மலர்ச்சியை உண்டாகும் சக்தி வாய்ந்தவராயிருந்தார். இத்தகைய தீபம் மறைந்தது அவரின் உற்ருருக்கும் சிநேகிதருக்கும் மற்றும் அவரை அண்டியவர்களுக்கும் சொல்லி முடியாத ஒரு மிகப் பெரும் குறையாகும்.

## கலைத்தொண்டு

"தமிழ் மொழிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் செய்த தொண்டை ஸ்ரீ நவரத்தினம் தமிழ்ச் சிற்பத்துக்குச் செய்திருக்கின்ருர் என்று சொல்லலாம். தமிழ்நாட்டில்எந்தப் புத்தகசாலையில் "தென் இந்திய சிற்ப வடிவங்கள்" என்ற இந்த அரிய புத்தகம் வைக்கப்படவில்லையோ, அந்தப் புத்தகசாலையை மூடி விடுவதே உத்தமமாகும்."

கல்கி - ரா. கிருஷ்ணமூர்த்தி

# கலைப் புலவரின் நூல்களுக்கு அறிஞர்கள் அளித்த கருத்துரைகள்

## தென் இந்திய சிற்ப வடிவங்கள்

### கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை பாராட்டு

சிற்பக் கலை பற்றிய நூல்கள் ஆங்கிலத்தில் எத்தனையோ இருக்கின்றன. அவற்றைப் பார்க்கும்போதெல்லாம் தமிழில் இத்தகைய நூல்கள் இன்னும் தோன்றவில்லையே! எப்பொழுது தோன்றுமோ? என்று எண்ணுவதுண்டு. அந்தக் குறை இப்போது தீர்ந்துவிட்டது. நண்பர் திரு க. நவரத்தினம் அவர்களால் தீர்ந்துவிட்டது. நண்பர் திரு. க. நவரத்தினம் அவர்களால் எழுதப்பட்டிருக்கும் "தென் இந்தியச் சிற்ப வடிவங்கள்" என்னும் அரிய நூலைத் தமிழுக்குக் கிடைத்த ஓர் நிதியம் என்றே சொல்லவேண்டும்.

இதன்கண் கடவுள் வழிபாட்டின் தோற்றம், வளர்ச்சி முதலியவை நன்ருக விளக்கப்பட்டிருக்கின்றன. வீர வழிபாட்டிலிருந்தே கோவில்கள் தோன்றின என்பதும், அவை ஆதியில் செங்கற்களினலேயே கட்டப்பட்டிருந்தன என்பதும் பழந் தமிழ் இலக்கியங்களின் துணை கொண்டு நன்கு நிலைநாட்டியிருக்கின்ருர். சிவ வழிபாடு திராவிடர்க்குரியது. பின்னரே ஆரியவகுப்பினர் மெல்ல மெல்ல அதனைக் கைக்கொண்டனர் என்பதைக் கேட்கும்போது பலரும் ஆச்சரியப்படலாம். ஆனல் அதுவே உண்மையென்று ஆசிரியர் ஆதாரத்துடன் விளக்குகின்ருர். இந்நூல் எழுத ஆசிரியருக்கு எத்தனையோ ஆங்கில நூல்கள் பயன்பட்டிருக்கின்றன. தக்க நூல்களைக் கற்று, தகுந்த இடங்களைப் பார்த்துப் பெற்ற அறிவின் பயனே இந்நூல் என்று சொல்வது குற்றமாகாது.

ஆனல் ஆசிரியரின் சிலகொள்கைகள் அப்படியே ஏற்றுக்கொள்ளத் தக்கனவாயில்லை. மொஹெஞ்சதாரோ, ஹாரப்பா என்பவை பற்றிச் சொல்லியிருப்பவை அதற்கு உதாரணங்கள். அவ்விடங்களில் காணப்படுவன திராவிடர் சம்பந்தப்பட்டவை என்பதும் திராவிடர் என்பார் தமிழரே என்பதும் ஆசிரியர் கொள்கைகள். அவை ஆரியருக்கு முந்திய மக்களின் நாகரிகம் என்பது மட்டும் உறுதி. ஆனல் திராவிடருடையவைதானு? என்பது இன்னும் தீர்மானமாகவில்லை. அன்றியும் திராவிடர் என்பவர் தமிழர்கள் மட்டுமா? என்பதும், அங்கு எழுதப்பட்டிருப்பவை தமிழ் எழுத்துக்களா? என்பதும், பிறவும் முடிவு கட்டப்படாத விஷயங்கள். ஆசிரியருடைய கொள்கை உறுதிப்படுமானல் தமிழினத்துக்கு உலகமே கைகூப்பி வணங்கத்தக்க பெருமை ஏற்பட்டுவிடுமென்பது திண்ணம். இது தவிரச் சில இலக்கியங்கள்பற்றிய கால நிர்ணயமும் கருத்து வேறுபாட்டுக்கு இடமானது.

நூலுள் காணப்படும் ஏனைய அமசங்கள் போற்றத் தகுந்தவைகளாகவே உள்ளன. இந்நூலைப் படித்தவர்கள் சிற்பக்கலை சம்பந்தமாகப் பெரும் பயன் பெறுவார்கள். கோவிலுக்குள் சென்று சிலைகளின் முன்நின்று பொம்மைப் பார்வைபார்த்துவிட்டு இதற்கு முன் வருவது போல இனிமேல் வரமாட்டார்கள்; நுணுகிப் பார்த்து அவற்றின் தெய்வீக இயல்புகளை உணர்வார்கள். மனவுணர்வு வளரப்பெற்று பக்திபரவசராகித் திளைத்து நிற்பார்கள். சந்தேகமில்லை. ஆலயங்களுக்குச்செல்லும் ஒவ்வொருவரும் — அவருள்ளும் சிவனை வணங்கும் ஒவ்வொருவரும் இந்நூலைப் கற்றறிய வேண்டுவது மிகவும் அவசியம்.

நூலின்புறத்தோற்றம், அகத்தோற்றம் இவை எவ்வளவு கவர்ச்சியாக அமைந்திருக்கின்றனவோ அவை போலவே நூற்பொருளும் இனிமையாகவும் ஒழுங்காகவும் அமைந்திருக்கின்றன. தமிழ் நடை யாவர்க்கும் எளிதில் பொருள் விளங்குமாறு அழகாய் அமைந்திருக்கிறது. இத்தகைய நூல்கள் தமிழில் இன்னும் பல வெளிவரவேண்டும். சிற்பக் கலையின் ஆழம், அகலம் எல்லாம் விளங்குமாறு பாகுபடுத்துப் புதுப்புது நூல்கள் எழுதித் தமிழ் வளம் பெருக்க ஆசிரியருக்கு எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் புரிவாராக.

## இக்கால வாணிப முறை

தமிழில் முதன் முதலில் தோன்றிய வாணிப நூல் இதுவே. இது பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சைக்கெனஎழுதப்பட்டுள்ளது. எனினும் இது பொதுவாக எல்லோருக்கும் பயன்படும் நூலாக உள்ளது.

மேனடுகளில் மிக விரைந்து வளர்ச்சி பெற்றுவரும் வாணிபத் துறையைப் பற்றித் தமிழில் எழுதுவதென்பது எளிதான செயலன்று. ஆனல், கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள் அரிதின் முயன்று இதில் பெருவெற்றியெய்தியுள்ளார்.

இந்நூல் பொருளாதாரம், வியாபாரம், ஏற்றுமதி வியாபாரம், இறக்குமதி வியாபாரம், போக்குவரத்து, வங்கித் தொழிலும் நாணய மாற்றும், நட்டவீடும் பண்டகசாலையிலிடலும், பொது ஆகிய பிரிவுகளைக் கொண்டுள்ளது. பொருளாதாரம், பொருளாதார விதிகள், ஆக்கமும் அதன் சாதனங்களும், தொழில்களின் வகைகள், வாணிபமும் அதன் பிரிவுகளும் என்பவை பொருளாதாரப் பிரிவில் விளக்கப்பட்டுள்ளன. வாணிபத்தின் பல பிரிவுகள், சரக்கு விற்பனை ஒப்பந்தம், வியாபார ஆவணங்கள், இன்னேரன்னவைகளை வியாபாரம் என்ற பகுதி விளக்குகின்றது. பிறநாட்டு வியாபாரம், தொழில் நிலையங்கள், தொழில் நோக்கமும் அமைப்பும் முதலியவைகளைப்பற்றி ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் என்ற பிரிவுகள் விளக்குகின்றன.

போக்குவரத்து என்ற பிரிவில் நிலப் போக்குவரத்து, நீர்ப்போக்குவரத்து, அஞ்சலகம் ஆகியவைகளைப்பற்றிய விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. பணம், வங்கிகள், வங்கித் தொழிலும் காசோலையும், உண்டியல்கள், உண்டியல் மாற்றல், பிறநாட்டு உண்டியல், பிறநாட்டு நாணய மாற்று முதலியவைகளை வங்கித் தொழிலும் நாணய மாற்றும் என்ற பிரிவில் ஆசிரியர் விளக்கியுள்ளார். நட்டவீட்டின் பிரிவுகள், நட்டவீட்டு உத்திரவாதம், நட்ட வீட்டு ஒழுங்குப் பத்திரங்கள், ஆயுள் உறுதி, பொதுப் பண்டசாலையின் பிரயோசனங்கள், ஒப்படைக்கும் உத்தரவு, கொள்வனவுப் பகுதி, விற்பனைப் பகுதி முதலியவைகள் நட்டவீடும், பண்டகசாலை இடலும் என்ற பிரிவில் விளக்கப்பட்டுள்ளன. இறுதியாகப் பொது என்னும் பிரிவு சரக்குகளைப் பங்கீடு செய்தல், முத்திரையிட்ட பொருள்கள் விலைத் தாவரிப்பு, வர்த்தகர்களும் தரகர்களும், பங்குகளும் தொகுதிகளும், காலைகள், கரடிகள், தெரிவுரிமைகள், மூலதனம், மிதக்கு முதல், வணிகக் கழகங்கள், பதிப்புரிமை, இழைகள், அரசாங்கக் கடன்கள், பண ஆவணங்கள், உதவிப்பணம் இன்னேரன்னவைகளை விளக்குகிறது.

இந்நூலின் இறுதியில் நான்கு அநுபந்தங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவையாவன: குறுக்கங்கள் (Abbreviations), சொற்ருெகுதி, ஆங்கிலம், சொற்ருெகுதி—தமிழ், அரும்பொருள் அட்டவணை. இந்நூலைக் கற்பார்க்கு இவை பெரிதும் பயனுடையவையாகும்.

வாணிபக் கலைச் சொற்களின் தொடர்களை இந்நூலாசிரியர் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். சான்ருக உரொக்கக் கழிவு (Cash discount) என்பது பின்வருமாறு உரைக்கப்பட்டுள்ளது.

"திரு. கந்தையா, திரு. பொன்னுத்துரைக்குச் சரக்குகளை வழக்கமான வியாபாரக் கழிவுடன் ரூ. 200க்குக் கடனுக்கு விற்ருர். பணத்தை ஒரு மாதத்துள் தந்தால் உரொக்கக் கழிவு 5% தருவதாகவும் வாக்களித்தார். திரு. பொன்னுத்துரை தவணைக்குள் பணத்தைச் செலுத்திய படியால் ரூபாய் 190 கொடுத்து, ரூபாய் 10-ஐக் கழிவாகப் பெற்ருர். இக் கழிவு உரொக்கக் கழிவு எனப்படும்.

இவ்வாறே ஒவ்வொரு கலைச் சொற்ருெடரையும் ஆசிரியர் விளக்கியிருக்கும் திறம் பெரிதும் போற்றற்குரியது.

இலங்கை அரச கருமமொழி அலுவலகத்தாரால் வெளியிடப்பெற்ற கலைச் சொற்களே பெரும்பாலும் இந்நூலில் பயன்படுத்தப் பட்டுள்ளன. விளக்கத்தின்பொருட்டுச் சில இடங்களில் வேறு சொற்களையும் பயன்படுத்தியுள்ளதாக ஆசிரியர் கூறுகிருர். கலைச் சொற்களின் தமிழாக்கம் பொருத்தமாக உள்ளன.

வாணிபக் கலையைக் கற்பிக்கும் முறையையும் ஆசிரியர் நூலின் தொடக்கத்தில் விளக்கியுள்ளார். அவருடைய அரிய முயற்சி பெரிதும் பாராட்டற்பாலது. இந்நூலின் வாயிலாக அவர் தமிழன்னைக்கு அரிய தொண்டினைச் செய்துள்ளார். இந்நூலினைப் பயில்வோர் வாணிபத் துறையைப் பற்றி அடிப்படைக் கருத்துக்களைத் தெள்ளிதின் உணரலாம்.

—கலைக் கதிர்

## Bhagavad Gita an Introductory Study— K. Navaratnam

### இந்நூல்பற்றி தத்துவ பேராசிரியர், டாக்டர் டி. எம். பி. மகாதேவன் கருத்து

பகவத் கீதையைக் சுற்குற்ற உதவியாக, கருத்தைக் கவரத்தக்கதும் ஆதாரபூர்வமானதுமாய நூற்பொருள் விளக்கத்தை திரு. க. நவரத்தினம் அவர்கள் இந்நூலில் வழங்கியுள்ளார்கள். ஆன்மஞான வளர்ச்சியையும் இம்மை வாழ்வுக்கு வேண்டிய அறிவுரைகளையும் நாடிப்பகவத்கீதையை நுணுகிக் கற்கப் புகுவார்க்கு ஆர்வமூட்டத் தக்கனவாய் அத்தெய்வ நூலில் அமைந்துள்ள அரிய கருத்துக்கள் எல்லாவற்றையும் இந்நூலாசிரியர் சுருங்கிய அளவிற்குள் விளக்கமாகத் தந்துள்ளனர். இவர் பகவான் அருளிய சுலோகங்களிலமைந்த சமய விதிகளை நேர்மை குன்ருது வலியுறுத்தியுள்ளார். கீதையினிடத்துப் பேரபிமானம் பூண்டவராய் ஒவ்வொரு மதத்தைக் கடைப்பிடிப்போர் அந்நூல் தமது மதத்தையே சார்ந்ததென வாதிக்கின்றனர். ஆயின், கீதையோ உண்மையில் ஒரு மதத்திற்கு மட்டும் உரியதன்று கிருஷ்ண பரமாத்மா தமது உபதேச மொழிகள் எல்லாம் எல்லார்க்கும் உரியன என்று அந்நூலில் பல இடங்களில் வெளிப்படையாகக் கூறியுள்ளார். அவர் தம்மை ஆதித்தியர்களில் விஷ்ணு எனவும் வாசுதேவன் எனவும் கூறியதுமட்டுமன்றி உருத்திரர்களில் சங்கரன் எனவும் தேவவீரர்களில் ஸ்கந்தன் எனவும் தெளிவாக அறிவுறுத்தியுள்ளார். பகவத் கீதையை உலக மக்களனைவரதும் வேதநூலாகப் பறைசாற்றும் நூலாகிய பகவத் கீதை நூற்பொருள் விளக்கத்தை வெளியிட்டதன் மூலம் திரு. க. நவரத்தினம் அவர்கள் மாணவ உலகிற்கு ஓர் உயரிய சேவை புரிந்துள்ளார்.

## கலைப் புலவரின் ஆத்மீக வாழ்க்கை

(Vம் பக்கத் தொடர்ச்சி)

கையில் பெறக்கூடிய தலை சிறந்த அநுபூதி நிலையை-உயர்வற உயர்ந்த நிலையை - "Transcendental Mysticism"- சுவாமிகள் பெற்றுள்ளாரென்பதை திரு. நவரத்தினம் பல ஆதாரங்களுடன் விளக்குவார். இப்படியான பெரும் பொருள் நம் மதியில் இருகக, கானல் நீரைக் கண்டோடித் திரியும் மக்களைக் கண்டு திரு நவரத்தினம் பரிதாபப்படுவார். ஒரு முறை ஒரு இளைஞன் சுவாமிகளின் தன்மையை விளக்கும்படி கேட்டதற்கு "கடவுளின் தன்மையைச் சொல்லால் விளக்க முடியுமானல் சுவாமிகளின் தன்மையையும் விளக்கலாம்" என்று திரு. நவரத்தினம் கூறினர்.

திரு. நவரத்தினம் அவர்கள் தாம் எழுதிய அதி உன்னத நூலாகிய 'தென்னிந்திய சிற்ப வடிவங்கள்' என்னும் நூலை சுவாமிகளுக்கு உரிமையாக்கியுள்ளார். கீழ்க்காணப்படும் அந்த உரிமை உரையில் அன்னரின் குருபக்தி நன்கு விளங்குகின்றது. "இந்திய இன்பக் கலைகளால் அறிவுறுத்தப்படும் அறநெறியினுக்கோர் உறையுளாய் அன்பு நெறி நிற்குந் தகுதியுடையோர் தம்மனத் திருளை அகற்றும் அறிவொளியாய் விளங்காநிற்கும் உத்தமரும் என்னை ஆண்டருளிய கருணை வாரிதியுமாகிய சற்குருநாதன் செய்ய பொற் பாதங்களுக்கு இந்நூல் ஏற்புடைத்தாகுக".

திரு. நவரத்தினம் அவர்களின் வாழ்க்கையை உற்று நோக்கும்போது அவருடைய இலட்சியங்களும் கலைப் பண்புகளும் மலருவதற்கு அன்னரின் மனைவி திருமதி மகேஸ்வரி தேவி எவ்வளவு தூரம் உறுதுணையாய் இருந்தாரென்பதை அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் தான் அறிவர். கலைப் பண்பு கணவன் மனைவி என்னும் இருவரிடத்திலும் நிறைந்திருந்த படியால்தான் அவர்கள் இல்லம் ஒரு கலைக்கோயிலாகத் திகழ்ந்தது. திரு. நவரத்தினம் அவர்களைச் சந்திக்க இந்தியாவில் இருந்தும் மேல் நாடுகளில் இருந்தும் பலர் அடிக்கடி வருவதுண்டு. இவர்களை எல்லாம் அகமகிழ்ந்து வரவேற்று திருமதி நவரத்தினம் உபசரித்தார்.

கணவன் வாழும்போது எப்படி அவர் இலட்சியங்களை நிறைவேற்றுவதற்கு உதவி புரிந்தாரோ அதேபோல் அவரது இலட்சியங்களை நிறைவேற்ற முன் வருவோருக்கு அவரைப் பிரிந்து வாழும் மனைவி உதவிபுரிவார் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

திரு. நவரத்தினம் அவர்களின் கலை ஆர்வத்தையும், தத்துவ சாத்திர அறிவையும், சமூக சேவையையும் சகலரும் அறிவர். ஆனல் இவற்றுக்கெல்லாம் ஆதாரமாகவும், அரணாகவும் இருந்தது அவரது ஆத்மீக வாழ்க்கையேயாகும்.

## Tamil Elements in Ceylon Culture

### என்னும் நூலைப்பற்றி

### [டாக்டர் எம். இராசமாணிக்கம் அளித்த கருத்து]

ஆராய்ச்சித் துறையில் புகழ்மிக்க கல்விமானுய் யாழ்ப்பாணத்தில் விளங்கும் கலைப்புலவர் திரு. க. நவரத்தினம் அவர்களால் வெளியிடப்பட்ட "இலங்கைக் கலாசாரத்துக்கு அடிப்படையாயமைந்ததமிழ்ப்பண்புகள்" என்னும் நூல் கருத்தைக்கவரவல்லதாயும் காலத்திற்கேற்றதாயும் பயன் நிறைந்ததாயும் உள்ளது.

தமிழரையும் சிங்களவரையும் பிரித்து வைக்கும் நோக்கமாக வஞ்சனையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்நாளில் இந்நூலாற்றும் பணி விலைமதிப்பற்றது.

ஆரிய திராவிட மக்களது வாழ்க்கைமுறைக் கலப்பினல் இந்து கலாசாரம் உருவானமை போலவே, சிங்கள தமிழ் மக்களது உயரிய சிந்தனைகளின் சேர்க்கையால் இலங்கைக் கலாசாரமும் உருவானதென்பதை இந்நூலாசிரியர் சிறந்த நூற்சான்றுகளுடன் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார்.

சிங்கள மொழி பிரதானமாக ஒரு திராவிடமொழியே என்ற கருத்தை வலியுறுத்தியிருப்பது தென்னிந்திய மக்களின் கருத்தைக் கவர்கின்றது. சிங்கள மொழியிலுள்ள சொற்ருெகுதியிற் பெரும்பாலான ஆரியச் சொற்களின்டியாகத் தோன்றியிருப்பினும், சிங்கள மொழியிலுள்ள இலக்கணத்தின் அடிப்படைப்பண்புகளும் பிரதான இயல்புகளும் தமிழிலக்கணத்தின் அடிப்படைப் பண்பு முதலியவற்ருேடு முற்றும் ஒத்திருக்கின்றன. அத்துடன் சிங்கள மொழி திராவிடமொழி மரபைச் சார்ந்தும் உள்ளது.

சிங்கள தமிழ் மக்களிடையே ஒற்றுமை நிலைபெற வேண்டும் என்பதை அவ்விரு மக்களது மொழி ஒப்புமையேயன்றி இன வரலாறு, சமயத்தொடர்பு, பழக்கவழக்கங்கள் ஆதியனவும் பெரிதும் உறுதிப்படுத்துகின்றன.

இலங்கைக் கலாசாரம் உருவாவதற்குத் தமிழ் மக்கள் உதவிய பங்கு எத்துணை என்பதை ஏற்ற சான்றுகளுடன் நிறுவுதற்கு எடுத்துக் கொண்ட முதல் முயற்சி இதுவே என்று யான் கருதுகின்றேன். இப பெரு முயற்சியில் ஈடுபட்டு அரும்பணி புரிந்த திரு. க. நவரத்தினம் அவர்களை எவ்வளவு வாழ்த்திலும் தகும்.

## பூஜ்யம் தபால்

சேர். ஒலிவர் எர்னஸ்ட் குணதிலக,
ஜி. ஸி. எம். ஜி, கே. ஸி. வி. ஓ., கே. பி. ஈ,
யாத்ரா மார்க்கம்,
பாரிஸ்.

அன்பரே!

தாங்கள் இலங்கைக்கு மீண்டும் திரும்புவது சந்தேகமே என்று ஒரு பிரிட்டிஷ் பத்திரிகை நிருபரிடம், விமானத்தில் செல்லுகையில் தெரிவித்ததைப் பார்த்தேன். மிக மன வருத்தமடைந்தேன். நீங்கள் அநேகமாகத் திரும்பிவரமாட்டீர்களென்று தான் நானும் நினைத்தேன்.

எழுபது ஆண்டுகளாகத் தாங்கள் இலங்கைக்கு பலபல பதவிகளிலிருந்து தொண்டாற்றினீர்கள். கிடைத்தற்கரிய கவர்னர் ஜெனரல் பதவியை 8 வருடகாலம் வகித்தீர்கள். பல பெரிய பெரிய பட்டங்களெல்லாம் பெற்றீர்கள். அப்படி இருந்தும் முடிவில் தாங்கள் பிறந்த நாட்டுக்கே திரும்பி வரமுடியாதபடி, பரதேசம் செல்லநேரிடுவதைப் பார்க்கையில், "நாடகமே உலகம் நாளை நடப்பதை யார் அறிவார்" என்ற வேதாந்தப் பாடல்தான் நினைவு வருகிறது.

"சதித்திட்டம் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. சில தீவிரவாதிகள் துப்பாக்கிமுனையைக் காட்டி, சில விஷயங்களில் என்னை நிர்ப்பந்திக்க நினைத்திருந்தனர். என்றாலும் நான் அதை ஒப்புக்கொண்டிருக்கவே மாட்டேன்" என்று அந்தநிருபரிடம்கூறினீர்களாம். ஒப்புக் கொள்ளாவிட்டால், அந்த துப்பாக்கிக் காரர்கள் என்னசெய்திருப்பர் என்பதை நினைக்கவே நெஞ்சு கூசுகிறது. பெரிய பதவி வகிப்பதில் தான் எவ்வளவு சங்கடம்!

என்றாலும் எனக்குஒருவிதத்தில் ஆறுதல். தாங்கள் துப்பாக்கி சதிகாரர் கையில் சிக்காமலும், இங்கு சதிவிசாரணை முதலிய வேதனைகளை அனுபவிக்காமலும், உயிருடன் பரதேசம் செல்லமுடிந்தது பெரிய காரியம்.

பாரிஸில் தங்களுக்குப் பல நண்பர்கள் இருப்பதாயும் அவர்களுடன் சில வாரங்கள் தங்கி இருக்கப் போவதாயும் அறிகிறேன். பூலோகசுவர்க்கமான பாரிஸிலே தங்கள் கவலைசளையெல்லாம் சற்றுவது மறந்து தாங்கள் நல்ல சுகமடையவேண்டுகிறேன்.

இப்படிக்கு
பூஜ்யம்.

குறிப்பு:—

தாங்கள் நிருபரிடம் கூறியதில் ஒரு விஷயம் எனக்கு மிக வியப்பளித்தது. தாங்கள் ஏழை என்று சொன்னீர்களாம். உண்மையாகவா? சட்டப்படி தங்களுக்கு வருடத்தில் எட்டாயிரம் பவுன் சம்பளம். சுமார் எட்டு வருடம் இதைப் பெற்றதுடன், மேற்கொண்டு 'லீவு' எடுக்காததற்காக 80 ஆயிரம் ரூபாய் பெறப்போவதாகவும் ஒரு செய்தியைப் படித்தேன். அப்படியிருந்தும் தாங்கள் ஏழையாயின், அது எனக்குப் புரியவில்லை!

வடமொழியில் ஒரு சுலோகமுண்டு, "உபர்யுபரி பச்யந்த: சர்வ ஏவ தரித்திரதி" மேலே மேலே பார்த்துக் கொண்டுபோனல், எல்லாருமே ஏழைகள் தான்" லண்டனிலுள்ள பணக்கார நண்பர்களைப் பார்த்துத்தான் அப்படிக் கூறினீர்கள் போலும்.

எப்படியும் தாங்கள் 70 வயதிலும் காலை 5 முதல் இரவு 11 மணி வரை வேலைசெய்ய விரும்புவதாயும், சிறப்பாக பிரிட்டனில் ஒரு வேலையைத் தேடிக்கொள்ள வேண்டியுள்ளதென்றும் தெரிவித்திருக்கிறீர்கள். அங்கு தங்கள் வேலையில்லாக் கஷ்டம் வெகு சீக்கிரத்தில் தீர்ந்துவிடு மென்பதே என் நம்பிக்கை.

"பூ"

# கலைஞர்கள் வருவதை தடுப்பது விவேகமல்ல

யாழ்ப்பாணம், ஞாயிறு

"என்ன நோக்கத்தோடு இந்திய இசையாளர் இலங்கைக்கு வருவதைத் தடுக்க வேண்டுமெனக் கோரப்படுகின்றதோ அந்த நோக்கம் உண்மையில் கலையின் தரத்தைக் குறைப்பது மட்டுமல்லாமல் இலங்கைக் கலைஞர்களது தரம் உயர்வதையும் பெரிதும் பாதிப்பதாக உள்ளது" என கொக்குவில் கலாபவன நடன ஆசிரியரான திரு. ஏ. சுப்பையா விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருக்கிறார்.

இந்தியகலைஞர்கள்வரவு தடைப்படுவதால்சில இலங்கைக்கலைஞர்களது வருவாய் உயர்வது உண்மையேயாயினும் இந்நாட்டுக் கலையின் தரம் குறைந்து விடுமென்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். இந்நாட்டுக் கலைஞர்களுக்குத் தாயகமாக உள்ள இந்திய நாட்டிலிருந்து உண்மையான கலைஞர்களின் வருகையைத் தடுத்து நமது கலைக்கு நாமே எல்லை வகுப்பவர்களாகிவிட்டால் வளர்ச்சியடையும் கலை உலகோடு நாமும் சேர்ந்து முன்னேறுமல் மிகவும் பின்தங்கியவர்களாகி விடுவோம். இலங்கையில் இசைக்கலை வளர்ச்சியடைந்து உச்சநிலை பெற்றுவிடவில்லை. கலைஞர் பரம்பரை தேய்ந்து கொண்டே வருகின்றது. இந்நாட்டின் நாகஸ்வர மேதைகளான திருவாளர்கள் அண்ணச்சாமி வைரவநாதர், முருகையா, கந்தசாமி, உருத்திராபதி, ராசா ஆகியோரும் தவில் மேதைகளான காமாட்சிசுந்தரம், சின்னத்தம்பி ஆகியோரின் வழித்தோன்றல்களில் அனேகரும் அவர்களது முன்னோர் ஆற்றிய கலைத்தொண்டைத் தொடர்ந்து ஆற்றுமல் வேறு உத்தியோகங்களையே விரும்பிச் சென்றுள்ளமையை நாம் காண்கின்றோம். இன்னும் இலங்கையில் உள்ள இசைக்கலைஞர் பலரும் இந்திய இசை வல்லாரின் சிஷ்ய பரம்பரையினராகவே இருப்பதையும்

(8-ம் பக்கம் பார்க்க)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

யாழ் மத்திய கல்லூரி விடுதிச்சாலைப் பழைய மாணவர் சங்கத்தின் இம் மாதக்கூட்டம் தலைவர் இர. குணராஜாவின் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் சங்கச் செயலாளர் திரு கிங்ஸிஸ் இராசநாயகம் "விடுதிச் சீர்திருத்தம்" பற்றிய மகஜரொன்றைத் தயாரித்துச் சமர்ப்பித்தார். இம் மகஜரைச் சங்கத்தினர் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர்.

## காங்கேசன்துறையில் பொதுவிளையாட்டு மைதானம்

காங்கேசன் துறை, சனி

சுமார் ரூபா ஒன்றரை லட்சம் பெறுமதியும், ஐம்பது பரப்பு விசாலமும் உள்ள நிலத்தில் ஓர் சிறந்த பொது விளையாட்டு மைதானம் அமைக்க காங்கேசன் துறையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

இவ் வருட வரவு செலவுத் திட்டத்தின் கீழ்ஓர் நூல்நிலையமும் பட்டின சபைக்கட்டிடத்தில் அமைக்கப்பட்டின சபை தீர்மானித்தது.

## இடமாற்றம்

பருத்தித்துறை, சனி

புலோலி மெதடிஸ்ட் தமிழ்க் கலவன் பாடசாலை ஆங்கில உதவி ஆசிரியர் திரு. பொ. பாலச்சந்திரன் 1-5-62 ல் இருந்து கரவெட்டி விஞயகர் வித்தியாசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

விநாயக வித்தியாலய ஆசிரியர் திரு கே. வேலாயுதம் மேற்படி தேதியில் இருந்து கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளார் எனவும் தெரியவருகிறது.

## பாடசாலையில் தண்ணீர் கஷ்டம்

வேலணை, சனி

வேலணை, சரஸ்வதிவித்தியாசாலை, வேலணை அ. மி. பாடசாலை ஆகிய இரண்டு பாடசாலைகளிலும் தண்ணீர் இல்லாது பாடசாலை குழந்தைகள் பெரும் கஷ்டமடைந்து வருகின்றார்கள்.

# உலக மேடை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கறையுடன் கவனித்து வந்தன என்பதை அறியமுடிந்தது. ஐ. நா. வில் இந்த அபாயத்தை ஒழித்துவிட வேண்டும் என விரும்பிய நாடுகளுக்கு தேர்தல் முடிவு ஏமாற்றத்தை அளித்துள்ளது வாஸ்தவமே. ஆனல் தொடர்ந்தும் இந்தியாவின் கட்சியைஎடுத்துரைக்கும் பிரதிநிதியாகவே உலக அரங்கில் மேனன் விளங்கவிருக்கிருர்.

தேர்தல் ஆரம்பமாவதற்கு முன்பே ஜெனிவா ஆயுதப் பரிகரண மகாநாட்டுக்குச் செல்லும் உயர்தரக் கோஷ்டிக்குத் தலைவராகத் திரு. மேனன் நியமிக்கப்பட்டதிலிருந்து, அவரது வெற்றியில் நேருவுக்கு நிச்சயம் நம்பிக்கை இருந்ததாய்த் தெரிகிறது. இதே சமயம் தமக்குப் பம்பாயில் அளிக்கப்பட்ட ஒரு வரவேற்பில் திரு. மேனனின் பேச்சு மேற்கு நாடுகளுக்கு ஓரளவு திகைப்பைமூட்டியிருக்கும். இந்தியா ரஷ்யாவைவிட மேற்கு நாடுகளுடனேயே அதிகம் சார்ந்து நிற்கிறதென்றும், தனி உரிமையை அங்கீகரிக்கும் ஜனநாயக அமைப்புமுறை இரு நாடுகளிலும் அமுலில் இருப்பதே இதற்குக் காரணம் என்றும் அவர் கூறியுள்ளது மனமாற்றத்தைப்பிரதிபலிக்கிறதா. அல்லதுவேறு உள்ளர்த்தம் கற்பிக்கிறதா என்பதுபற்றி அவைகள் யோசிக்கலாம். ஆயினும் மேனன் ஒருகம்யூனிஸ்டா இல்லையா என்பது யாருக்குமே புரியாத புதிராகவே இருக்கிறது. இவ்விஷயத்தில் தான் யார் என்பதை அவர் தெளிவாகக்காட்டியதே இல்லை. அவர் கம்யூனிஸ்டாயிருந்திருப்பின் பிரிட்டனில் இருக்கும் போது ஏன் கம்யூனிஸ்ட் கட்சியில் சேரவில்லை? தொழிற்கட்சி அங்கத்தினராகவே அவர் அங்கு செயலாற்றி வந்தார். அவர் கம்யூனிஸ்ட் அல்லவாயினும் இடதுசாரி மனப்பான்மை கொண்டவர் என்பது மட்டும்நிச்சயம். ஒருவேளை இடதுசாரியில் இடதுசாரியாக இருக்கக்கூடும். (தீவிர இடதுசாரி) அவரைப் பற்றிய கம்யூனிஸ்ட் பிரச்சினையை விவாதிப்பதால் நடைமுறையில் எவ்வித பலனுமில்லை.



# வாக்கெடுப்பை ஆட்சேபித்து மூவர் வெளியேற்றம்

## ஆனல் பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன் துறைப் பட்டின சபையின் விசேடக் கூட்டம் நேற்றுத் தலைவர் ஏ. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது மூன்று அங்கத்தினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

இக்கூட்டம் பட்டின சபையின் 6 வட்டாரங்களை 7 வட்டாரங்களாகப் பிரிப்பதுபற்றி ஆலோசிப்பதற்காகக் கூட்டப்பட்டது. தலைவர் உட்பட ஆறு அங்கத்தவர்களும் சமுகமளித்திருந்தனர்.

இதுசம்பந்தமாக உள்ளூராட்சி அதிபரிடமிருந்து வந்த கடிதம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டதும், 4ம் வட்டார அங்கத்தவர் திரு கனகசபை,சபையின் 6 வட்டாரங்களில் பெரியதும், வாக்காளர்களால் கூடியதுமான 4-ம் வட்டாரத்தை இரண்டாகப் பிரித்து பட்டின சபையின் ஆறுவட்டாரங்களை 7 ஆக உயர்த்தும்படி பிரேரித்தார். இதை 2ம் வட்டார அங்கத்தவர் திரு. சதாசிவம் ஆமோதித்தார்.

இச் சமயம் 6ம் வட்டார அங்கத்கவர் திரு. இமானுவேல் இப்பிரேரணையைப்பற்றி முன்னறிவித்தல் கொடுக்கப்படாததால் தாங்கள் விவாதிக்கத் தயாராக இல்லையென்று கூறினர். இதை 5ம் வட்டார அங்கத்தவர் திரு. சிவனடியார் ஆமோதித்தார், ஆனல் தலைவர் அதை நிராகரித்தார்.

திரு. கனகசபை தமது பிரேரணையை வாக்கெடுப்புக்கு விடும்படி தலைவரைக் கேட்டார். அப்பொழுது 1ம் வட்டாரப் பிரதிநிதி திரு. கார்த்திகேசு பிரேரணையை வாக்கெடுப்புக்கு விடமுன் உள்ளூராட்சி ஆணையாளரிடம் இருந்துவந்த கடிதம்படி சபையின் ஆறுவட்டாரங்களை ஏழாகப் பிரிப்பதா இல்லையா என்பதுபற்றி விவாதிக்கவேண்டுமெனத் தலைவரைக் கேட்டார். உடனே திரு. கனகசபை தனது பிரேரணையை வாக்கெடுப்புக்கு விடவேண்டுமெனதிரும்பவும் தலைவரைக் கேட்டார். தலைவர் பிரேரணையை வாக்கெடுப்புக்குவிட முயற்சித்தபோது திரு. சிவனடியார் இப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடுவதற்கு உபவிதிகள் இடம்கொடுக்கவில்லையென்றும், மேலும் இப் பிரேரணை சம்பந்தமாக இரு மாதங்களுக்குமுன் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளதால் ஆறு மாதங்களுக்குமுன் இப் பிரேரணையைத் திருப்பிஎடுக்க முடியாதெனவும் கூறினர். ஆனல் தலைவர் வாக்கெடுப்புக்குவிட்டார். இந்நிலையில் இருவருக்கும் பலத்தவாக்குவாதம் ஏற்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாகத்தலைவரும், திரு. சதாசிவமும், திரு. கனகசபையும் வாக்களித்தார்கள். இதை ஆட்சேபித்து மற்ற மூன்று அங்கத்தவர்களும் கூட்டத்தை விட்டுவெளியேறினர்கள். தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## முற்றிலும் தவருன செய்தி

கொழும்பு, சனி

இலங்கையின் முன்னுள் கவர்னர் ஜெனரல் சேர். ஒலிவர் குணத்திலகா வெளி நாட்டுக்குப் 10 லட்சத்துக்கு மேல் எடுத்துச்செல்ல அரசாங்கம் அனுமதி அளித்துள்ளதென்று வெளிவந்த செய்தி (ஈழநாடு அல்ல) முற்றிலும் தவருனதென அரசாங்கம் ஒரு அறிக்கை மூலம் இன்றுமாலை தெரிவித்தது.

குத்தகைக்குக் காணி

கிளிநொச்சியில் கண்டி ரோட்டில் உள்ள உபதபாற் கந்தோருக்கும், ரோமன் கத்தோலிக்க ஆலயத்திற்கும் இடையிலுள்ள "கிளிநொச்சிக் காடு" என்னும் காணியை மில், விறகுகாலை, கராச் போன்றவையைப் வைத்து நடாத்தக் குத்தகைக்குக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு: சி. சொக்கநாதன், மல்லாகம்.

# நாம் இந்நாட்டின் இராஜ துரோகிகளல்ல

## அர்ச். மைக்கல் பரிசளிப்பு விழாவில் கண்டி மேற்றிராணியார் பேச்சு

மட்டக்களப்பு, சனி

'கத்தோலிக்கர்களாகிய நாங்கள் இந்நாட்டின் இராஜ துரோகிகளல்ல. நாம் வாழும் இந்த "லங்கா" எங்களுடையது என்ற உணர்ச்சி எங்களுக்கும் இருக்கிறது. 'லங்கா' வுக்கு ஆபத்து ஏற்படும் பொழுது, தேசிய உணர்ச்சியால் எங்கள் இரத்தமும் கொதிக்கத்தான் செய்கிறது. இந்நாட்டின் சட்ட திட்டங்களை நாம் கடைப்பிடிக்கக் கடமைப் பட்டுள்ளோம். ஆனல் நேர்மையற்றவைகளை எதிர்க்க வேண்டியதும் நம் கடமையாகும்."

மட்டக்களப்பு அர்ச் மைககல் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவில்பிரதம அதிதியாகக்கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய கண்டிமேற்றிராணியார்: மேன்மைதங்கிய டாக்டர். லியோநாயக்கார மேற்கண்டவாறு கூறினர்.

வண. பிதா. பி. எச் மில்லர் எஸ். ஜே. மேற்றிராணியாரையும் மற்றும் அனைவரையும்வரவேற்றுப் பேசினர். கல்லூரி அதிபர். வண. பிதா. வி. ஞானப்பிரகாசம்; எஸ். ஜே. யினர் கல்லூரி வருடாந்த அறிக்கை வாசிக்கப்பட்டது. கண்டி மேற்றிராணியார் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது "தந்தையின் சொற்படி நடக்கவண்டியது மகனின் கடமை. இதைத்தான் எங்களுடைய மதமும் போதிக்கின்றது. ஆசிரியர்களும் இதைத்தான் மாணவர்களுக்கு இதைத்தான் போதிக்கிருர்கள். ஆனல் சில சமயங்களில் மகன் தனது நியாயமான உரிமைக்காக தந்தையை எதிர்க்க வேண்டிய நிலை ஏற்படக்கூடும். அந்தச் சமயத்தில் மகன் தன்உரிமைக்காக தந்தையைஎதிர்ப்பதில்தவறு இருப்பதாகக் கூறுவதற்கில்லை இந்த நிலைதான் தற்போது நமக்கும் ஏற்பட்டுள்ளது."

மாணவர்களுக்கான பரிசில்கள் அனைத்தும் கண்டி மேற்றிராணியாரால் வழங்கப்பட்டது. பரிசளிப்பு வைபவத்தின் பின் தமிழ், ஆங்கில நாடகங்களும் இசை நிகழ்ச்சிகளும் அடங்கிய கதம்ப நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

---

பொலநறுவை, வெள்ளி.

இங்கிரியா கொடையில் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை ஒன்றை காணிவிவசாய நீர்ப்பாசன மந்திரி திரு. ஸி. பி. டி, சில்வா இம்மாதம் 12ம் திகதி ஆரம்பித்துவைப்பார்.

# மகளிர் மன்றம்

## எனது சமையல் அனுபவம்

—'சத்தியா'—

மகளிர் பள்ளிக்கூடங்கள்பல வற்றில் இன்று குடும்பக்கலை, சமையல்கலை ஆகிய பாடங்கள் போதிக்கப்பட்டு வருகின்றன. சில மாணவிகள் இக்கலைகளை வெகுஆவத்துடன பயில்வதோடு மிகவும் திறமையுடையவர்களாகவும் ஆகிறார்கள். ஆனால் சமையல்வேலைககு வீட்டில் சாக்குப்போடும் சில மாணவிகள் பள்ளிக்கூடத்தில் நடைபெறும் சமையல் வகுப்புகளுக்கும் கள்ளம் போடுவதுண்டு. கள்ளம் போடுவதில் கைதேர்ந்த ஒரு சில மாணவிகள் பின்னர் தம் குடும்பவாழ்க்கை காலங்களில் சமையல போடுவதில் மிகவும் கைதேர்ந்தவர்களாக மாறுவதுமுண்டு.

வீட்டிலே சமையல்வேலைச்கு எப்பொழுதுமே பின்னிற்கும் நான், என்ன காரணத்தைக் கொண்டோ பள்ளிக்கூட சமையல் வகுப்பில் அதிக அக்கறையும் திறமையும் காட்டிவந்தேன். அதன் காரணமாக இன்று சமையல் கலையில் நன்கு கைதேர்ந்தவளும் ஆகிவிட்டேன். எனது சமையல் ஆசிரியைக்கு என் நன்றிகள் அத்தனையும் சேரும். இன்று கைதேர்ந்த சமையல்காரியாக இருக்கும் நான் அன்றொரு நாள் என் அம்மாவின் சமையல் வேலையை ஏற்றுச் சங்கடப்பட்ட அனுபவத்தைக் கூறுகிறேன், படித்துப்பாருங்கள்.

அம்மாவுக்கு சுகவீனம்ஏற்பட்டதால் அதிகாலையிலேயே டாக்டரிடம் செல்லவேண்டியிருந்தது. சுகவீனம் சிறிது அதிகமாகையால் ஆஸ்பத்திரியிலேயே தங்கவேண்டியிருந்தது. நான்தான் வீட்டிலே மூத்தபிள்ளை. இளையவர்கள் பள்ளிக்கூடம் போக, நானே நின்று அன்றைய தினம் சமையல் போடவேண்டியதாயிற்று. அப்பபா, எத்தனை சங்கடப்பட்டேன். வீட்டோடு இருந்து சமையல் போடுவதற்கும் எத்தனை அவதானமும் பொறுமையும் வேண்டும என்பதை அன்றுதான் என்னால் உணர முடிந்தது. ஆனால் சமையலைப் பொறுத்தவரை சுத்த முட்டாளாகவே இருந்தேன் என்பதை நீங்களே உணருவீர்கள்.

காலை உணவையும் நானே ஆக்கவேண்டி இருந்தது. காலையில் பிட்டுக்குததான் ஆயத்தங்கள் இருநதன. சமையல் பொறுப்பை முழுவதும் ஏற்றுக்கொண்டதில் எனக்கு ஒரு உஷார். விரைவாகப் பாத்திரங்களை மினுக்கிக் கழுவி ஆயத்தங்களைச் செய்தேன் சிறிது தயக்கத்துடன்தான் ஆரமபித்தேன். என்றாலும் ஒருவாறு பதமாக மாவைக் குழைத்துவிட்டேன். குழலில்தான் பிட்டு அவிக்க ஆயத்தங்கள் செய்தேன். குழலையும் நன்ருக நனைத்து அடுப்பை மூட்டி உலையில் வைத்துவிட்டேன். தேங்காயையும் பிட்டுமாவையும் வெகுஅவதானமாக மாறி மாறிக் குழலில் போட்டேன். குழைத்த மாவில் அரைவாசிக்கு மேல் தீர்ந்து விட்டது தேங்காய்ப்பூவும் அவ்வாறுதான். ஆனால் குழல் நிரம்பியதாகக் காணவில்லை. பெரிய குழல்தான்! என்றாலும் ...... ஏனோ நிரம்பவில்லை. குழலில் போடுவதை நிறுத்திவிட்டு ஆவிக்கும் புகைக்கும் ஊடாக எட்டிப்பார்ததேன். ஒன்றுமே தெரியவில்லை. குழலைத் தூக்கிப் பார்த்தேன்! சங்கதி அப்போதுதான் பிடிபட்டது. குழலில் சில்போட மறந்துவிட்டேன். போட்ட மாவும் தேங்காயும் உலையில் குழலுக்கு ஊடாகக்கொட்டிவிட்டிருந்தது. எவ்வளவு அவதானமாகக் குழைத்தமாவும் சீச்சீ ... ஒரேயொரு அவதானக் குறைவினால் வீணாகிப் போய்விட்டதே. குழலின் அளவு முன்னரே தெரிந்திருந்தாலாவது ஒரு சமயம் ஒருகுழல் மாவுதான் வீணாகியிருக்கும்!

எனக்குத் தானே அளவு தெரியவில்லையே. நல்லகாலம் அம்மா மட்டும் வீட்டில் இருந்திருந்தால் ...... தம்பி, தங்கைகள் பள்ளிக்கூடத்துக்கு வெளிக்கிட்டும் முடிந்தது. எச்பாடு பெரும் சங்கடமாகிப் போய்விட்டது. என்ன மறதி என்ன அவதானமில்லாத் தன்மை. குழலுக்குள் சில்லை மட்டும் போட்டிருந்தால் ...... ஒருவாறு குசினியில் நுழைந்த தம்பி, தங்கைகளுக்கு மறைவாசுப் பிட்டு உலையை இறக்கி வேறு உலைவைத்து மிக அவதானமாகச் சில்லைக் குழலில் போட்டு மாவை ஒருவாறு பிட்டாக்கிவிட்டேன். ஆனால் நான் பட்ட அவஸ்தை கொஞ்சமல்ல.

காலைப் போசனம் இப்படி ஒருவாறு முடிந்தது. மத்தியான உணவுமல்லவா செய்ய வேண்டும்! செய்து பழக்கமில்லாத போதும் நானே அதையும் செய்யவேண்டிநேரிட்டது. மிக்க அவதானமாக சோறுகறி சமையல் ஆரம்பித்தேன். சட்டி பானை பாததிரங்கள் கழுவிக் காய்கறிகளை வெட்டிக் கறி சமைக்க ஆரம்பித்தேன். உப்பு தூள், புளிபோட்டு ஒவ்வொரு சமயமும் சுவைபார்த்து ஒருவாறு கறிகள் சமைத்துமுடிந்தது. மணி பன்னிரண்டரை அடித்தது. அபபோது தான் பெரிய அலுவல் ஒன்று பற்றி ஞாபகம் வந்தது.

உலைவைத்து அரிசிபோட்டு விட்டல்லவா அம்மா கறி சமைக்க ஆரம்பிப்பள். வெகு விமரிசையாகக் கறி சமைக்க முனைந்ததில் முக்கிய விஷயமொன்றை மறந்துவிட்டேன். மணி 12 1/2 யாகி விட்டது. உலைவைத்து அரிசிபோட்டாகவில்லை. எத்தனை முட்டாள் தனம். இப்போது நினைத்துச் சிரிக்கிறேன். ஆனால் அப்போது அத்தனை முட்டாளாகத் தானே இருந்தேன். தம்பி தங்கையரின் மத்தியான சோறுகறி உணவு எப்படியாகியிருக்கும் என்பதை ஊகித்தறியலாம். இன்று நினைக்க வெட்கமாயும் இருக்கிறது. ஆனால் இன்று நான் சமையலில் கைதேர்ந்தவள். பள்ளிக்கூடத்தில் சமையல் கலைப் பரிசுகூட வாங்கியிருக்கிறேன்.

என்னுடைய இன்னுமொரு முட்டாள்தனத்தையும் இங்கு கூறவேண்டும். அன்று நான் சமைத்தேன் அல்லவா? நான் ஆக்கிய கறிகளில் ஒன்றைக் காணவில்லை ......? யோசிக்காதீர்கள். அன்று கீரைக்கறி போட்டிருந்தேன். மண்சட்டியில் தான் கீரைகடையவேண்டும் என அம்மா கூறியது ஞாபகம். கீரையை வேகவைத்து இறக்கிச் சட்டியிலேயே அகப்பையால் கடைய ஆரம்பித்தேன். இடித்து இடித்துத்தானே கீரை கடைவார்கள். நானும் அவ்வாறு தான் செய்தேன். ஆனல் சிறிது நேரத்தில் சட்டியில் இருந்த கீரையைக் காணவில்லை. சட்டியின் அடியில் திருகணை போட்டிருந்தது. நடுச்சட்டி ஒட்டையாகிக் கீரை கீழே சென்றுவிட்டதை நான் காணவில்லை. எங்கோ பார்த்தபடி சட்டியின் ஒரு பக்கத்தில் அகப்பையால் தட்டிக்கொண்டிருந்தேன். எத்தனை வேகம்! எததனை அவதானம்! சமையற் கலைக்குததான் எத்தனை அவதனமும் சாதுரியமும் தேவைப்படுகிறதென்பதை என்னுடைய அன்றைய முட்டாள் அனுபவம் எடுத்துக் காட்டுகிறதல்லவா?



இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் ரோயல் சுழகங்களின் அங்கத்தவர் லிஸ்டோவல் பிரபு லண்டன் கலைக் கண்காட்சியை திறந்து வைத்தார். கிழக்கத்திய பண்பாடுபற்றிய சர்வதேச விரிவுரையாளர் திருமதி மோகான்சிஸ் மூன்சிங்குடன் உரையாடுகிருர். இக்கண்காட்சியில் தாகூரின் உருவச்சிலை வைக்கப்பட்டிருந்தது.

## வணங்குதற்குரிய பராசக்தி

பெண்மையில் நான்கு சக்திகள் உள்ளன. மங்கல மலர்முகத்துடன் அழகின்பப் புன்னகையுடன், இல்லறத் திருவாக விளங்கும் இலக்குமி சக்தி. மாசற்ற இளம்பொலிவுடன் தெள்ளறிவாற் கலைகளைவளர்க்கும் சரசுவதி சக்தி. வீரக்கனல் வடிவுடன் இடர்களையும், தீமைகளையும், அரக்கக்கொடுமைகளையும், அடிமைச்சிறையையும் தகர்த்தெறிந்து விடுதலை முழக்கும் காளிசக்தி. அறிவும், அன்பும், அமைதியும ஒளியும் சேர்ந்து வாழ்வைப் பேரின்பசோதிவனமாக்கும் மகேஸ்வரி சக்தி. இந்த நான்கு சக்திகளும் செறிந்திலங்கினல் பெண்மை வணங்குதற்குரிய பராசக்திமயமாகும்.

—சுத்தானந்தபாரதியார்

அழகு மேடை

## கூந்தல்

—"ஐரீன் ரஞ்சிதம்"—

[சென்ற இதழில் நேயர்களுக்கு கண்களையும் புருவங்களையும் அழகு செய்யும் நவீன முறைகளையும் நம்மூதாதையர்கள் கையாண்ட முறைகளையும் விளக்கியிருந்தேன். இந்த இதழில் கூந்தலழகுபற்றி உங்களுக்குக் கூறுகிறேன்.]

கண்கள் எப்படி ஒரு பெண்ணின் அழகை எடுத்துக் காட்டுகின்றதோ அதே போலத்தான் கூந்தலும். கூந்தல் மிக அடர்த்தியாகவும் நீண்டும் இருதால் அழகு குறைந்த பெண்ணும் சற்று அழகாகக் காணப்படுவாள். நம் நாட்டவர்களுக்கு மிகவும் கறுத்து அடர்ந்த கூந்தலே அழகு சேர்க்கும். சில பெண்களுக்கு செம்மை கலந்த கறுப்புக் கூந்தல் இருப்பதை நாம் காண்கிறோம். அவை எவ்வளவு நீண்டு அடர்த்தியாக இருந்தாலும் அழகாகக் காணப்படா. மேல்நாட்டுப் பெண்களுக்கு செம்மையான கூந்தல் அழகாக இருக்கும். ஏன் தெரியுமா? அவர்கள பழுப்புக் கண்களுக்கு செம்மை செறிந்த கூந்தல "மச்" ஆக இருக்கும். எம் போன்ற கறுத்தக் கண் உடையவர்களுக்கு கறுத்த கூந்தலே அழகைக் கொடுக்கும்.

கறுத்து அடர்ந்த நீண்ட கூந்தலுடன் சற்று நெளிகளும் காணபபட்டால் அழகுக்குக் குறைவேது. அதுதான் புலவர்கள் பெண்களின் கூந்தலைக் கடல் அலைக்கும், மயிலின் தோகைக்கும், கார்மேகத்துக்கும் ஒப்பிட்டுக் கூறியுள்ளார்கள் போலும். அலை அலையாக நெளிந்து புரளும கேசத்தை உள்ள பெண்களைக் காண நாமே பெருமூச்சுடன் நம் குட்டையான கூந்தலைப் பார்த்துக் கொள்கிறோம். இல்லையா?

இப்படி யெல்லாம் பார்ப்பவர் பெருமைப்படக் கூடிய கூந்தலையடைய நாமெல்லாம் பூர்வஜன்ம புண்ணியம் செய்திருக்கவேண்டியதில்லை. நாம் நம் கூந்தலை மிகவும் கவனமாகவும் அக்கறையுடனும் வைத்திருக்க வேண்டும். பல பெண்கள் தம் கூந்தலை வளர பல சாதனங்களைக் கையாளுகிறார்கள். சில தைலங்களைத் தேய்த்து அதனால் உள்ள கூந்தலும் உதிர்ந்து போகும்படி செய்து விடுகிறார்கள். அது மட்டுமா? கூந்தல் உதிர்ந்த குறையை மறைக்க கடைகளில் விற்கும் சவுரிகளை உபயோகிக்கிறார்கள். சொந்தக் கூந்தலைவிட இவற்றைப் பாவிப்பதில் பல் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். சரிவரச் சவுரி பொருந்தப்படாதிருப்பதால் சவுரியின் அடிப்பாகம் வெளியே தெரியும்படி பின்னி விடுகிறார்கள். அல்லது கழன்று கீழேவிழக் கூடியதாகக்கூட சில சகோதரிகள் பொருத்தி கடைசியில் கீழேவிழுந்த சவுரியை எடுத்து மறைக்க எவ்வளவோ கஷ்டப்பட்ட பெண்மணிகளையும் கண்டுள்ளேன். சகோதரிகளே ஏன் இந்த வீண் வம்பெல்லாம்எமக்கு. பேசாமல் உள்ள கூந்தலைச் சரிவரக் கவனித்து அக்கூந்தலைக் கொண்டு அழகாகப் பின்னிவிடுங்கள், கொண்டைபோடுவோர் சவுரி பாவிப்பதில் அவ்வளவு சிரமம் இருப்பதில்லை. என்றாலும் தன் சொந்தக் கூந்தல் போல் வருமா? நம் கூந்தலை உதிர்வதினின்றும் பாதுகாத்து அடர்த்தியாகவும் கருமையாகவும் நீண்டு வளரச் செய்ய சுலபமான முறையைக் கூறுகிறேன். பின்பற்றிச் சகோதரிகள் பயனடையவும்.

கூந்தலை காலையில் தினமும் சிறிது நேரம் காற்று வீசும் இடத்தில் நின்று நன்ருகப் பிரித்துவிடவும். அப்போ தலையிலுள்ள வியர்வை காய்ந்துவிடும் பின் நீங்கள் வழக்கமாக உபயோகிக்கும் எண்ணையை (முக்கியமாக தேங்காய் எண்ணையாக இருப்பது நல்லது) தலையில் நன்ருகத் தேய்க்கவும். கூந்தலுக்கும் தேய்க்கவும். பின் கூந்தலைத் தூக்கி முடியவேண்டும். ஸ்நானம் முதலியவை முடிந்தபின் கூந்தலை அவிழ்த்து சீப்பினல் சிக்கு இல்லாமல் வாரவேண்டும். தினமும் இப்படிச் செய்வதால் கூந்தல் வளர இடமுண்டு.

பிரதிவாரமும் எண்ணெய் ஸ்நானம் செய்வது மிகமுக்கியம் முடிந்தால் வாரம் இருமுறை எண்ணெய் ஸ்நானம் செய்வது நன்று. தலையில் அழுக்குப்படிவதால் கூந்தல் வளர்ச்சிக்கு ஆதாரமில்லாது போகும். அது மட்டுமா? பேன் உற்பத்திக்கும் ஏதுவாகும். சீயாக்காய்ப் பொடி தேய்த்து ஸ்நானம் செய்வது நன்று. கடைகளில் பொடி வாங்குவதைவிட நாமே செய்து உபயோகித்தால் நல்லது. பச்சையாக எலுமிச்சம் பழத்தைத் தலையில் நன்ருகத் தேய்த்து ஸ்நானம் செய்தால் தலையில் 'பொடுகு' முதலியன மறைந்து கூந்தல் நன்ருக வளரும். 'பொடுகு' தலையில் இருக்குமாயின் மயிர் உதிரும். வெந்தயத்தை நீரில் ஊறவைத்து நன்ருக அரைத்து தலையில் தேய்த்து குளிர் நீரில் ஸ்நானம் செய்தால் கூந்தல் வளர்ச்சிக்கு நன்று.

தலைக்கு நாம் உபயோகிக்கும் எண்ணெய் வகையை நாம் நினைத்த பொழுதெல்லாம் மாற்றக்கூடாது. ஒரே எண்ணையையே எப்பொழுதும் பாவிக்க வேண்டும். கூந்தல் வளர்ச்சிக்கு மிக உபயோகமான, இலகுவில் செய்யக் கூடிய ஒரு தைலம் ஒன்றைத் தயாரிக்கும் முறையையும் வயதுக்கேற்ற கூந்தல் அலங்காரம் பற்றியும் அடுதத அழகு மேடையில் தருகின்றேன்.


தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்
33
303 ஊதுபத்திகளை
3003
உபயோகியுங்கள்.
யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.
தயாரிப்பவர்கள்:
எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்-2.
சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ.
குருநெகல.

# சிறுவர் பூங்கா

## குணமும் செல்வமும்

... பாலன் ....

குணம் தன் பெற்ருேருக்கு ஒரே மகன். அவன் அம்மா அவனிடம் உயிராக இருந்தாள். அவன் ஆசைப்பட்டதெல்லாம் வாங்கிக் கொடுப்பாள். விதம்விதமான இனிப்புப்பண்டங்கள் செய்துகொடுப்பாள். குணம் தன் பெயருக்கேற்ப நல்ல குணமுள்ளவனுக இருந்தான். தாயிடம் கண்டதெல்லாம் கேட்டுத் தொல்லை கொடுக்க மாட்டான்.

அவன் ஒருநாள் பள்ளிக்கூடத்துச்குப் போயிருந்தான். அங்கு இன்னொரு பையன் கொழுக்கட்டை சாப்பிடுவதைக் கண்டுவிட்டான். அவனுக்கு கொழுக்கட்டை சாப்பிட ஆசையாக இருந்தது. அவனிடம் கேட்கவும் வெட்கமாக இருந்தது. பள்ளிக்கூடம் விட்டதும் வீட்டுக்கு ஓடிவந்தான். புத்தகங்களை மேசையில் வைத்துவிட்டு, தாயிடம் ஓடினுன்.

"அம்மா!"

"என்ன தம்பி?"

"எனக்குக் கொழுக்கட்டை அவித்துத் தருவாயா?"

"ஓ! காலையில் அவித்துத் தருகிறேன" என்று அவள் கூறினுள். அவனுக்கு பெரிய சந்தோஷம். விளையாடுவதற்கு ஓடினுன்.

அவனுக்கு செல்வம் என்ற நண்பன் இருக்கிருன். இருவரும் நல்ல நண்பர்கள். எப்பொழுதும் இருவரும் ஒன்ருக விளையாடுவார்கள். ஒரு நாளும் சண்டையே பிடிக்க மாட்டார்கள். குணம் தன் தாயார் கொழுக்கட்டை அவிக்கப்போவதைச் செல்வத்திடம் சொன்னுன். அவனும் மிகச் சந்தோஷப்பட்டான். ஏனென்ருல் குணம் செல்வத்துக்கும் கொழுககட்டை கொடுப்பான்.

அடுத்த நாள் காலை, குணத்தின் தாயார் கொழுக்கட்டை அவித்தாள். குணத்துக்கு கொழுக்கட்டையைக் கண்டதும் சந்தோஷம் அதிகரித்தது. ஓடிப்போய்த் தாயின் பக்கத்தில் இருந்து சாப்பிடத் தொடங்கினுன். அவனுக்குச் செல்வத்தின் நினைப்பு வந்தது. உடனே தாயிடம் பத்துக் கொழுக்கட்டை வாங்கினுன். இரண்டு சட்டைப் பைக்குளும் போட்டான். தானும் நல்லாக வயிறுவீங்கச் சாப்பிட்டான். சாப்பிட்டு முடிந்ததும் செல்வத்தின் வீட்டுக்கு ஓடினுன். செல்வத்தை இரகசியமாக அழைத்தான். அவன் குணத்தைக் கண்டதும் ஓடிவந்தான். இருவரும் ஒவ்வொரு நாளும் விளையாடும் இடத்திற்கு வந்தனர். வந்து ஒரு மரத்தின்கீழ் இருந்தனர். குணம் பைக்குள் இருந்து கொழுக்கட்டையை ஒவ்வொன்ருக எடுத்துச் செல்வத்திடம் கொடுததான்.

"குணம், நீ சாப்பிட்டியா?"

"ஓ, நல்லாச் சாப்பிட்டேன்."

"பொய் சொல்கிருய்; நீ சாப்பிடவில்லை."

"நான் பொய் சொல்லுவேனு? இங்கே வயிற்றைப் பார்."

செல்வத்துக்கு குணத்தின் வயிற்றைப் பார்த்ததும் சிரிப்பு வந்தது. அவன் வயிறு முட்டி போல அருந்தது.

"குணம் எத்தனை கொழுக்கட்டை சாப்பிட்டாய்?"

"எட்டுக் கொழுக்கட்டையடா?"

குணம் கூறிவிட்டுச் சிரித்தான். செல்வமும் சிரித்தான். செல்வத்துக்கு தான் தனியாகச் சாப்பிடுவது சரியில்லை எனப் பட்டது. குணத்தைப் பார்த்தான்.

"குணம், நீயும் சாப்பிடேன்" என்ருன்.

"வேண்டாம், எனக்கு வயிறு நிரம்பிவிட்டது" என்ருன் குணம்.

"ஒன்று சாப்பிடு" என்று பிடிவாதம் செய்தான் செல்வம்.

"எனக்கு வேண்டாமடா" என்ருன் குணம்.

"நீ சாப்பிடாவிட்டால் நானும் சாப்பிட மாட்டேன்" என்று கூறினுன் செல்வம்.

உடனே குணம் ஒன்றும் பேசவில்லை. செல்வம்கொடுத்த கொழுக்கட்டையை வாங்கிச் சாப்பிட்டான். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டனர். கொழுக்கட்டை முழுவதும் சாப்பிட்டு முடிந்தது.

"குணம், நான் நாளைக்கு ஒரு சாமான் தருகிறேன்."

"என்ன சாமான், செல்வம்? சொல்லமாட்டாயா?"

"பனங்காய்ப் பணிகாரம்" என்று கூறிவிட்டுச் சிரித்தான் செல்வம்.

"உனக்கு எப்படிக் கிடைக்கும்?"

'அம்மாநாளைக்குச் சுடுவாள்.'

"எனக்கு நிறையத் தருவாயா?"

"ஓ, எனக்கில்லாவிட்டாலும் உனக்குத் தருவேன்."

"இல்லை, இல்லை. உனக்கில்லாவிட்டால் எனக்குவேண்டாம்" என்று கூறினுன் குணம்.

"இல்லை, குணம். இருவரும் சாப்பிடுவோம், என்ன?"

"ஓ! இருவருந்தான் சாப்பிடவேணும்."

"சரி வா, போவோம். பள்ளிக்கூடத்துக்கு நேரமாச்சு" என்ருன் செல்வம்.

பள்ளிக்கூடம் என்றதும் குணம் துள்ளி எழுப்பினுன் "வா, கெதியாக ஓடுவோம்" என்று கூறினுன். இருவரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டு ஓடினுர்கள்.

### தேவசகாயம்

**ஆசிரியர்:** (வகுப்பு மாணவர்களை நோக்கி, மனிதருக்கு உடலில் ஏற்படும் ஐந்து வகைக்காயங்களில் நான்கு படித்தாகிவிட்டது. ஐந்தாவது காயம் என்ன என்று சொல்லுங்கள் பார்க்கலாம.

**ஒரு மாணவன்:** தேவசகாயம், சேர்.

—பாலன், யாழ்ப்பாணம்.

## சைக்கிள் சம்பாஷணை

(த. பத்மநாதன்)

(பாத்திரங்கள்: மகன் மோகன், அப்பா, அம்மா.)

(இடம்: வீடு நேரம்: மாலை)

மோகன்: அப்பா, அப்பா இனி என்னுல் பள்ளிக்கூடத்திற்கு இந்த வெய்யிலில் நடந்து போகமுடியாது. ஒவ்வொரு நாளும் இரணடு சட்டை நடந்து எனக்கு கால் வலிக்குது.

அப்பா: அதற்கு இப்ப என்னடா செய்யச்சொல்ருய்? தூக்கிக் கொண்டு போய் விடச் சொல்கிருயா?

மோகன்: இல்லை, அப்பா. எனக்கொருசைக்கிள் வாங்கித் தாருங்கள்.

அப்பா: தம்பிக்கு சைக்கிள் தான் தேவையோ? நாங்கள் எல்லாம் அந்தநாட்களில் நாலு கட்டை நடந்துபோய் படித்து விட்டுவரவில்லையா? பக்கத்தில் இருக்கிற பள்ளிக்கூடத்திற்குப் போக சைக்கிள் வேணுமோ?

அம்மா: ஏன், அவனுக்கு கால் வலிக்காதா? பாவம், மத்தியானம் காய்ந்து போன இடியப்பத்தோடு எத்தனை நாளைக்கு மோகன் கிடப்பது? நடந்து, நடந்து பிள்ளைமெலிந்து போனுன். அவனுக்கு ஒரு சைக்கிள் வாங்கிக்கொடுத்தால் மத்தியானம் வந்து சாப்பிட்டுவிட்டுப் போவான்.

அப்பா: (அம்மாவைப் பார்த்து) நீ வள, வள என்று கத்தாமல் போய் உனது வேலையைப்பார். எனக்குத் தெரியும் என் பிள்ளைக்குச் சைக்கிள் வாங்கிக் கொடுக்க. நீ சொல்லித்தானு நான் சைக்கிள் வாங்கிக் கொடுப்பது? எடே, தம்பி! நான் உனக்குச் சைக்கிள் வாங்கித் தருகின்றேன். சைக்கிள் வாங்கித்தந்தால் பக்குவமாகப் பாவிக்க வேணும் தெரியுமா? சைக்கிள் ஓடும்போது தெருவில் ஆட்களைப் பார்த்து ஓட வேண்டும். கார், லொறி......

மோகன்: (சந்தோஷ மேலீட்டுடன்) சரி, அப்பா. எனக்கு ஒரு 'றேஸிங்' சைக்கிள் வாங்கித் தாருங்கள்.

அம்மா: அவன் சொல்லுகிற சைக்கிள் வாங்கிக் கொடுக்க வேண்டாம். மற்றச் சைக்கிள் தான் வாங்குங்கள். (உள்ளதும் கெட்டுவிடுமென்ற பயத்தில் மோகனின் விழிகள் உருண்டன.)

அப்பா: மோகன், வா, சைக்கின் கடைக்குப் போவோம். வாங்குமுன் சைக்கிளை நீயும் பார். வாங்கிய பிறகு நின்று குழப்படி செய்யாதே.......

(மோகன் இப்போது ஒரு புது 'றலி' சைக்கிளில் திரிகிருன். அது அவன் கேட்ட 'றேஸிங்' சைக்கின் அல்ல)

## கடற்காட்சி

ஒருநாள் மாலை நான் எனது தந்தையுடன் கடற்கரைக்கு உலாவச் சென்றேன். அங்கே இயற்கை அன்னை புரிந்துள்ள சாகஸங்களைக்கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தேன். வெள்ளைக் கம்பளத்தை விரித்தது போலிருந்தது மணற்கரை. இந்த மணற்கரையில் வயோதிபரும் குழந்தைகளும் பற்பல நிறங்களில் ஆடைகள் அணிந் கொண்டு ஓடிப்பிடித்தும், விளையாடியும், பத்திரிகை படித்துக் கொண்டுமிருந்தனர். சில குழந்தைகள் மணற்பரப்பில் ஓடிவிளையாடும் நண்டுகளைப் பிடிப்பதில் முனைந்துநின்றனர். வேறு சிலர் கூடகோபுரங்களையும் மாடமாளிகைகளையும் மணலிலே கட்டமுயன்று கொண்டிருந்தனர். வேறுசிலர் அழகான பட்டங்களை விட்டுக் கொண்டிருந்தனர். மற்றும் பற்பல தின்பண்டங்களையும் குடிவகைகளையும் விற்க முயன்று கொண்டிருந்த வியாபாரிகளைச் சுற்றி ஒரு சிறுவர் குழாம் சென்று கொண்டிருந்தது.

கடற்கரையை எதிர்த்தாற்போல், கண்ணுக் கெட்டிய தூரம் வரை, கடல் பரந்து கிடந்தது. பச்சையும், நீலமும், வெள்ளையும் கலந்த அக்கடலைப் பார்த்துப் பூரித்துப் போனேன். கொந்தளித்துக் கொண்டிருந்த கடலின் மேலே அமைதியாக விரைந்து கொண்டிருந்தன மரக்கலங்களும், வள்ளங்களும்.

இவ்வழகிய காட்சிக்குப் பின் காட்சியாகத் துலங்கியது வானம் பச்சையும், மஞ்சளும், சிவப்பும், நீலமுமாக தகதகத்துக் கொண்டிருந்தது வனம். அவற்றினூடு அசைந்து சென்ற புகைமூட்டம் போன்ற முகிற்கூடடம். இவ்வழகிற்கும் மேலாக் தகதகவென்று கொல்லன் பட்டறையில் காணப்படும் இரும்பு போல மினுங்கிக் கொண்டிருந்தது செக்கெச்செவேலென்ற சூரியனின் கதிர்கள். தாரகைகள் சூரியனுடன் போட்டியிடடன. ஆமாம், நட்சத்திரங்கள் கண்சிமிட்டன. அன்று கடற்கரையில் நான் கண்ட காட்சியை என்னுல் வர்ணிக்கமுடியாது. அடேயப்பா இப்பேர்ப்பட்ட அழகிய காட்சியைக் காணக் கண் ஆயிரம் வேண்டாமா?

நேரமாகியதும் என் அப்பா வீடு போவதற்கு என்னை அழைத்தார். என் செய்வது? கவலையுடன் அவர் பின் தொடர்ந்தேன்.

—சுசீலா நடராஜா

## நாய்க்குட்டி

"வன்னியூர்க் கவிராயர்"

வெள்ளைநிற நாய்க்குட்டி
வீட்டைக் காக்கும் நாய்க்குட்டி
துள்ளி யோடும் நாய்க்குட்டி
சோம்பல் இல்லா நாய்க்குட்டி

'வள் வள்' ளென்று குரைத்திடும்
வாலை ஆட்டிச் சிரித்திடும்
கள்ளங் கபட மின்றியே
கலந்து விளை யாடிடும்.

வேற்றிடங்கள் சென்று யாம்
வீட்டுக்கு வந் திடுகையில்
காற்ருய் யோடி வந்து எம்
கால்கள் நக்கி மகிழ்ந்திடும்

"நன்றிக்கடன் காட்டிடல்
நாநிலத்தெம் பண்பதாம்;
என்றும் மற வோமிதை!"
என்பதுபோற் குழைந்திடும்.

★

## ஆட்டக் குதிரை

— திசைதேவரஞ்சனி —

சின்னச் சின்னக் குதிரை இது சிங்காரக் குதிரை
சின்ன மாமா வாங்கித் தந்த ஒய்யாரக் குதிரை

கண்ணுமுண்டு, காலுமுண்டு கடந்துசெல்லாது
கட்டும் கடிவாளமில்லை ஆட்டம் நில்லாது

புல்லும் கொள்ளும் தின்றிடாது பசியுமில்லையே
போர் வீரன் போல் சென்றிடுவேன் பயமு
[மில்லையே

வில்லின் மேலே ஆடிவரும் வீரக் குட்டியது
வேகமாக ஓடினுலும் வெளியில் செல்லாது

ஆடிப்பாடி அம்மா அப்பா அழைக்கும்போது
[நான்
ஆனந்தமாய் ஏறிக்கொள்ளும் ஆட்டக்
[குதிரையே.

### ஒரு சந்தேகம்

**ஆசிரியர்:** (தன்மாணவர்களைப் பார்த்து) உங்களுக்குச் சந்தேகமான கேள்விகள் ஏதும் இருந்தால், பயமில்லாமல் கேட்கலாம்.

**ஒரு மாணவன்:** (எழுந்து) சேர், நீங்கள் ஏன் அடிக்கடி நித்திரை தூங்குகினறீர்கள்?

—பாலன், யாழ்ப்பாணம்.

# கலை அரங்கம்

## கலைவாயிலாக உலகம் ஒற்றுமை காணவேண்டும்

— சிவாஜி —

"தங்கள் நாட்டுக் கலைத் துறை முன்னேற்றத்தை பிற நாட்டுக் கலைஞர்கள் அறிய வேண்டுமென்ற ஆசையோடு, வெளிநாட்டு கலைஞர்கள் வாயிலாக அவரவர்களின் நாட்டுக கலைநுணுக்கத்தையும் பெருமையையும் அறிந்து அதன் மூலம் அகில உலக கலாசாரத்தின் வழியாக ஓரளவு ஒற்றுமைப்படுத்த வழிகாண அமெரிக்கர்கள் முற்படலாம் என்று நம்புவதாக நடிகர்திலகம் சிவாஜி கணேசன் கூறினர்.

அமைதியும் சமாதானமும் ஒற்றுமையும் காண வழியற்றிருக்கும் உலகம் கலைவாயிலாக அந்த உன்னத நிலையை அடைந்துவிட வேண்டும் என்பதே தமது ஆசை என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமீபத்தில் அமெரிக்கா செல்லவிருக்கும் சிவாஜி கணேசன் தம்முடைய அமெரிக்க பயணத்தைப்பற்றி பத்திரிகையாளர்களைச் சந்தித்து பேசினர்.

### கலைத்துறை மாணவன்

அவர் மேலும் பேசுகையில் தாம் வெறும பொழுதுபோக்கிற்காக அமெரிக்கா செல்லவில்லையென்றும் கலைத்துறை மாணவனகவே செல்வதாகவும் வலியுறுத்தினர்.

அமெரிக்க கலைஞர்களைச் சந்தித்து அவர்களிடமுள்ள கலை நுட்பங்களையும், நற்பண்புகளையும் அறிந்து வருவேன். அவைகளிற் பயன் உள்ளதை நம் நாட்டிற் பலரிடத்தும் பரிமாறுவேன். அதேபோல் நம்நாட்டின் கலையின் உயர்வுகளையும் கலைஞர்களின் சிறப்பை அவர்கள் அறிந்து பாராட்டும் அளவிற்கு எனக்குத் தெரிந்தவரை விளக்கி நம் பெருமையும் அவர்களால் நினைவுபடுத்தி வருவேன்" என்ருர் சிவாஜி.

## பிரயாண விபரம்

இம்மாதம் 15-ந் தேதி வியாழக் கிழமை மத்தியானம் சுமார் 12-30 மணி அளவில் தனி விமான மூலம் சிவாஜி கணேசன் பம்பாய் செல்வார். பம்பாயில் அன்று மாலை திரைப்பட அதிபர்களாலும், பம்பாய் தமிழ் ரசிகர்களாலும் அவருக்கு ஒரு விருந்து அளிக்கப்படும்.

அன்று இரவு ஒரு மணிக்குப் புறப்பட்டு ரோம் நகரத்தை அடைவார். 15 நாட்கள் ஐரோப்பாவில் பல நாடுகளைச் சுற்றி பார்வையிட்டு, ஏப்ரல் 4-ந் திகதி வாஷிங்டன் போய்ச் சேருவார்.

சுமார் அறுபது நாட்கள் அவர் அமெரிக்காவில் அரசாங்க விருந்தாளியாகத் தங்குவார். அமெரிக்கா அரசாங்கம் அவருடைய சுற்றுப் பயணத்திற்காக விசேஷ வசதிகளைச் செய்து தரும்.

சென்னை அமெரிக்க அலுவலகத்தைச் சேர்ந்த மிஸ்டர். கூக்ஸ், சிவாஜியுடன் விசேஷ அலுவலராக சுற்றுப்பயணம் செய்வார். சென்னை ஹோ அண்ட் கம்பெனியைச் சேர்ந்த ஸ்ரீ எம். பெருமாள் செட்டியாரும் சிவாஜி கணேசனுடன் பயணமாகிருர். அமெரிக்காவிலிருந்து திரும்புகையில் சிவாஜிகணேசன் ஜப்பான் முதலிய கிழக்கு நாடுகளில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு சென்னை திரும்புகிருர்.

சிவாஜி தாம் நடித்த படங்களிலிருந்து சில பகுதிகளை 16 மி. மி. பிலிம் சுருள்களாக தம்முடன் எடுத்துச் செல்கிருர்.

## மோகன் ஆர்ட்ஸ் விருந்து

பத்திரிகையாளர்கள் சந்திப்பிற்கு முன்பு ராஜாமணி பிக்சர்ஸ் சார்பாக மோகன் ஆர்ட்ஸ் அதிபர் ஸ்ரீ மோகன், சிவாஜி கணேசனுக்கு காலை சிற்றுண்டி விருந்து வைத்தார். அமெரிக்க தூதுவராலயத்தைச் சேர்ந்த ஸ்ரீ கூக்ஸ் தலைமைதாங்கினர்.

அழகிய தமிழில் பேசி அனைவரையும் ஆச்சர்யத்திலாழ்த்திய ஸ்ரீ கூக்ஸ் தன்னுடைய தலைமையுரையில் "எங்கள் நாட்டின் சினிமா, டெலிவிஷன் துறைகளை நேரில் கண்டு அறிய சிவாஜி கணேசனை எங்கள் நாட்டிற்கு அழைத்துள்ளோம்" என்ருர்.

தம்முடைய வரவேற்புரையில் ஸ்ரீ மோகன் நடிகர் திலகத்தின் பிரயாணம் சீரோடும், சிறப்போடும் அமையவேண்டும் என்பதே அனைவருடைய அவா என்ருர்.

ஸ்ரீ ஏ. பி நாகராஜன் பேசுகையில், கலையுலகம் சிவாஜி அயல்நாடு செல்வது தமிழ் நாட்டின் பாக்கியம் என்ருர். தம்முடைய அயல்நாட்டு அனுபவங்களை ஆங்கங்கே குறிப்பிட்டு "90 நாட்களில் உலகத்தைச் சுற்றி" என்ற புத்தகத்தை சிவாஜிவெளியிடவேண்டும் என்று அவர் ஆசை தெரிவித்தார்.

---

## கலைஞர்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் மறந்துவிட முடியாது நாதஸ்வர மேதைகளாக இருக்கின்ற திருவாளர்கள் என். கே. பத்மநாபன், என். ஆர். கோவிந்தசாமி ஆகியோர் தாய் நாட்டுக் கலைஞர்களிடத்தில் கலை பயின்றமையாற்ருன் வித்துவான்களாக விளங்குகின்றமையை நாம் காண்கின்ருேம்.

இந்நாட்டு அரசாங்கம் இலங்கைக் கலைஞர்கள் தாம்நாடு சென்று கலைகற்கும் வாய்ப்பையும் மறுத்துள்ளது. இந்நிலையில் தாய் நாட்டுக் கலைஞர்களது வருகையும் தடைசெய்யப்படுமானல் இந்நாட்டுக் கலை குருடனுக்குச் குருடன் வழிகாட்டிய தன்மையை ஒத்து ஈற்றில் அழிந்தே போகும்.

இலங்கையின் கலை வளர்ச்சியில் ஆர்வம் உள்ளவர்கள் கலைஞர்களின் வருகையை முற்ருகத் தடுப்பதை ஒருபோதும் வரவேற்கமாட்டார்கள் என்பதையும், சிறந்த சில கலைஞர்களாவது இந்நாட்டுக்கு வந்து கலைப்பணி செய்து செல்வதையே எதிர்பார்க்கிருர்கள் என்பதையும் எடுத்துக்கூற விரும்புகிறேன் எனவும் அவரது அறிக்கை கூறுகிறது.

---

## கலைக்கண்காட்சியை

### கவர்னர் ஜெனரல் ஆரம்பித்து வைப்பார்

கொழும்பு, வெள்ளி

ஜாதிக கலா பெரமுனையின் 11-வது வருடாந்த கலைக்கண் காட்சியை கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவா நானைகலாபவனத்தில் திறந்து வைப்பார்.

இக்கலைக்காட்சி இம்மாதம் 18ந்-திகதிவரை நடைபெறும்

## கணவனை இழந்த மனைவி தற்கொலை

ஊர்காவற்றுறை, சனி.

தனது கணவன் மரணமடைந்த துயரத்தால் வாழ்க்கையை வெறுதத 'இளம் பெண்' ஒருவர் விஷமருந்தித் தற்கொலையுண்ட பரிதாற் சம்பவம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அராலியில் நிகழ்ந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 22 வயதுடைய இப்பெண் சரவணைக் கிராமத்தைச் சேர்ந்தவர் என்றும் அராலியில் விவாகம் செய்து ஆறு வருடங்களாக அங்கு வசித்து வந்தார் என்றும் தெரியவருகிறது

பிரஸ்தாப பெண்ணின் கணவனை அப்புத்துரை என்னும் நபர் சமீபகாலமாக நோய்வாய்ப்பட்டு இருந்து சென்ற சனிக்கிழமை காலமானர் என்றும், இதனல் இப்பெண் மிகுந்த கவலையடைந்து இருந்தார் என்றும் சொல்லப் படுகிறது.

அவரது பிரேதம் இவரின் பிறந்த தாயகமாகிய சரவணைக் கிராமத்திற்குக் கொண்டுவரப்பட்டு சரவணை-'புன்னம்பிட்டி' பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டது

---

## பாடசாலை தீக்கிரை

ஏழாலை தெற்கு அமெரிக்க மிஷன் பாடசாலை கடந்த 7-3-62 நள்ளிரவு தீக்கிரையாயிற்று. இது யாரோ விஷமிகளின் செயல் என்று கருதப்படுகின்றது. இதுபற்றி சுன்னுகம் பொலிசார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

---

## கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

காத்தான்குடி

மண்முனை வடகிழக்கு வட பிரிவுக் கிராமச் சபை ஓர் கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை ஆரம்பித்துள்ளது. இத்தொடரின் இறுதிப் போட்டி 11-4-62 அன்று முடிவடையும். இப்போட்டியில் பின் வரும் கோஷ்டிகள் பங்கு கொள்கின்றன. மோகன், யுனைடெட், சுத்தானந்தா, டைனமோஸ் என்பன. முதலிடம் பெறும் கோஷ்டிக்கு சலேஞ் வெற்றிக் கிண்ணம் பரிசளிக்கப்படும்.

---

## சிவராத்திரி விழா

புளியங்கூடல், சனி.

புளியங்கூடல் ஜனசமூக நிலையத்தாரால் சிவராத்திரி விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. அன்று இரவு நிலைய அங்கத்தவர்கள் வீரபாண்டிய கட்டப் பொம்மன் என்ற நாடகத்தை திறம்பட நடித்துக் காண்பித்தார்கள். இவ்விழாவிற்கு நிலையத் தலைவர் திரு. வை. வடிவேலு தலைமை வகித்து சிவராத்திரியின் மகிமை பற்றி விளக்கினர்கள். இதன் பின் சங்கீத பூஷணம் செ. சண்முகலிங்கம் பக்திப் பாடல்கள் பாடினர்.

# முகம்மது நபியின் வாழ்க்கை வரலாறு

முகம்மது நபியின் வாழ்க்கை வரலாற்றைப்பற்றி மேல் நாட்டைச் சேர்ந்த திரைப்படத் தாபனம் ஒன்று திரைப்படம் எடுக்கும் ஏற்பாட்டைக் கைவிடும்படிச் செய்ய பாகிஸ்தான் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. என்று பாகிஸ்தான் செய்தித்துறை அமைச்சர் அபிபுர் ரகிமான் இன்று கூறினர்.

"உலகம் முழுவதிலும் உள்ள முஸ்லிம்கள் மிகவும் புனிதமாகக் கருதும் அவரது வாழ்க்கை வரலாற்றைப் பயன் படுத்தி வணிக நோக்குடன் இலாபம் பெற முயற்சி செய்வதை நாங்கள் மிகவும் வெறுக்கிருேம்" என்றும் அபிபுர் ரகிமான் கூறியுள்ளார்.

## எலிஸபெத் டெய்லருக்கு விஷம்?

ரோம் நகரில் பிரமாண்டமான அளவில் தயாராகியரும் "கிளியோபாட்டா' படத்தின் பிரதான நடிகையான எலிஸபெத் டெய்லர், திடீரென்று மயக்கமுற்ற நிலையில் ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டார். ஏற்கெனவே உடல்நலமில்லாமலிருந்தும், கிளியோ பாட்டாவுக்கான இடைவிடாத படப்பிடிப்பும் இந்த மயக்கத்திக்குக் காரணமாக இருந்தாலும் கூட உணவில் விஷம் வைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் ரோமில் வலுத்திருந்தது. எலிஸபெத் தற்போது குணமடைந்து வருகிருர் என்று சமீபத்தில் வந்த செய்திகள் அறிவிக்கின்றன.

### விவாகரத்து

மாஜி 'பேலட்' நடனக்காரியும், காமெடியன் டெரி தாமஸின் மனைவியுமான இடா பட்லான்ஸ்கி விவாகரத்துக் கோரி கோர்ட்டுக்கு மனுச் செய்திருக்கிருர். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னல், டெரி தாமஸ் தமது மனைவியிடமிருந்து விவாக ரத்துக் கோரியிருந்தார். இருபது வருஷங்களுக்கு முன் திருமணமான டெரி தாமஸுக்கு இப்போது ஐம்பதாவது வயதுநடக்கிறது.


3-வது வாரம்!

பிளாஸா (வெள்ளவத்தை) கெப்பிட்டல் (கொழும்பு) விஜயா (மட்டக்களப்பு)

மனேகர், வீரப்பா, ஈ. வி. சரோஜா, ராஜசுலோசனு நடித்த




இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

மையிலன் (கொழும்பு) நவா (கும்பனித்தெரு) விஜிதா (மஸ்கேலியா)

தீவொளி (நுவரெலியா) சென்ட்ரல் (மாத்தளை) ஜெமினி (ராகலை)

மனேகர், தேவிகா, சௌகார் ஜானகி, பக்கிரிசாமி நடித்த

மாதவி

9-வது வாரம!

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, நடித்த

பாசமலர்

மனேகரா (யாழ்ப்பாணம்)

எம். ஜி. ஆர். பி. சரோஜா நடித்த

புதுமைப் பித்தன்

சனி, ஞாயிறு காலை 10-30 மணிக்கும் திங்கள் மாலை4-15க்கும் செவ்வாய் மாலை 4-15, 6-30க்கும்

Goliath & the Dragon


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.